உ
சிவமயம்

# பீமரத சாந்தி விழா

## சிறப்பு மலர்



நீர்வேலி

அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில்

பிரதம குரு

சதாசாரக்கிரியாமணி

சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள் அவர்களின்

70 ஆவது அகவைப் பூர்த்தி

★ விழா மலர் ★

1997

University of Jaffna
230.92
CAM
187288(AR; MAIN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
187288
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2097
230.92
CAM

உ
சிவமயம்

# பீமரத சாந்தி விழா

## சிறப்பு மலர்



நீர்வேலி

அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில்

பிரதம குரு

சதாசாரக்கிரியாமணி

சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள் அவர்களின்

**70 ஆவது அகவைப் பூர்த்தி**

★ விழா மலர் ★

1997

187288
UNIVERSITY OF JAFFNA LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பிரதம குரு

**சிவஸ்ரீ சாம்பசதாசிவ குருக்கள் – கௌரியம்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முகவுரை

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே."

ஈழத்திலே புராதனமான, பிரசித்திபெற்ற திருக்கோயில்கள் வரிசையிலே நீர்வேலி அருள்மிகு அரச கேசரிப் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். இக்கோயிலிலே மூன்று தசாப்தங்கட்கு மேல்திருமேனி, தீண்டி பணிசெய்து வருகின்ற சிவாச்சாரியார் சதா சாரக் கிரியாமணி சிவஸ்ரீ கா, சாம்பசதாசிவக்குருக்கள் அவர்கள். குருக்கள் தம்பதி களின் குருத்துவப் பணியில் வைரவிழாவும், ஆன்மீகப் பணியில் 70வது ஆண்டு பூர்த்தி விழாவும் புரட்டாதித் திங்கள் 29-ம் நாள் புதன்கிழமை (15-10-1997) அன்று காலை முதல் மாலைவரை அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயி லிலே நிகழ்கின்றன. 70வது ஆண்டு அகவைப் பூர்த்தியினையொட்டி ஆலயத்தில் காலை முதல் "பீமரத சாந்தி விழாவும்" மாலை பரிபாலன சபையினரால் பாராட்டு விழா வும் "மலர் வெளியீடும்" நிகழ்வதையிட்டு ஈழத்து இந்து மக்கள் சிறப்பாக நீர்வேலி பிரதேசத்து மக்கள் பெருமையடைகின்றார்கள்.

சிவஸ்ரீ. கா. சாம்பசதாசிவக்குருக்கள் அவர்களது குருத்துவப் பணியினைப் பாராட்டி வெளியிடப்படும் இம்மலரிலே, குருக்கள் அவர்களுக்கு வழங்கிய ஆசியுரைகள் பாராட்டுரைகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப்பாக் கவிதைகள், குருக்கள் பரம்பரை, மற்றும் இந்து சமயம் தொடர்பான பல பொதுவான கட்டுரைகள், ஈழத்து இந்துப் பண்பாடு வளர்ச்சிக்கு அந்தணக் குலப்பெருமக்களது பங்களிப்புக்கள், அருள்மிகு ஸ்ரீ அரச கேசரிப் பிள்ளையார் கோயில் வரலாறுகள், தமிழ், ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரைகளின் மறுபதிப்புக்கள் ஆகிய பல அரிய விடயங்களைத் தாங்கி "பீமரத சாந்தி விழா சிறப்பு மலர்" வெளிவருவது அனைவருக்கும் நன்கு பயனுள்ளதாக அமை கின்றது.

இம்மலரானது ஈழத்து இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கும் திருக்கோயில் பண்பாட்டு வளர்ச்சிக்கும் அந்தணக் குலப் பெருமக்கள் ஆற்றிய பங்களிப்பினையும் அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவிலின் வரலாற்றினையும் நன்கு அறிந்து கொள்ள உதவும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இம்மலரினை யாவரும் வாங்கிப் படித்து பயனடைவீர்களாக.

சுபம்.

அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில்
பரிபாலன சபையினர்

நீர்வேலி,
13-10-1997.

அன்பளிப்பு
10.11.97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் தோத்திரப் பதிகம்

இயற்றியவர்
— பண்டிதர் சுப்பிரமணியம்
ஆவரங்கால்

ஒருமருப் பிரண்டு காதன் முக்கணால் வாயோ ரைந்தாம்
கரதலன் பகையா றேழு கருவொழி எண்கு ணத்தான்
பெருநிதி ஒன்பான் பத்தர் பெறவருள் பிள்ளை நீர்வை
வரகண பதிதாள் வாழ்த்தி வணங்குவோம் மனத்து வைத்தே.

இருவரும் அறியா ஈசன் உமையுவா பிடியா யீன்ற
திருவருள் வள்ளல் சேய்க்குச் சேட்டன்மா மாயன் போற்றும்
மருமகன் ஈழ மன்னன் அரசகே சரிமுன் ஆக்கும்
தருவளர் சோலை நீர்வைத் தயாநிதி துணையெ மக்கே.

மூவரும் முனிவர்தேவர் மூவுல கவரும் ஏத்தும்
தேவர்கள் தேவன் செல்ல விநாயகன் திருமால் பாம்பாய்
மேவரு சாபம் வீட்டும் வித்தகன் விகடக்கூத்தன்
ஓவரும் துணையா யுள்ளான் இலமொரு குறையும் நாமே.

நாலாய மறைக்கு நாதன் நம்பியெய் கண்டார் தேற
நூலாய பொருணுவன்றோன் நோற்றிடின் சதுர்த்து சட்டி
மாலாய மாற்றிப்போக மோட்சமும் வழங்கும் நீர்வை
வேலாயு தன்றன் அண்ணன் வேழமா முகத்து வேந்தே.

ஐந்தரு நிழலோன் வேண்ட அகத்தியன் கலசப் பொன்னி
வெந்தற வாடும் காழி வியன்பொழில் தழையப் பாய்ச்சும்
மைந்தனே மணியே நீர்வை அரசகே சரிசெய் கோயில்
வந்தமர் வரகணேச மகாகண பதிதாள் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமா முகன்பால் வள்ளி அணைதர மதங்கள் மூன்றும்
ஊறுமா கரியா யுற்றாய் உயர்வெள்ளி மலையில் முன்னே
ஏறுமா(று) ஒளவை யாரை ஏற்றுமே ரம்பா நீர்வைத்
தேறுமா தேவ தேவ செய்தருள் கடைக்கண் நோக்கே.

எழுவகை யாம்பி றப்பில் எனைப்பல எடுத்திங் கெய்த்தேன்
வழுவகை யிலாதே ரம்பவாரமாய் நினையே வாழ்த்தித்
தொழவரும் தொடர்பு தந்தாய் தூயனாய்த் தொண்டே பூண்டு
கழலினை காப்பாய் கடைக்கணித் தருளெந்தேவே.

எட்டுரு வானே ஏந்தல் அரசகே சரிக னாவில்
பட்டுணர் வித்த பண்பால் பவித்திர தீர்த்தம் பார்த்தே
மட்டுறு மலர்க்கா மத்தி மாண்புற எடுத்த கோயில்
நட்டுற நிற்கும் நம்பி நாட்டுக அருளெம் பாலே.

(நாட்டுற – நட்டுற – குறுக்கல்விகாரம்)

ஒன்பது கோளும் நாண்மூ வொன்பதும் ஒற்றும் கூற்றும்
வன்பகை வினையும் நோயும் வறுமையும் எமையென் செய்யும்
அன்பது செய்வார்க் காத்த னாகின்ற தெய்வத் தந்தி
தன்பது மத்தாள் எங்கள் அரனெனச் சார்த லாலே.

பத்தருக் கருளும் பாலச் சந்திரா பாதம் போற்றி
சித்தருக் குகந்த புத்தி சித்திகள் தருவாய் போற்றி
எத்தரு கிடியே! என்றும் ஏழையர் தோழா போற்றி
நித்தருக் கினியாய்! நீர்வை நித்தியா னந்தா போற்றி.

போற்றியோம் கணேசபோற்றி ஜய ஜய போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | — |
| 2. | தோத்திரப் பதிகம் | — |
| 3. | ஆசியுரை | 1 |
| 4. | பிரார்த்தனை உரை | 3 |
| 5. | அருளாசிச் செய்தி | 4 |

## வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| 6. | துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி | 5 |
| 7. | சிவஸ்ரீ சந்திரசேகரக்குருக்கள் | 7 |
| 8. | சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் | 8 |
| 9. | கோப்பாய் பிரதேசச் செயலர் க. கேதீஸ்வரன் | 9 |
| 10. | இந்துசமயப் பேரவைத் உபதலைவரும் உடுவில் பிரதேசச் செயலுருமான திரு. ஆ. மகாலிங்கம் | 10 |
| 11. | சு. சண்முகவடிவேல் | 11 |
| 12. | பரிபாலனசபையோர் | 12 |
| 13. | நீர்வேலி காமாட்சி தேவஸ்தானம் பரிபாலன சபையார் | 13 |
| 14. | நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் பரிபாலன சபையார் | 14 |
| 15. | ஸ்ரீகணேசா சனசமூக நிலையம் | 15 |
| 16. | ம, க. நடராசா (சமாதான நீதவான்) | 16 |
| 17. | பீமரசாந்தி விழா வாழ்த்துப்பா — வீரமணிஐயர் | 17 |
| 18. | செல்வநாயகம் (அதிபர், அ. மி. த. க. பாடசாலை) | 18 |
| 19. | த. ந, பஞ்சாட்சரம் ஆசிரியர் | 20 |
| 20. | முல்லை வேம்படி ஞானவைரவர் கோவில் பரிபாலனசபை | 22 |
| 21. | சிவஸ்ரீ தி. குமாரசதாசிவ சர்மா | 24 |
| 22. | த. பரராசசிங்கம் (சமாதான நீதவான்) | 25 |
| 23. | ந. சிவசீலன் ( ,, ) | 27 |
| 24. | க. தர்மலிங்கம் ( ,, ) | 28A |
| 25. | சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள் | 28B |
| 26. | சோ. வரப்பிரதன் (மாணவன்) | 28C |
| 27. | Let's fervently felicitate - A Pilgrim | 29 |

## கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| 28. | குரு பரம்பரை | 30 |
| 29. | சைவ சமய மரபும் சிவாசாரியாரும், பேராசிரியர். வி. சிவசாமி | 35 |
| 30. | ஆலய வரலாறு — சிவஸ்ரீ சு. இராமசாமிக் குருக்கள் | 39 |
| 31. | கும்பாபிஷேக விஞ்ஞாபனம் (1932) | 41 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. Arasakesari Pillaiyar Temple 42
(Historical reference from Ancient Hindu Temples of Sri Lanka By. S. Arumugam & A Short History of Hindusim in Ceylon by C. S. Navaratnam.

33. வம்சாவழி 47

34. வைதீக விவாகத்தில் முக்கிய கிரியைகள் — 49
சிவஸ்ரீ ச. சோமசுந்தரக்குருக்கள் மயிலணி

35. குரு — ஆசார்யர் 54

36. ஈழத்தில் தொண்டாற்றிய அந்தணர்குல திலகங்கள் 55
— நீர்வை மணி

37. அறங்களை உய்த்தறிதல் — இ. முருகையன் 57

38. தெய்விகத் திருமறைகளைச் சைவஉலகம் பேண வேண்டும் —
— ஆறுதிருமுருகன் 60

39. இலங்கையில் இந்து மதத்தின் தொன்மையும் மகிமையும் 64
— இ. குணநாதன்

40. சைவ நீதி — இ. தியாகராசா 69

41. ஈழத்தில் தமிழ் வடமொழி வளர்த்த அந்தணப் பெரியார்கள் 71
ப. கணேசலிங்கம் — விரிவுரையாளர், யாழ்பல்கலைக் கழகம்)

42. நல்லவண்ணம் வாழலாம் — செ. செல்வநாயகம் 78

43. அறமே வாழ்வு — திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் 80

44. பண்ணோடு பாடிப் பரவுவோம் — க. முருகையா 82

45. சைவ சமய மறுமலர்ச்சியில் மகளிர் — பண்டிதை பார்வதிப்பிள்ளை
தங்கராசா 84

46. இந்து மதமும் அதன் வழி ஆலய வழிபாடும் — துரை எங்கரசு 87

47 கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் 90
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

பிரம்மஸ்ரீ கார்த்திகேச ஐயர் சாம்பசதாசிவக் குருக்கள் அவர்களது எழுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறுகின்ற பீமரதசாந்தியை முன்னிட்டு வெளிவரும் இந்த சிறப்புமலர் நன்கு மலர ஆசீர்வதிக்கின்றோம்.

மனிதனைப் பொறுத்தவரை நூறு ஆண்டுகள் வாழக்கூடியவன் என்று வேதம் கூறுகிறது. (சதமானம் பவதி சதாயுஷ் புருஷ:) என்று கூறுகிறது. 45வயதுவரை அதமாயுள் என்றும் 60 வயதுவரை மத்தியமாயுள் என்றும் 60 வதுக்குப்பின் தீர்க்காயுள் என்றும் இந்துமதத்தில் குறிப்பிடப்படுகிறது. இதன்படி 70 ஆவது ஆண்டை எட்டுகின்ற இந்தக் குருக்கள் தீர்க்காயுஸோடு இருப்பதுடன் பிணி இல்லாமலும் நல்லதிடகாத்திரமாக இருந்து நீடூழிகாலம் வாழவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**சிவஸ்ரீ. கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்**
**நியாய சிரோன்மணி**

யாழ்ப்பாணம்.
24-8-97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
வேலும் மயிலும் துணை

# ஆசியுரை

''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு''

அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம அர்ச்சகர் — சிவஸ்ரீ கார்த்திகேச சாம்பசதாசிவக்குருக்கள் — என் அன்பிற்குரியவர்; இரத்த பாசத்தவர்; எனக்கும் அவருக்கும் வயது சிறிதே வித்தியாசம்; இருப்பினும் அவர் என் பெறாமகன் ஆவர். அவருக்கு ஆண்டு 70 பூர்த்தியாகிவிட்ட நற்செய்தியை நம்ப முடியவில்லை. அவரைக் குழந்தைப் பருவத்தில், இளம்பராயத்தில் கண்ட நினைவுதான் இன்றும் எனக்கு உண்டு! ஆண்டுகள் உருண்டு ஓடுகின்றன; காலங்கள் மாறுதல் அடைகின்றன; ஆயினும் எம் உணர்வுகள் மாறவில்லை. இன்று குருக்கள் அவர்களையும், அவர் பெற்றோர், பெற்றோரின் பெற்றோர்; அன்னவர் மூதாதையர்கள் அனைவரையும் என் மனத்திரையில் காண்கின்றேன்! பசுமையான பல நினைவுகள் சொல்லால் வடிக்க முடியாதவை. அவை என் உளம் நிறைந்து உவப்பளிக்கின்றன.

வேதம் ஓதும் அந்தணன் ஒருவன், முப்போதும் பக்தி சிரத்தையுடன் திருமேனி தீண்டி திருத்தொண்டு செய்பவன். அன்பு, அடக்கம், அமைதி, சாந்தம், போதும் என்ற மனத்துடன் வாழ்க்கையை ஓட்டுபவன். அவ்வகை சார்ந்த ஸ்ரீ சாம்ப சதா சிவக் குருச்கள் தம் 70வயதுப் பூர்த்தி விழாவினை மனையாள் அருகிருக்க, புத்திரர், மருமகர், உடன்பிறப்பினர், பேரர், அன்பர், விநாயகபக்தர்கள் புடைசூழ காணும் விழாவினைக் கண்டு நானும் என் குடும்பத்தினரும் அகமகிழ்கின்றோம்; உளமார வாழ்த்துகின்றேன்.

குருக்கள் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து மேலும் வளர்ந்து வளம்பல கண்டு வாழ்க வாழ்கவென வாழ்த்தி, இன்னல்களும் இடர்களும் நிரம்பிய இக்கால கட்டத்தில் ஒரு குறையுமின்றி என் உள்ளம் நிறை என் அன்புத்தம்பி — ஸ்ரீ சாம்ப சாதாசிவக்குருக்கள் தம் குடும்ப சமேதரராய் சுபீட்சமான வாழ்வு வாழ எல்லாம் வல்ல கலியுகவரதன் கந்தப்பெருமானின் பாதக் கமலங்களை வணங்கிப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

சுபம்

சிவஸ்ரீ. சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்
அருள்மிகு கந்தசாமி தேவஸ்தானம்

நீர்வேலி
25-8-97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை உரை

*கஜாநனம் பூதகணாதி ஸேவிதம்*
*கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்*
*உமாசுதம் சோக விநாச காரணம்*
*நமாமி விக்னேசுவர பாத பங்கஜம்.*

யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் கண்ணெனப் போற்றி வரலாற்றுச் சிறப்புமிக்க நீர்வையம்பதியில் என்றும் எப்பொழுதும் யாவர்க்கும் அருள் பொழிந்து கொண்டிருக்கும் அரசகேசரிப் பிள்ளையாருக்கு பரம்பரையாக பூஜைத்தொண்டில் ஈடுபட்டிருந்த "அப்பாசாமிக் குருக்களின்" வழித்தோன்றலாக எனது அண்ணர் பிரம்மஸ்ரீ கா. சாம்பசதாசிவகுரு தனது 15 வது வயதிலேயே பூசை என்னும் திருப்புனித பணியை ஏற்றார்.

ஆண்டவனுக்கு மனம், வாக்கு காயம் என்பவற்றால் என்றும் தொண்டு செய்து வருபவர்க்கு வாழ்க்கையில் எல்லாச் சிறப்பும் செல்வமும், கௌரவமும் பிள்ளையார் அருளுவார். "கணபதி பூசை கைமேல் பலன்". அதற்கு சான்றாக எனது தமையனார் பிரம்மஸ்ரீ கா. சாம்பசதாசிவகுரு திகழ்ந்து கொண்டிருக்கிறார். இது ஊர் அறிந்த விஷயம். மிகையல்ல.

இந்த வயதிலும் மிகவும் துணிச்சலோடும் பொறுப்பு உணர்ச்சியோடும், அரிய, பெரிய கைங்கரியமான, "கும்பாபிஷேகம், புனராவர்த்தனகும்பாபிஷேகம் முதலிய கிரியைகளை மிகச்சிறப்பாக நடாத்தி எல்லோரது பாராட்டையும், நன்மதிப்பையும், அன்பையும் பெற்று, பார்போற்ற வாழ்ந்து கொண்டிருக்கும் எமது குடும்பத்தின் தன்நிகரற்ற தலைவனாக விளங்கும் பிரம்மஸ்ரீ சாம்பசதாசிவ குருவை மென்மேலும் ஆயுள் ஆரோக்கியமாக இருக்க இன்று அவரது 70ம் அகவை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கும், உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் எம்பிரான் அரச கேசரியானைப் பிரார்த்திக்கும்படி வேண்டுகிறோம். அத்துடன் அண்ணரின் ஆசியை வேண்டிநிற்கும்.

தம்பியின் குடும்பத்தவர்கள்
**பிரம்மஸ்ரீ. கா. குகதாசசர்மா**

*நீர்வேலி.*
*25.8-97*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்
## இரண்டாவது குருமஹா சந்நிதானம்
### அவர்கள் வழங்கிய

# அருளாசிச் செய்தி

**சிவனேயச் செல்வர்களே!**

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலின் பிரதம குருவாக இருக்கும் சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள் அவர்களுக்கு 70வது வயது அகவையைப் பூர்த்தி செய்து இறையருளைப் பெறும் விழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். குருக்கள் அவர்கள் அடக்கமும், பணிவும், அன்பாகப் பேசும் இயல்பும் உடையவர். குருமார்களுக்குரிய இலட்சணத்தோடு என்றும் காட்சி தரும் இயல்புடைய குருக்கள் அவர்கள் பல ஆலய பூஜைகளையும், பல கும்பாபிஷேக நிகழ்ச்சிகளையும் சிறப்பாகச் செய்து மக்களுக்கு இறைவன் ஆசியைப் பெற்றுத் தருபவர். அந்தணர்க்குரிய ஆறு செயற்பாடுகளையும் ஒழுங்காகச் செய்து குருபரம்பரைக்கு மதிப்பைத் தேடிக்கொடுத்துள்ளார்கள். சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள் அவர்கள் 70வது அகவை நிறைவாகக் கொண்டாடி சைவமக்கள் அனைவருக்கும் தெய்வ ஆசியை வேண்டித்தர இறையருளைப் பிரார்த்தித்து பல்லாண்டு காலம் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

குருமஹாசந்நிதானம்.
ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர பரமாசார்ய ஸ்சுவாமிகள்

யாழ்ப்பாணம்.
26-8-97.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்த்துரை

''கரிய மாலினும் கண்ணுத லானிலும்
உரிய தாமரை மேலுறை வானிலும்
விரியும் பூதமோர் ஐந்தினும் மெய்யிலும்
பெரியர் அந்தணர் பேணுதி யுள்ளத்தால்''

நீர்வேலி சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள் அவர்களது எழுபதாண்டு நிறைவுவிழா நடைபெறுவது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஆண்டினாலும், அனுபவத்தினாலும், அருட் சிறப்பினாலும் மூத்த அந்தணப் பெருமக்களை வாழ்த்தவேண்டிய கடமை எமக்குண்டு. அந்தண சிரேஷ்டராகிய இவர் கௌரி அம்மா என்ற நாமத்தைக் கொண்ட வாழ்க்கைத் துணையோடு நல்வாழ்வு வாழ்ந்துவருபவர். இவர் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் பல ஆண்டுகள் தெய்வப் பணி புரிந்து பக்தர்களின் பெரும் பாராட்டைப்பெற்றவர். இன்று அந்த நிலையில் மேலும் விரிவடைந்து மக்களின் மனதைக் குருக்கள் ஐயாவின்பால் ஈர்த்துச் சென்றுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்''

என்பது பொய்யாமொழி. இதற்கேற்ப நிறைவான கருணையும் பரோபகார சிந்தையும் கொண்டவராக இப்பெரியார் விளங்கியமையினால் இன்று மக்கள் மனதில் புனிதமான இடத்தைப் பெற்றிருக்கிறார். எமது நாட்டில் உள்ள திருக்கோயில்களும், அந்தணப் பெருமக்களும், அறங்காவலர்களும் வழிபடுவோரும் ஒன்றிய சிந்தனைகொண்டவர்களாக பணியாற்றினால் சைவ சமயத்துக்கு ஒரு எழுச்சியான எதிர்காலம் உண்டாகும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. எனவே குருக்கள் ஐயா அவர்களின் திருவடிகளை வாழ்த்தி அரசகேசரிப் பிள்ளையாரின் திருவருளை நினைந்து எனது வாழ்த்துரையை நிறைவாக்குகிறேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P
தலைவர்

துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
27-8-97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை.

# போற்றலுரை

இன்று சதாபிஷேகம் காணும் சிவஸ்ரீ சாம்ப சதாசிவ குருக்கள் அவர்கள் ஒரு நிறைவான அந்தணப் பெரியார் என்று சொன்னால் மிகையாகாது. தனது பிதா வழியாகவே ஆத்மார்த்த சிவபூஜா துரந்தரர். தமது குல தெய்வமாகிய விநாயகரை பலவருஷமாக முப்போதும் திருமேனிதீண்டி பூஜை செய்து வரப்பிரசாதம் பெற்றவர். புத்திர, பௌத்திர சம்பத்துக்களுடன் கூடியவர். அவர்களுக்கு ஸாஸ்திரங்களில் கூறிய பிரகாரம் பீமரதசாந்தி என்று கூறப்படும் சதாபிஷேகம் செய்வது அவர் புத்திரர்களுக்கும் குடும்பத்தாருக்கும் கிடைத்த ஒரு புண்ணியம் ஆகும்.

சைவசமயப் பிரமாண நூல்களாகிய வேதாகமங்களிலும் அதன் வழிவந்த மனு தர்ம ஸாத்திரம் முதலாய ஸ்மிருதிகளிலும் வாழ்க்கை நெறிகளைப்பற்றி நன்றாக சொல்லப்பட்டுள்ளது. அதாவது ஒரு ஜீவன் கர்ப்பத்தில் உண்டானது முதல் பூமியில் ஜனனம் வரையும், பின்பு ஓராண்டுப் பூர்த்தியில் அப்த பூர்த்தி. அதில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் பிறந்த மாசம் நக்ஷத்திரம் ஆகியவற்றில் ஆயுஷ்ய ஹோமம், நவக்ரஹ ஹோமம் முதலியற்றை செய்ய வேண்டும். இதன் பின் உரிய காலத்தில் உபநயனம், தீக்ஷை முதலாய ஸம்ஸ்காரங்கள் நடை பெறும். பிரம்மச்சரியம், குருகுலவாசம், ஸாஸ்திரங்கள் கற்று இதன் பின்பு பிரம்மச்சரிய விரதம் நிறுத்தி இல்லற தர்மம் ஆரம்பிக்கும். அதன் பின் தம்பதியரின் புண்ணிய, பாபங்களுக்கு ஏற்றவாறு குடும்ப வாழ்வு சிறக்கும். இப்படியாக அறுபதாவது ஆண்டில் ஷஷ்டி அப்த பூர்த்தி என்கின்ற மணி விழாக் காண்பர். அறுபது, எழுபது. எழுபத்தெட்டு, எண்பத்தொன்று ஆண்டுகளிலும் சாந்திகள் சொல்லப்பட்டுள்ளன. ஸௌனகர், போதாயனர் ஆகிய ரிஷிகள் இதைப்பற்றிக் கூறியுள்ளார்கள். கூறப்பட்ட ஆயுட் காலங்களில் ஒருவருடைய கிரஹ சஞ்சாரங்கள் எந்த விதத்திலேனும் அவருடைய வாழ்க்கையையும் மனைவி, மக்கள் முதலியோருடைய தேஹ ஆரோக்கியத்தையும் பாதிக்கும் என்பதால் அதனை நிவர்த்தி செய்ய சாந்திகள், பரிகாரங்கள் செய்யும் படி "சாந்தி ரத்னாகரம்", "சாந்தி குசுமாவளி" ஆகிய நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. இதனால் பாபங்களைப் போக்கி திடகாத்திரராக இருந்து தானங்களால் புண்ணியங்களைப் பெற்று தர்மங்களால் பிறருக்கு உபகாரியாக இருந்து தெய்வத்துக்குச் சமமான அந்தஸ்த்து உடையவராக ஆகிறார்கள்.

சாதாரணமாக சைவ சமயிகள் எல்லோருக்கும் வாழ்க்கையின் பூரணத்தை அடைவதற்கு பதினாறு கிரியைகள் சொல்லப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஸம்ஸ்க்காரம். அதாவது மந்திர, ஜெப, ஹோமம் முதலியவற்றால் தூய்மைப் படுத்துதல். "ஸம்ஸ்காரம்" என்றால் சுத்தப் படுத்துதல்- இவற்றுள் ஒவ்வொரு ஆண்டின் நிறைவிலும் ஜன்ம, மாச, நக்ஷத்திரத்தில் குல தெய்வ, இஷ்ட தெய்வ வழிபாடு, நவக்ரஹ வழிபாடு, குருவை வணங்குதல், பெற்றோரை, பெரியோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி ஆசி பெறல், தான தர்மங்களை அவரவர் இயல்புக் கேற்றவாறு செய்தல் வேண்டும். இக்காலத்தில் பிறந்த தினக் கொண்டாட்டம் அன்னிய மரபு வழியில் ''கேக் வெட்டுதல்'' தமிழ் மரபை ஏழனஞ் செய்தல் போல்வதாகும்.

மேற் கூறப்பட்ட பிரகாரம் சிவஸ்ரீ சாம்பசதாசிவக்குருக்கள் அவர்களது ஷஷ்டி அப்பத பூர்த்தி எனும் மணிவிழா 1987 ம் ஆண்டு அரசகேசரி விநாயகர் சந்நிதியில் மிகச்சிறப்பாக நடந்தது. இப்பொழுது பீமரதசாந்தி என்கின்ற எழுபதாவது ஆண்டு விழாவை அவர் பிள்ளைகள் செய்வது மிகவும் ஒரு பெரிய புண்ணியம். இவ்விழாவை சீரிய முறையில் செய்யும் அவர்கள் குடும்பத்தினரும், செய்விப்பதில் பங்கு கொள்வோரும் ஆகிய எல்லோர்க்கும் பல தீர்த்தங்கள் ஆடிய நற்பலன்கள் கிடைக்கும் என்பது பெரியவர்கள் வாக்கு. குருக்கள் அவர்கள் துணைவியருடன் நீண்ட காலம் வாழ்ந்து இறைபணி செய்து அருள் செய்ய எல்லாம் வல்ல விநாயகரை போற்றுவோமாக.

இவ்வண்ணம்

நீர்வேலி.
27-8-91

**சிவஸ்ரீ. பிட்சாடன சந்திரசேகரகுருக்கள்**
வாய்க்காற்தரவை பிள்ளையார் தேவஸ்தானம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌம்ய சுந்தர சிவாசார்யர்

# சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள்

# எழுபதிலிருந்து ஆயிரம்பிறை காண்க.

காரணாகமத்தில்;

" சுக்ல யக்ஞோபவீதாங்க
சசிக சௌம்யசுந்தர: "

என்ற சுலோகத்திற்கு அமைய நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோவில் பாரம்பர்ய சிவாச்சார்யர் சாம்பசதாசிவக் குருக்களையா அவர்கள் சுக்ல யக்ஞோபவீதத்தோடும் அழகான சிகையோடும் ரமணீயமான தோற்றத்தோடும் விளங்குகின்றார்கள்.

நித்யே, நைமித்திகே, காம்யே
யத்கர்மை காலயே ஸ்திதம்
ஏகாசார்யேண கர்த்தவ்யம்
இதி சாதுரதிம்மயா.

அதாவது. ஒரு ஆலயத்தில் நித்ய, நைமித்யக, காம்ய கிரியைகளையெல்லாம் ஒரே ஆசார்யரால் செய்யப்படுவது சாலச் சிறந்தது என்கின்ற காமிகாம வாக்யத்திற்கு அமைய தனது ஆலயத்தில் நித்ய, நைமித்ய காம்ய கிரியைகளையெல்லாம் தம்கையாலேயே செய்துவைத்த பெரும்பாக்யத்தைப் பெற்றவர். அது மட்டுமல்ல, தம்வாழ்நாளில் தனது ஆலயத்தில் மட்டுமல்லாது பல ஆலயங்களிலும் கும்பாபிஷேகங்கள், மஹோத்சவங்களை நடாத்திவைத்த பெருமையை உடையவர்கள். உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் பலகாலம் தொடர்ந்து மஹோர்த்சவ கிரியைகளை நடாத்தி வைத்திருக்கிறார்கள். தனது வயதிற்கு மேற்பட்ட குருமார்களிடம் பணிவன்போடு பழகுவதும் தனது வயதிற்குட்பட்ட குருமாரிடம் ஆதரவோடும் அன்போடும் பழகுவதும் அவரது சிறப்பு பண்பாகும். ஒரு சிறந்த பாரம்பர்யத்தில் பிறந்த அவர் தன்னையொத்த வாரிசுகளையும் பெற்றிருக்கிறார். ஆலயத்திற்கு வரும் மக்களுடன் அன்பாக அளவளாவி அவர்களின் மனதை சாந்திப்படுத்துவதில் ஆர்வம் காட்டுவார்கள். சிவாசார்யர்களுக்கு அறுபது, எழுபது, எண்பது என்கின்ற வயதுகள் பூர்த்தியாக ஒவ்வொரு சாந்தி கூறப்பட்டிருக்கின்றன.

அறுபதில் ஷஷ்ட அப்தபூர்த்தி சாந்தி, எழுபதில் பீமரத சாந்தி, எண்பதில் சதாபிஷேக சாந்தி, இந்த மரபில் ஐயா அவர்கள் எழுபதிலிருந்து சுகமாக ஆரோக்யத்தோடு வாழ்ந்து சதாபிஷேக சாந்தி என்னும் ஆயிரம் பிறை காண, எல்லாம் வல்ல அரசகேசரி விநாயகப்பெருமானை வணங்கி வாழ்த்துக் கூறுகின்றோம்,

இங்ஙனம்
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்

காயத்ரீபீடம், தர்மசாஸ்தா குருகுலம்
இணுவில்.
28-8-97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

வலிகிழக்கு பிரதேசத்தில் மூன்று பெரும் ஆலயங்களைக் கொண்ட நீர்வேலியின் மத்திய பகுதியில் உள்ள அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் ''சதாசாரக்கிரியாமணி'' கார்த்திகேயக் குருக்கள், சாம்பசதாசிவக்குருக்கள், தனது எழுபதாவது அகவை அடையும் இவ்வேளை அவரை வாழ்த்துவதில் பெரும் உவகை அடைகிறேன்.

தனது பதினைந்தாவது வயதில், கோவிற் பூசைகள் செய்ய அரம்பித்து கிட்டத்தட்ட நாற்பது வருடங்கள் வருடாந்த மகோற்சவங்கள், பல மகாகும்பாபிஷேகங்கள் என்பவற்றை திறம்பட நடாத்தி, தனது மகன் சோமதேவகுருக்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து, ஓய்வுபெற்று இருக்கின்ற போதிலும், அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து இவ்வாலயத்திற்கும் இவ்வூர் மக்களிற்கும் வழிகாட்ட, எல்லாம் வல்ல அரசகேசரிப்பிள்ளையார் அருள்புரிய வேண்டுமென்று அவன் பாதம் இறைஞ்சுகின்றேன்,

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்''

க. கேதீஸ்வரன்
பிரதேசச்செயலர்/மேலதிக அரசாங்க அதிபர்

வலிகிழக்கு,
கோப்பாய்,
29-08-1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

இந்துசமயப் பேரவை உபதலைவரும்,
உடுவில் பிரதேச செயலருமான

# திரு. ஆ. மகாலிங்கம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

அண்மைய நாட்டுப் பிரச்சனையால் சேதமுற்ற சைவ ஆலயங்களை பார்வையிட சென்ற சமயம், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சாம்பசதாசிவக்குருக்கள் அவர்களை முதன் முதலாக சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. அவருடன் குறுகிய நேரமே உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தாலும், அவருடன் உரையாடிக்கொண்டிருந்தபோது. ஏனோ, என்னுள் ஞாபகத்துக்கு வந்த திருக்குறள்;

''அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லால்''

என்பதாகும்.

அவ்வளவு தூரம் மிகவும் பண்பாகவும், அன்பாகவும் பல காலம் தெரிந்தவர் போல் என்னுடன் உரையாடினார்.

குருக்கள் ஐயா அவர்களை, மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு இது வரை எனக்கு கிடைச்காவிடினும், அவரது எழுபதாவது வயது பூர்த்தியாகும் இவ்வேளையில் அவரை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

குருக்கள் ஐயா, அவர்களுக்கு, அரசகேசரிப் பெருமான் எல்லா கடாச்சங்களையும் வழங்கி, இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, இவ் ஆலயத்திற்கும், இவ்வூர் மக்களுக்கும், நாட்டுக்கும், சேவை செய்ய இறையருள் கிடைக்க, வேண்டுமென்று அரசகேசரிப் பிள்ளையார் பாதம் பணிந்து வணங்கி வாழ்த்துகின்றேன்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.''

ஆ. மகாலிங்கம்.

பிரதேச செயலகம்
உடுவில்,
30-8-1997.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில், பிரதம குருக்கள்

சதாசாரக் கிரியாமணி **கார்த்திகேச - சாம்பசதாசிவக் குருக்கள்**

அவர்களின்

# 70-வது வயது நிறைவுறும் நன்நாளில்

அவரது நற்பண்புகளைப் பாராட்டி வழங்கும்

# வாழ்த்துச் செய்தி

உலகம் இன்றளவும் நிலைத்திருப்பது உயர்ந்தோர் இருப்பதாலேயே. இந்தவகையிலே உயர்ந்த பண்பாளர்கள், சேவையாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இன்று நாம் பாராட்டும் குருக்கள் அவர்கள்

''ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்''

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய ஒழுக்கத்தைப் பேணிக்காத்தவர். அவரும் அவரது பிள்ளைகளுமே நல்ல பண்பாளர்கள் என்ற சொல்லுக்கு இலக்கணமானவர்கள்.

அன்பு, அடக்கம், நல்லொழுக்கம் மிக்க ஐயா அவர்களின் தந்தை வாத்தியார் ஐயா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டு வந்த சிவஸ்ரீ கார்த்திகேச ஐயா அவர்களை நாம் இச்சந்தர்ப்பத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம். நீர்வேலியில் சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததும், புராதனமானதும், பிரபல்யமானதுமான அரசகேசரிப் பிள்ளையாரின் திருமேனியை முப்போதும் தீண்டி அருள்பெருகச் செய்யும் பேறுபெற்று இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இப்புனிதப் பணியைச்செய்து அடியார்கள் அருள்பெற வாய்ப்பளிக்கும் பெருந்தகை அவர்களது நற்பண்புகளை பாராட்டாதிருக்க முடியாது.

குருக்கள் ஐயா அவர்கள் ஆலயப் பணியோடு மட்டுமல்லாது அறநெறியைப் பேணிக் காக்கும் அறப் பணிகளையும், சமூக முன்னேற்றத்துக்கு வேண்டிய சமூகப் பணிகளையும் செய்துவருவது பாராட்டத்தக்கது.

எமது கிராமத்தில் மட்டுமன்றி அயலூர்களிலும் கூட அநேக ஆலயங்களைக் கும்பாபிஷேகம் செய்து வழிபாடாற்ற வைத்ததோடு; பல பூர்வக் கிரியைகளையும் செய்து ஆசீர்வதித்து சமூக வளர்ச்சிக்கும் வழிகாட்டியாக விளங்குவது பாராட்டத்தக்கது.

குருக்கள் ஐயா அவர்களின் மேலான பணிகளையும், பண்புகளையும் பாராட்டி அவர் மேலும் பல்லாண்டுகாலம் சுகநலமுடன் வாழ்ந்து நற்தொண்டாற்ற எல்லாம்வல்ல விநாயகர் அருளை வேண்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சு. சண்முகவடிவேல்
கிராம அலுவலர்

நீர்வேலி தெற்கு.
28-8-97.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பரிபாலன சபையோரின் வாழ்த்துரை

நீர்வை அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தானப் பிரதமதரு, சிவஸ்ரீ கார்த்திகேய சாம்பசதாசிவக் குருக்கள், விக்கின விநாயகனின் கருணை பாலிக்கத் தம் எழுபதாம் அகவின் பூரண நிறைவினைக் கொண்டாடும் சிறப்பு விழாவின் தொடர்பாக வெளிவரும் மலருக்கு எம் இதயம் கனிந்த வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

குருக்கள் ஐயா அவர்கள் வேதநெறி நின்று மிகுசைவத்துறை விளங்க ஐந்து தசாப்தங்களாய் அறவழி நின்று ஆற்றும் பணிகளை அனைவரும் அறிவர்.

ஐயா அவர்களின் அருளொழுகு தோற்றத்தினையும் பக்தி பூர்வமான செயற்பாடுகளையும் போற்றாதோரில்லை, இறைவன் சந்நிதியில் எவரும் சமன் என்ற உயர்ந்த நோக்குடன் பாகுபாடின்றித் தம் தெய்வப் பணியை ஆரவாரமின்றி, பக்தி நிலை நின்று அவர் ஆற்றும் சேவை, அவரின் பண்பின் சின்னமாய்; சிகரமாய் விளங்குகின்றமையை அறிவார் அறிவாரே!

குருக்களின் தாய்வழிப் பாட்டனார். ஸ்ரீ இராமசுவாமிக் குருக்களின் (அப்பா சுவாமி ஐயா) மறைவின் பின்னர், அவர் அடியொற்றிப் பக்தர்களின் உள்ளம் உவப்ப தம் குருத்துவப் பணியை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிவரும் பெருமைக்குரியவர். காலந்தோறும் அறங்காவல் சபையினரின் அன்பையும் ஆதரவையும் பெற்று அவர் ஆற்றும் தொண்டிற்குத் திரிகரண சுத்தியுடன் எமது வணக்கத்தை செலுத்துவதில் பெருமையடைகின்றோம்.

ஆலய வளர்ச்சியும், பொறுப்புகளும் அதிகரித்து வருவதைத் தம் கருத்திற்கொண்டு, உரிய காலத்திற்கு முன்னரே தம் கனிஷ்ட புத்திரர் சிவஸ்ரீ சோமதேவக்குருக்களையும் தம் இளைய குருவாக இணைத்து அன்னவர் இளமைத் துடிப்பினையும் உற்சாகத்தையும் தமக்குதவியாய்க்கொண்டு தம்பணி தொடரும் சிறப்பிற்குமுரியவர்.

குருக்கள் ஐயா அவர்கட்கு எழுபது ஆண்டுகள் உருண்டோடிய நிகழ்வினை எம்மால் நம்பமுடியவில்லை! இன்றும் இதயத்தில் இளைஞனாய் முப்போதும் தம்பணிகளை ஆற்றிய வண்ணமே இருக்கும் ஐயா அவர்கட்கு நலமெலாம் நல்கும் விநாயகப் பெருமானின் பேரருள் பேற்றுடன் பல்லாண்டு, பல்லாண்டு, வாழ்கவென வாழ்த்துகின்றோம்! வணங்குகின்றோம்!

குருக்கள்! ஐயா அவர்கள் தம் பாரியார், பிள்ளைகள் பேரர் சகிதம் மேலும் வளம்பல கண்டு விநாயகப் பெருமான் திருத்தொண்டு பரவி இன்புறுக என இறைஞ்சுகின்றோம்.

அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார்,
தேவஸ்தான அறங்காவல் சபையினர்.

நீர்வேலி
1-9-97.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை.

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் பிரதம குருக்கள்
சதாசார கிரியாமணி
சிவஸ்ரீ கார்த்திகேச சாம்பசதாசிவக்குருக்கள் அவர்கள
70வது அகவை நிறைவு செய்யும் இந்நன்நாளில்
நீர்வேலி காமாட்சியம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையார் வழங்கும்

# வாழ்த்துச் செய்தி

''அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்''

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்தணகுலப் பெருமக்கள் போற்றப்படவேண்டியவர்கள்.

''அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்'' என அருளாளரின் பண்பை எடுத்துக் காட்டுகிறார் கம்பர். இந்நெறியில் அருளாளராக வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது குருக்கள் ஐயா அவர்களின் வாழ்க்கை நெறியைப் பாராட்டாதிருக்க முடியாது. தான் வாழுகின்றபோது சிவநெறியைப் போற்றியும், சைவ அநுட்டானங்களைப் பேணியும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

எமது கிராமத்தின் நடுநாயகமாக விளங்கி அருளொளி பரப்பிக் கொண்டிருக்கும் சரித்திரப்பிரசித்தி பெற்ற அரசகேசரிவிநாயகரை முப்போதும் திருமேனி தீண்டும் பேறு பெற்றவர். எத்தனையோ ஆலயங்களைக் கும்பாபிஷேகம் செய்து பூசிக்க வைத்த பெருந்தகையாளர்.

''சதா சாரக் கிரியாமணி'' எனும் சிறப்புப் பெற்றவர். சமய வகுப்புக்களை ஆலய சுற்றாடலிலே நடாத்தி சமயப்பணி புரிந்தவர்.

சமய தீட்சை வைத்து மக்களை சைவ அநுட்டானங்களை மதித்து அதன் வழி நடக்கச் செய்தவர். கணேசா சன சமூக நிலையத்தின் பொறுப்பு வாய்ந்த நிர்வாக சபை உறுப்பினராக சமூகப்பணி பல செய்தவர். நன்மக்களை உலகுக்கு ஈந்து பெருமை கொண்டவர். பிரபவ ஆண்டு புரட்டாதி மாதம் 21ந் நாள் (7 - 10 - 88) புதன் கிழமை சஷ்டியப்த பூர்த்தி விழாக் கண்டவர். இன்று 70வது அகவை நிறைவு காணும் நன்நாளில் அவரது நற்பணிகளைப் பாராட்டுவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

குருக்கள் ஐயா அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்ந்து சைவ உலகிற்கு தொண்டுகள் செய்ய நல்ல உடல் நலத்தையும், உளநலத்தையும் வழங்க வேண்டுமென எல்லாம் வல்ல கருணைக் கடலாம் காமாட்சியம்பாளின் திருப்பாதங்களை வணங்கி வாழ்த்துகின்றோம்.

''வாழ்க அந்தணர், வானவர் ஆனினம்''

பரிபாலன சபையார்,
காமாட்சியம்பாள் தேவஸ்தானம்.
நீர்வேலி. 30-8-97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை.

நீர்வேலி வடக்கு அருள்தரு ஸ்ரீகாளியம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையார்,

நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப்பிள்ளையார் கோவில் பிரதம சிவாச்சாரியார், சதாசாரக் கிரியாமணி

சிவஸ்ரீ. கா. சாம்பசதாசிவக்குருக்கள் அவர்களின் 70வது வயது நிறைவுறும் இந்நன் நாளில்

அவரது சேவைகளைப் பாராட்டி வாழ்த்தி வழங்கும்

# வாழ்த்துச் செய்தி

அருளொளி வீசும் ஆண்டவன் ஆலயங்கள் ஆங்காங்கே அமைந்து அருள் சுரந்து கொண்டிருப்பதால் அழகும் வனப்பும் பெற்று விளங்குகிறது நீர்வேலிக்கிராமம்.

மேலும், இக்கிராமத்தில் ஆங்காங்கே அந்தணப் பெருமக்கள் அமர்ந்து வேதபாராயணம் செய்வதால் பெருமையும் பெறுகிறது எமது கிராமம்.

நீர்வளமும் ஏர்வளமும், கைத்தொழில் வளமும் மிளிர்ந்து நிற்கும் எமது கிராமம் தமிழும் சைவமும் தழைத்தோங்கி நிற்குந் தன்மையது.

இந்த வகையில் எமது கிராமத்தின் நடுநாயகமாக விளங்கும் புராதனம் மிக்கதும், சரித்திரப்பிரசித்தி பெற்றதுமான அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பிரதம குருக்களாக விளங்கும் இன்றைய விழா நாயகரைப் பெற்றெடுத்த தாய், தந்தையரை நினைவு கூர்ந்து; பாராட்டாதிருக்கமுடியாது. அன்பு, அடக்கம், அறிவு, ஒழுக்கம், இவற்றை தனது வாழ்நாளில் கடைப்பிடித்து, அந்தண குலத்திற்கேற்ப ஒழுக்க நெறியைப் பேணிக்காத்து எமது கிராமத்தில் மட்டுமல்லாது அயல் கிராமங்களிலுமெல்லாம் ஆலய கைங்கரியங்களை ஆகம விதிக்கேற்ப செவ்வனேசெய்து ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டியாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற குருக்கள் ஐயா அவர்கள் அனுபவ முதிர்ச்சிபெற்று 70வது வயது நிறைவைக் காணும் இவ்வேளையில் அவரது புனிதப் பணிகளைப் பாராட்டாதிருக்கமுடியாது.

மேலும், பல்லாண்டுகாலம் சுகநலமுடன் வாழ்ந்து கடவுட்பணி, சமயப்பணி, சமூகப்பணிகள் செய்ய நல்ல சௌகரியத்தையும், நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டுமென எல்லாம்வல்ல ஸ்ரீ காளியம்பாளை பிரார்த்தித்து வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

நீர்வேலி வடக்கு,
30-8-97.

மேற்படி தேவஸ்தான பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்மஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள் அவர்களின்

# குருத்துவப் பணிப் பொன்விழா

*''நீர்வை அரசகேசரி செய்கோயில் வந்தமர்*
*வரகணேச மகாகணபதி தாள்போற்றி''*

நீர்வேலிப் பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம குருக்கள் அவர்களின் குருத்துவப்பணிப் பொன்விழாவையும் எழுப தாண்டு நிறைவு விழாவையும் ஒரு சேரப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றோம். அதனால் நாம் பெருமைபெறுவதுடன் பேரானந்தப் பெருவாழ்வையும் அடைகிறோம்.

இவர், வடகோவை பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் — கார்த்திகேய ஐயர், நீர்வையூர், பிரம்மஸ்ரீ இராமசாமிக் குருக்கள் அவர்களின் அருந்தவப் புதல்வி குப்பம்மா தம்பதிகளுக்கு விநாயகப் பெருமானின் பேரருளாலும், நீர்வை மக்கள் செய்த மாபெரும் தவத்தாலும் வந்துதித்த செம்மல்.

விநாயகப்பெருமானுக்கு நித்திய பூசைகள், மஹோற்சவக் கிரியைகள் மற்றும் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள் அனைத்தையும் நிறைவாக நிகழ்த்தி எங்கள் அனைவரையும் வாழவைக்கும் வள்ளல் எங்கள் குருக்கள் ஐயா அவர்கள்.

விநாயகர் அடியார்களின் அறிவகமாக விளங்கும் ஸ்ரீ கணேச சனசமூக நிலையம் ஸ்தாபித்த ஆண்டு தொடக்கம் (1949 – 1982) வரை 33 ஆண்டுகள் நிலையத்தின் தலைவராகப் பணி ஆற்றினார். எம் நிலையம் யாழ்மாவட்டத்தில் அதி சிறந்த நிலையங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. நிலைய விழாக்களிலும் பெரியார் விஜயம்செய்த நிகழ்வுகளிலும் முன்னின்றுசேவை ஆற்றியவர். 1955ம் ஆண்டு சித்திரை மாதம் கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் ஐயர் அவர்கள் எம் நிலையத்தை எங்கள் குருக்கள் ஐயா அவர்களின் தலைமையில் தரிசித்தபோது ''கண்மலியும் பல நூலின் கோயிலாகிக் கனத்த பயன் ஈகவென்றுவாழ்த்தினனே'' என எம் நிலையத்தை வாழ்த்திய வைபவத்தை நாம் என்றும் மறவோம்.

எம் ஆத்மார்த்த மானசிக குரு – சாம்பசதாசிவக் குருக்கள் அவர்கள் நூறாண்டு காலம் வாழ்க எனப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ கணேச சனசமூக நிலையம்

நீர்வேலி.
29-8-1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்த்துரை.

''குருப்பிரம்மா, குரு விஷ்ணு, குரு தேவோ மஹேஸ்வரஹா
குரு சாட்சாத பரப் பிரம்மம் தஸ்மைஸ்ரீ குரவே நமஹ''

எல்லாம் வல்ல ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையாரை முதலில் மானசீகமாக வணங்கி மகிழ்கிறேன். சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள் ஐயா அவர்களிற்கு எழுபதாவது அகவை பூர்த்தியினை முன்னிட்டு பெருவிழா எடுப்பதும், மலர்வெளியீடு நடைபெறுவதையிட்டு மிக மிக மகிழ்கின்றேன். அவரது தூய சமய வாழ்விற்கும், இறைவனுக்கு அவர் இயற்றிய உண்மையான பூஜா கைங்கரியத்திற்கும் இது சாலப்பொருத்தமும் சிறப்பு மானதே.

ஒரு ஊருக்கு பெருமை தருவனவற்றுள் சாலச் சிறந்தது யாதெனில் அங்கு வாழும் வயது முதிர்ந்த சான்றோர்களே தான் என எங்கள் இலக்கியங்கள் அருமையாகப் பேசும். அந்த வகையிலும் எங்கள் மதிப்பிற்குரிய சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள் போற்றி வணங்கப் பெறுதலுக்குரியவரே; அவர் அரச கேசரிப்பிள்ளையாருக்கு தன் வாழ்க்கைக் காலத்தில் செய்து வந்த பூசை புனஸ்காரங்களின் தூய்மை காரணமாகவே எல்லாம் வல்ல விநாயகன் இந்தச் சிறப்பை அவர்களுக்கு வழங்கியிருக்கிறான். பெரியவர்கள், சான்றோர்கள் போன்றோர்கள் அவர்களின் தூய்மையான பணிக்காகவும், வாழ்வுக்காகவும் அவர்கள் இவ்வுலகில் வாழும் காலத்திலேயே போற்றப்படுதலே சிறப்பும் உயர்வுமாகும். எங்கள் குருக்கள் ஐயா அவர்களின் எழுபதாவது வயது பூர்த்தியை முன்னிட்டு எடுக்கப்படும் இவ் விழாவும், மலர் வெளியீடும் குருக்கள் ஐயாவின் வாழ்வின் நோக்கத்தை பெருமைப் படுத்துவதுடன் இவ்வழியில் இளைய தலைமுறையும், ஊக்கத்தோடு தொடர வழிசமைக்கும் என எண்ணுகிறேன்.

மகோற்சவ காலத்தில் விநாயகர் ஐந்து இடங்களில் எழுந்தருளியிருப்பார். கும்பம், விம்பம், ஸ்தம்பம், யாகாக்கினி, ஆச்சாரிய ஹிருதயம். இதில் ஐந்தாவகிய ஆச்சாரியஹிருதயம் என்பது சிவாச்சாரியரின் உள்ளத்தை குறிப்பது. இந்த பெருமையை எங்கள் சிவசிறீ கா. சாம்பசதாசிவக்குருக்கள் எத்தனை முறை பெற்றிருக்கிறார்கள் என நினைக்கையில் அவர் விநாயகரின் கருணை பெற்றவர் என்பதில் ஐயமில்லை. ஐயா அவர்களின் வாழ்வும் பணியும், அவர்களது குடும்பமும் சிறந்தோங்க ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையாரைப் பணிந்து அமைகிறேன்.

வணக்கம்,

ம. க. நடராசா.

சமாதான நீதவான்
நீர்வேலி,
30-8-97.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அரசகேசரிப் பிள்ளையார் துணை

யாழ்ப்பாணம் — நீர்வேலி

அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தான ஆதீன முதல்வர்

பிரம்மஸ்ரீ ஸாம்பஸதாசிவக் குருக்கள் தம்பதிகளின்

# பீமரஸாந்தி விழா வாழ்த்துப்பா

சீர்பூத்த யாழ்ப்பாணச் செழும்ப தியில்
செந்தமிழும் சைவமதம் சீலம் ஓங்கும்
நீர்வேலிப் பதியினிலே கோயில் கொண்ட
நிர்மலனாம் அரசகே சரிக்க ணேசன்
தார்பூத்த தாளிணைகள் பூஜை செய்தே
தண்ணாரும் தமிழ்பாடிப் பூக்கள் சூட்டும்
பேர்பூத்த ஸாம்பஸதா சிவக்கு ருக்கள்
பீமரத ஸாந்திவிழா வாழி! வாழி!

வேதநூல் பலவாய்ந்து வியாக ரணம்
விழுமிய நியாஸங்கள் உபநி ஷதம்
பூதசுத்தி சாந்திவகை பூஜாக் ரமம்
புகழ்மிகுந்த ஆகமக் கிரியா பாகம்
போதமிகும் ஆலயப் பத்த திகள்
பொங்குவட மொழியினிலே கற்ற நூலோன்
வேதியராம் ஸாம்பஸதா சிவக்கு ருக்கள்
தம்பதிகள் நீடூழி வாழி! வாழி!

திருக்கே தீச்சரமும் முனீச் சரமும்
திருக்கோ ணேஸ்வரம்பல் ஷேத்தி ரங்கள்
விருப்போடு கும்பாபி ஷேகம் செய்த
வேதியர் ஸாம்பஸதா சிவக்கு ருக்கள்
அருட்கோல மங்கள காரியங்கள்
ஆனந்த ஹோமங்கள் அர்ச்ச னைகள்
சிறப்போடு புரிந்திடும் அந்த ணாளன்
ஸாம்பஸதா சிவக்குருதம் பதிகள் வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத்வாஜ கோத்திரத்து ஆபஸ் தம்பம்
பண்புநிறை வம்ஸமதில் உதித்த அண்ணல்
சரத்சந்தர வதனத்துத் தேஜஸ் தோன்றும்
சாந்தமே உருவான சற்குண வான்
சிரத்திலணி அக்குமணி மாலை தோன்றும்
செம்மார்பில் கௌரிஸங்க ஆரம் தோன்றும்
புரத்திலணை யில்லாத பதிநீர் வேலி
ஸாம்பஸதா சிவக்குருதம் பதிகள் வாழி!

தெய்வீகப் புராணங்கள் படன மாகத்
தீந்தமிழில் இசையோ டுரைகள் சொல்வார்
ஐதிகக் கதைகளினால் கேட்போர் உள்ளம்
அழகான பக்திநெறி பதிய வைப்பார்
வைதீகக் கிரியைகளை வழிவ குத்த
வடமொழியில் முறையாகச் செய்து வைப்பார்
பொய்தீர் ஒழுக்கநெறி பேணிக் காப்பார்
ஸாம்பஸதா சிவகுருதம் பதிகள் வாழி!

கவிமாமணி
பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்

இணுவில்,
27-08-97.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்த்துரை

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. மனிதராகிய எமக்கு முதற்கண் பெற்றோரும் அடுத்தபடியாக குருவும் முன்னறி தெய்வமாக விளங்குகின்றனர். இவ் வழியிலே தான் மாதா, பிதா, குருவின் வழியாக தெய்வீக நாட்டமும் செயற்பாடுகளும் அமைகின்றன.

இவ் விதத்தில் உலகில் குருத்துவப்பணி உன்னதமாகவும், மிகவும் புனிதமானதாகவும் போற்றப்படுகின்றது. எமக்கு நல்வழி காட்டி குருவேயாகும்.

நல்ல குருவின் வழி காட்டலே நல்வாழ்விற்கு வழி சமைக்கின்றது. நீர்வையூரும் அந்தண குரு சிரேட்டர்களின் நல்வழி காட்டலுக்கும். நற்பணிகட்கும் நிலைக்களனாய் அமைந்திருப்பது பெருமைக்குரிய தாகும்.

சரித்திர பிரசித்தி வாய்ந்த ஆலயமான நீர்வேலி அரசகேசரி விநாயகர் ஆலய பிரதம குருவாக விளங்கும் சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள் தற்போது 70வது அகவை காணும் நேரத்தில் அவரது அடக்கமான உயர்ந்த குருப்பணிகளை நாம் பெருமையுடன் பாராட்டுவதுடன், தொடர்ந்தும் அவர் உள, உடல் நலங்களுடன் தம் பணி சிறப்பாக அமைய விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிவோமாக.

" அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் "

(தமிழ் மறை)

அ. மி. த. க. பாடசாலை,
புத்தூர்.
30-08-97

செ. செல்வநாயகம்
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# இன்று போல் என்றும் இனிதே வாழ்க!

சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள்; பிரதம
சிவாச்சாரியர்; ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் ஆலயம்;
நீர்வேலி. அனைவரும் அறிந்த முகவரி; எவர்க்கும்
தெரிந்தவர்! வளத்துடன் வாழ்க!

அன்னவர் தோற்றம், அவர் புகழ் சாற்றும்!
சிவந்த மேனியர்; சிவப்பிராமணர்;
மதகுரு மாண்பிற் கிலக்கணம் வகுப்பவர்;
உடையில், நடையில், சொல்லில், செயலில், பார்வையில்,
பண்பில், பணிவில், பார்ப்போர் எவரையும் பணிய
வைப்பவர்! வாழ்க! வாழ்க! பக்குவப் பொலிவுடன் வாழ்க!

இத்தகை வேதியர் வேடம், எம்மதத்தின்று, அருகிக்
கருகி வருகின்ற காலையும், இலைமறை காயாய்
ஒரு சிலர் இருப்பதை மறைக்கவும் முடியா;
மறுப்பதும் மடமை! இதற்குச் சான்றாய்
அமைபவர் — இவரே! வளர்க நின் தோற்றம்!

சிறுவனாயான் கண்ட காட்சி யொன்றினை இங்கெடுத்
தியம்ப ஆசையாயிருக்கு! இவரின் பேரன்,
சிலமிக்கவர்; அப்பா சுவாமிக்குரு, அவரின் நாமம்;
அவரின் துணைவியர், தையலம்மை; இருவரும்
நன்றாய் இணைந்த சோடி; இலட்சிய இறை
பணியாற்றிய இரட்டையர்! அரசகேசரியான்
அருளால் அரும்பிய தம் ஒரேயொரு பிள்ளையைக்
கோவையூர் ஆசான், ஸ்ரீ சுப்ரமண்ய — கார்த்திகேயக்
குரு கரம் பெறச் செய்து, மூத்த பிள்ளையாய்
முளைத்தவரே, எம் இன்றைய விழாவின்
நாயகராவர்! எம் அன்பிற்குரியவர்; எழுபதை
எளிதாய் தாண்டி விட்டனராம்!
சாம்ப சதாசிவன்! சற்குருவானவன்!
இஃதும் ஒரு பெறற்கரிய பேறுதானே!
பேரனைத் தொடர்ந்து ஆலயப் பணியில் அரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டாய் அடியவர் உவப்ப
அரனார் தொண்டினை அருமையாய் ஆற்றித்
தம் கனிஷ்ட புதல்வனையும் தம்முடன்
இணைத்துப் பூரணப் பொலிவுடன் இறை
பணி தொடர்கிறார்! மேலும் வளர்க!

வாழை யடி வாழையென வந்த திருக்கூட்டம்!
எழுபது வயதிலும் எழிலார்ந்த தோற்றம்!
முப்போதும் திருமேனி தீண்டுகிற பேறு!
தொடரட்டும் நும் பணி! பேறு பல
உண்டு. நம்பிக்கையிருக்கிறது — நம்பிக்கையாக!
மேலும் வளர்க! வளம் பல காண்க! இன்று
போல் என்றும் இனிதே வாழ்க!

வணக்கம்.

நீர்வேலி,
01-09-1997.

த. ந. பஞ்சாட்சரம்
ஆசிரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவப் பொலிவுடன் விளங்கும்
# சிவாச்சாரியார் சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள்

அவர்கள்

''புன்னை மாதுளை புங்கொதி மாபுளி
தென்னை கூடவிளந் தேனுகர் வண்டினம்
துன்னு பூக வனந்தொறும் வாழையோ
டன்ன தாழை யடர்ந்தது சோலையே''

என கவிஞர் கு. சிற்சபேசன் அவர்கள் ''நீர்வை நாட்டு வளம்'' என்ற தலைப்பிலான பாடலில் நீர்வேலிக் கிராமத்தின் இயற்கை வளத்தினை நன்கு சிறப்பித்துள்ளார். தேவாலயங்கள், வித்தியாலயங்கள், ஆதுலர் சாலைகள், நீர்நிலைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டமைந்தது நீர்வையம்பதியாகும்.

இக்கிராமத்திலே வாழ்ந்த, வாழ்கின்ற இந்து மக்கள் விநாயகர், சிவன், சக்தி, முருகன், வைரவர் ஆகிய கடவுளர்களுக்கு பெரிய அளவிலும், சிறியளவிலும் திருக் கோயில்களை அமைத்து வழிபாடியற்றி வருவது கண்கூடாகும்

நீர்வேலிக் கிராமத்தில் முதன்மைபெற்ற வழிபாட்டு மரபுகளுள் ஒன்றாக விநாயக வழிபாடு சிறப்புற்று விளங்குகின்றது. இவ் விநாயகர் ஆலயங்களுள் புராதனமானதும், பிரசித்திபெற்ற தலங்களுள் ஒன்றாகவும், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் விளங்குகின்றது.

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலின் பிரதம குருவான, சிவப்பொலிவுடன் விளங்கும் சிவாச்சாரியார் சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள் அவர்களது எழுபதாவது வயதுப் பூர்த்தியினையொட்டி அவர்களது சேவை நலன்களைப் பாராட்டியும் அவர்களைக் கௌரவித்தும், இன்னும் பல ஆண்டுகள் இவ்வுலகில் வாழவேண்டி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து நிகழ்த்தும் இவ்வைபவத்தினையொட்டி, ஈழத்து இந்து உலகமும் குறிப்பாக நீர்வேலிக் கிராமத்து மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைகின்றார்கள்.

இந்துப் பண்பாட்டு மரபிலே மூவகை வழிபாடுகளான குரு, லிங்க, சங்கமம் பற்றிக் கூறப்படுகின்றது. குருவைத் தெய்வமாகப் போற்றுதல் எமது இந்துப் பண்பாட்டு மரபு. தெய்வத்திற்கு அடுத்தபடியாக குரு வணங்கப்படுகின்றார். ''வாழ்க அந்தணர்'' என திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் போற்றுகின்றார்.

சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள் அவர்களது தோற்றமே என்றும் சிவப் பொலிவுடன் தான் விளங்கும். நீண்ட சரீரம். நெற்றியிலே திரிபுண்டரமாக திருநீறு விளங்கும். இவற்றின் மத்தியிலே சந்தனம், குங்குமம் இவரின் நெற்றியினை அலங்கரிக்கும். சரீரம் முழுவதும் திருநீறு பூசிய மேனியராகவும், அரையிலே வெள்ளை வேட்டியும், பல வர்ணத்திலான சால்வையும் அணி செய்து நிற்கும். கழுத்தில் சிவசின்னங்களுள் ஒன்றாக விளங்கும் உருத்திராக்க மாலையும் ஏனைய பல மணிகளாலான மாலைகளும், பூணூலும் அவரது மேனியினை அணிசெய்து நிற்கும் காட்சியானது என்றும் ''சிவப் பொலிவினை'' எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் அவர்கள் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிற் பிரதம குருவாக மட்டும் விளங்காது, இக்கிராமத்தில் அமைந்துள்ள ஏனைய தெய்வங்களின் கோயில்களுக்கும் பிரதம குருவாக இருந்து தனது பரார்த்த பூசையினை நிகழ்த்தி வருகின்றார். இக்கிராமத்து மக்களது இல்லறம் சார்ந்த கிரியை மரபுகளையும் முன்னின்று நடாத்தி வருகின்றார். நீர்வேலி தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒல்லை வேம்படி ஞானவைரவர் கோயில் பிரதம குருவாக விளங்கிவருகின்றார். இக்கோயிலின் மஹா கும்பாபிஷேகத்தினை 1987ம் ஆண்டு தலைமையேற்று மிகவும் சிறப்பாக நடாத்தி வைத்தார்.

சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள் அவர்கள் ஈழத்துச் சிவாச்சாரியார்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கிவருகின்றார் என்றால் அது மிகையாகாது. அத்துடன், இக்கிராமத்து மக்களுக்கு பல வகையிலும் முன்னோடியாக விளங்கிவருகின்றார். அடியார்களை ஒரே மாதிரி உபசரித்தல், இனிமையான பேச்சு, தொண்டு செய்யும் உள்ளம், திருமுறைப் பாராயணம் செய்தல், புராண படன மரபுகளைப் பேணும் திறன், அடக்கமான செயற்பாடு, எவருடனும் சினக்காத தன்மைகள் போன்ற இன்னோரன்ன பண்புகளையும் தன்னகத்தே கொண்டு, சிவப் பொலிவுடன் வாழ்ந்துவரும் குருக்கள் ஐயா அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து உலகுக்கும் இக்கிராமத்து மக்களுக்கும் பணிசெய்ய வேண்டுமென ஒல்லை வேம்படி ஞான வைரவப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

வணக்கம்

ஒல்லை வேம்படி,

ஞானவைரவர் கோவில் பரிபாலன சபை

நீர்வேலி தெற்கு,
29-08-97.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வேதியர் குலத்துதித்த சிவாச்சார்ய திலகம்

சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள் பாரத்துவாச கோத்திரத்திலும் ஆபஸ் தம்ப சூத்திரத்திலும் உதித்த திலகம் என்று சொன்னால் மிகையாகாது. வடமொழி யிலும், தென்மொழியிலும் தேர்ச்சி பெற்று இன்று சதாபிஷேகம் (70 ம் ஆண்டு நிறைவு விழா) கொண்டாடுவது பொருத்தம் ஆகிறது.

ஈழநாட்டின் சிகரமாய் விளங்கும் யாழ்ப்பாணத்தில் சைவமும், தமிழும் வளர்ந்து நிற்கும் நீர்வை என்னும் கிராமத்திலே அரசகேசரிப் பிள்ளையாருக்கு பணி செய்து கொண்டு வருகிறார். எத்தனையோ ஆலயங்களில் கும்பாபிஷேக மகோற்சவ கிரியைகள் செய்துள்ளார். அவர்களுடைய ஆஜானுபாகுவான தோற்றம் முகத்தில், உள்ளத்தில் நிகழும் தெய்வ சிந்தனையின் பிரதிபிம்பமாக எப்பொழுதும் வெளிப்பட்டு நிற்கும் தெய்வக்களை நெற்றி பொலிந்து விளங்குவதைப் பார்க்கும் பொழுது எனது பேரனார் மறைந்த முகாந்திரம் தி. சதாசிவஐயருடைய ஞாபகமே வருகிறது. அவ்வாறான தோற்றம் உடையவர்.

நீர்வையில் வந்துதித்த பிராமண குருமார், புலவர்கள், அறிஞர்கள், புத்திஜீவிகள் வரிசையில் சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்களும் ஒருவர். ஆகமக்கிரியைகளிலும் வைதிகக் கிரியைகளிலும் ஆற்றல் பெற்றவர். ''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' என்றவாறாக சிறப்புக்களைப் பெற்றவர். வடமொழியில் பல புத்தகங்களை வெளி யிட்டுள்ளார்.

சிவஸ்ரீ சாம்பசதாசிவக்குருக்களும் அவர் பாரியார் கௌரி அம்மாளும் சிறந்த விநாயகர் பத்தர்கள். குருக்கள் தம்பதியரும் அவர்களது பிள்ளைகளும் எல்லாம் வல்ல விநாயகர் அருளால் நீடூழி வாழ பிரார்த்திக்கிறேன்.

சுபமஸ்து

தி. குமாரசதாசிவசர்மா
இளைப்பாறிய புகையிரத
நிலைய அதிபர்

நீர்வேலி,
27-08-97.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

சதாசாரக் கிரியாமணி சிவஸ்ரீ கார்த்திகேச சாம்பசதாசிவக்குருக்கள் அவர்கள்

# அறநெறி நின்று வாழ்கின்றார்

திருவருளால் வாழ்வும், வளமும் பெற்ற நாடு எமது யாழ்ப்பாணம். சிவநெறியைப் போற்றியும், சைவ அநுட்டானங்களைப் பேணியும் வாழ்பவர்கள் யாழ்ப்பாணச் சைவ மக்கள். உலகிலே கட்டுப்பாடும் நல்லொழுக்கமும், ஆசாரசீலமும் கொண்டவர்களாக இந்நாட்டு மக்கள் வாழ்வதால் மேலை நாடுகளில் இவர்களுக்கு நன்மதிப்பும், கௌரவமும் உண்டெனப் பலரும் கூறுவர்.

திருக்கோவில்களை நல்ல முறையிலே பேணியும், சைவசித்தாந்த மரபைப் பாது காத்தும் வந்தவர்கள் இவர்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களே இவற்றுக்குத் தூய்மையான வழியைக் காட்டிச் சென்றுள்ளார் என்றால் ஏற்புடைத்தாகும். நாவலர் பிறந்த நாடு நம்நாடு என்று கூறுவதில் யாழ்ப்பாணச் சைவமக்கள் பெருமையடைகிறார்கள். ஒரு நாடு வாழவேண்டுமானால் சைவநெறி நிற்போர் தொகை பெருக வேண்டும். இந்த நம்பிக்கை சமயத்தலைவர்கள் அனைவருக்கும் என்றுமே உண்டு. முற்கால அரசர்கள் சிவநெறி நின்று அறநெறி பேணிவந்தனர் அதனால் அவர்கள் ஆட்சி சிறப்புப் பெற்றது.

> " அறம் பொருள் இன்பமான அறநெறி வாழாமற் புல்லி
> மறங் கடிந் தரசர் போற்ற வையகங்காக்கும் நாளில் "

என்பது சேக்கிழார் பெருமானின் திருவாக்கு மன்னர்களன்றி மக்களும் இந்நெறியில் தலைப்படவேண்டும் என்னும் கூற்றுக்கிணங்க அறநெறி நின்று வாழ்ந்தவர்களை நாம் பாராட்டவேண்டும்.

எமது சைவநெறி காலத்தால் மூத்தது, கருத்தாலும் மூத்தது சீலத்தால் மூத்தது, செம்மையால் மூத்தது என்பது உலகப் பேரறிஞர்களின் முடிவாகும்.

சைவசித்தாந்தப் பெருநெறியைப்பற்றி பெருமறிஞர்கள் "இது ஒரு உண்மையான வாழ்க்கைநெறி" என்று பாராட்டியுள்ளார்கள் "சைவநெறி பிழிந்தெடுத்த சாறு" என்பது தெட்டத் தெளிவாகும். இது வெறும் புகழ்ச்சியல்ல உண்மையும் வைராக்கியமும் பொதிந்த சொற்களாகும். இந்திய திராவிட அறிஞர்களின் முதன்மையான தேர்வுதான் "சைவசித்தாந்தம்" இது மிகவும் மதிப்புவாய்தது என்பது மேல் நாட்டறிஞர்களின் கருத்தாகும். மேலும் பன்னிரு திருமுறைகளும், பதினான்கு மெய்கண்டசாஸ்திரங்களும் பக்தி இயக்கத்துக்கு அடிப்படை அருள் நூல்களாகும். இந்நூல் கஉளப்பயின்று அதன் வழி நடத்தலே அகவாழ்வு பண்பட நாம் செய்யவேண்டியதாகும். எனவே உள்ளும், புறமும் பண்படுவதற்கு சமய விளக்கம் இன்றியமையாததாகும். சமய விளக்கத்தை நன்கறிந்து அந்நெறி வாழ்பவர்களே மனிதருள் மாணிக்கங்களாகப் பிரகாசிப்பார்கள். இந்நெறி வாழ்ந்த குருக்கள் ஐயா அவர்களும் ஒரு மாணிக்கமே.

நற்றாமரைக்குளத்தில் நல்லன்னங்கள் சேர்ந்தாற்போல் தொன்மையும், தெய்வீக நன்மையும் பொலிந்த நீர்வேலிக் கிராமத்திலே நல்ல சமயத் தொண்டர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவாசாரசீலர்களும், அந்தணப் பெருமக்களும் கல்விமான்களும் ஒன்று சேர்ந்து சமயப் பணியாற்றியுள்ளார்கள். அவர்களின் தூய்மையான பணியினாலேயே இன்றும் எமது கிராமம் போற்றப்படுகின்றது. இந்தவகையிலே குறிப்பாக ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர், அவர்கள் நினைவு கூரப்படவேண்டியவர்கள். ஏன்? அத்தியார் அருணாசலமும் எம்மால் மறக்கமுடியாதவர்.

மேலும், இப்பணியில் முன்னணி நின்ற எமது நினைவிற்கும் மதிப்பிற்குமுரிய வாத்தியார் ஐயா என்று அன்போடழைக்கப்பட்டு வந்த கார்த்திகேச ஐயா அவர்களும் அவர் மனைவி குப்பம்மா அவர்களும் செய்த நற்றவப்பயனாக அரசகேசரிப் பிள்ளையார் பேரருளால் பெற்றெடுத்த முதல்வனே சிவஸ்ரீ சாம்பசதாசிவக்குருக்கள் அவர்கள். இவர்கள் மேற்படி சைவசித்தாந்தத்தைக் கடைப்பிடித்து சைவ அநுட்டானங்களைப்பேணி ஆலயப்பணி செய்து வருவது போற்றுதற்குரியதாகும்.

இவ்வழியிலே வையகம் வாழ வழிகாட்டியாக விளங்கும் அந்தணர் குலத்தில்

" மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப் பொழுக்கம் குன்றக் கெடும் "

என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய நல்லொழுக்கத்தைப் பேணிக்காத்து வந்த குருக்கள் குடும்பம் என்றென்றும் போற்றப்பட வேண்டியதாகும்.

குருக்கள் ஐயா அவர்கள் அறநெறி வாழ்ந்து 70வது அகவை நிறைவுறும் நாளில் அவரது நற்பண்பு, நற்பணிகளைப் பாரட்டி, மேலும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து நற்பணியாற்ற எல்லா நலன்களும் வழங்கவேண்டுமென அம்பிகையைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

அன்பன். த. பரராசசிங்கம் (J. P.)

நீர்வேலி,
10–9–97.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௳

# வாழ்த்துரை

நீர் வளமும், நிலவளமும் நிறைந்த நீர்வையம் பதியில் பண்டைய மன்னன் அரசகேசரி வழிபட்ட பெரும் பதியில் கோயில் கொண்ட வேழமுகத்து விநாயகனைப் பூசிக்கின்ற பாக்கியம் பெற்ற அந்தணர் குலப் பெருந்தகை கா. சாம்பசதாசிவக் குருக்கள் ஐயா அவர்களை எழுபதாவது அகவைக்குள் புகுகின்ற வேளையில் வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்,

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்ற பொய்யா மொழிப் புலவர் வள்ளுவரின் வாக்குக்கு இலக்கணமான பெருந்தகை தயவு, தாட்சண்யம், அன்பு, அடக்கம், பொறுமை போன்ற குணங்களை அணிகலனாகக் கொண்ட ஐயா அவர்களை, இற்றைக்கு பதினைந்து ஆண்டுகளாக நான் சந்திக்கின்ற வாய்ப்பு பெற்றேன்.

என் திருமணத்தையும் அரசகேசரிப் பிள்ளையாரின் திருத்தலத்தில் ஐயா அவர்களே நிறைவேற்றி வைத்த பாக்கியம் பெற்றவன் யான் "ஐயா" என்ற சொல்லையன்றி அவர் பெயரை யாரும் குறித்துச் சொல்வதை நானறியேன். எப்போதும் எம் பெருமானின் திருமேனியை தீண்டுகின்ற பாக்கியம் வாய்க்கப் பெற்ற அவரின் வுஷ்டியப்த பூர்த்தி விழாவை தன் தந்தையார் முன்னிலையில் காணப்பெற்ற வாய்ப்பு பெற்றவர். வேறெவர்க்கும் இப்படியான பாக்கியம் கிடைப்பது அரிது.

"சதாசாரக்கிரியாமணி" என்ற பட்டத்தை தன் இளவயதிலேயே பெற்றுக் கொண்டவர், அவர் பட்டங்களையோ அன்றி பாராட்டுக்களையோ விரும்புபவரல்லர். கருமத்தில் கண்ணானவர். கும்பாபிஷேகமானாலும், சங்காபிஷேகமானாலும் அன்றி வேறெந்த விழாவானாலும் கிரியையாகிலும் சரி, ஐயா அவர்கள் முன்னின்று நடத்துவது கண்ணுக்கும் மனதுக்கும் இரம்மியமானது. அவரது தோற்றம், பொலிவு கண்ணிறைந்தது. முன்னரைப் போல அவரால் கருமமாற்ற முடியாவிட்டாலும் அவரது தொண்டை தொடர்ந்து ஆற்ற அவரைப் போன்றே அவரது மகனை எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் தந்திருக்கின்றார். அதுவும் எம்பெருமானின் அருட்பேறே.

தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும் என்பது போல நன் மக்களைப் பெற்று அவர்களும் பல்வேறு துறைகளிலும் மெச்சி நிற்பது போற்றத்தக்கது. ஐயா அவர்களின் தந்தையார் கார்த்திகேசு ஐயா அவர்கள் ஆயிரம் பிறைகண்ட ஆசிரியர். அவர் தன் தள்ளாத வயதிலும் சைவ ஆசாரத்திற்கு பெருமை தர திகழ்ந்தவர். என்றும் மக்களால் மறக்க முடியாதவர்.

இன்று சாம்பசதாசிவக் குருக்கள் ஐயா தனது எழுபதாவது அகவைக்குள் புகுகின்ற வேளை ஐயா தம்பதியரும், அவர் குடும்பத்தினரும் நீண்ட ஆயுள் பெற்று எம்பெருமானுக்கும், சைவத்திற்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்ற வேண்டும் என்று இறைஞ்சுகின்றேன்.

மேலும் ஐயா அவர்கள் பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றிற்கு உரை சொல்லுகின்ற விதமே தனியானது. மீண்டும், மீண்டும் கேட்க வேண்டும் போல் இருக்கும். குழந்தைகள் முதல் பெரியோர் வரை அதில் லயித்திருப்பது மறக்கமுடியாது. அவரது தொண்டு தொடர வேண்டும் என்று வாழ்த்தி ஈண்டும் அரசகேசரி விநாயகரை வேண்டுகின்றேன்.

187288

**ந. சிவசீலன்**
*யாழ்/விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி,*
*சமாதான நீதிவான்*
*(வடமாகாணம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அருள் நிறைந்த தவச் செல்வர்

நீர்வளம், நிலவளம் சூழ்ந்தது எமது நீர்வைத் திருப்பதி. இத்திருப்பதி தனிதே நித்திய மூர்த்தியாய் நெடி நிகுந்து எம் அல்லல் அறுத்து அருள் சுரந்துவருபவர் அரசகேசரி பிள்ளையார் ஆவர். அன்னவர் திருவடி தொழுது எக்கருமத்தையும் தொடங்குவோமாயின் அது சித்தியே சித்தியாகும். எங்கள் வாழ்வு ஏற்றம் பெற்றிடும், சிறுமை நீங்கிப் பெருமை பெற்றிடும். அன்பும் அறமும் பெருகிடும்.

இத்தகு பதியிலே அருள் மிகுந்தோங்க அடியார்க்கடியனாய் அரும் பணியாற்றிய எங்கள் தவச்செல்வர் பிரம்மஸ்ரீ சாம்பசதாசிவச் செம்மல் எழுபது அகவை எய்து கின்றனர். காட்சிக் கெளியார் கண்ணியம் மிக்கவர். கருணா மூர்த்தியாய் காட்சி தருபவர். கடுஞ் சொல் பேசாக் காரூண்ய சீலர், கணபதி தாஸராய்க் காலங் களிப்பவர்.

உள்ளக் கமலத்தில் உத்தமனார் அடிபதித்து தெள்ளூற்ற திருமறையின் சுவையுண்டு தெழிந்தெழுந்து தள்ளாவயதுவரை தன்னிகரில்லா பணிபுரிந்த எங்கள் தவச் செல்வச்சீலர் சாம்பசதாசிவக்குருக்கள் தாழ்பணிதல் எங்கள் நற்பேறே ஆகும்.

காலையிலே பூசை, கடும் பகல் வேளையிலே பூசை, மாலையிலே பூசை, என வேளை தவறாது வேதனம் தான் நோக்காது நாளொரு மேனியாய் நீடுழைத்த அன்னவர் மாண்பினை நாமறிவோம், நாடறியும் "பெரியையா" என்று பெருமையுடன் நாமழைக்கும் பெற்றியைப் பெற்றவர் எங்கள் நாயகர்.

வாழையடி வாழையாய் வேழமுகத்தவரின் மெய் தொட்டு நீராட்டி மலர்தூவி விளக்கேற்றித் தித்திக்கும் பாணியிலே திருமுறைகள் ஓதிவரும் பரம்பரை பெரியையா. பரம்பரை காத்திகேய வேதியர் கையளித்த அருட்குமரர் சாம்பசதாசிவக் குருக்கள் தன்னைத்தான்னொத்த அருட்குமரர் தவப்புதல்வன் சோமதேவக் குருக்கள் லம்போதரரின் லாவண்யத்தைக் கண்டு களித்துக் கடமை செய்திடத் தந்த சிறப்பினைக் கண்டு மகிழ்கிறோம்.

நெறியுண்டு தொந்திக் கணபதியின் தோற்றப்பொலிவுடனே சிந்தை மகிழ்வுடனே சிரித்த முகத்துடனே நிமிர்ந்த நடையுடனே நேர்கொண்ட பார்வையுடனே பண்பின் சிகரமாய் விளங்கி வரும் எங்கள் பெரியையா மாண்பு மிகு சாம்பசதாசிவக் குருக்கள் நீடினிது வாழ்க என வாயார வாழ்த்துகின்றோம்.

க. தர்மலிங்கம்
சமாதான நீதிவான்
வலி. கிழ. ச. ச. சமாசத் தலைவர்
நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆசியுரை

விநாயகப்பெருமான் திருவருளை முன்னிட்டு கார்த்திகேச ஐயர் சாம்பசதாசிவக்குருக்கள் 15-வயது தொடக்கம் குலதெய்வமாகிய விநாயகப்பெருமானுக்கு நியதி தவறாமல் நித்திய பூஜை செய்தும் 1952 ஆண்டு தொடக்கம் 1990 ஆண்டு வரை மஹோற்ஸவங்களும் சிறப்பாகச் செய்தும் சிறுவர்களுடைய நலன்கருதி விநாயக சகஸ்ரநாமம், சிவபூஜாகிரமம், சிவசகஸ்ரநாமம் முதலிய நூல்களை வெளியிட்டது மிகவும் போற்றத் தகுந்ததாகும். அன்னார் இன்னும் பல காலம் வாழ்ந்து இது போன்ற நூல்களை வெளியிட்டு இறைதொண்டு செய்யுமாறு எப்பெருமானை வணங்கி (தங்கள் குடும்பத்தினர்கள் யாவர்க்கும்) ஆசிகூறுகிறேன்.

சுபம்.

வை. மு. பரமசாமிக் குருக்கள்
பிரதிஷ்டா கிரியா கலாபமணி

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
20-09-97.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தாத்தாவே வாழி வாழி!

1. நீர்வளமும் நிலவளமும் நிறைந்த நீர்வேலியில்
நிர்மலமாய் நிறைந்து நின்ற நிமலனாய்
நிமலரூபமாய் நிமிர்ந்து நினைவுகளை
நிலைநாட்டிய தாத்தாவே வாழி வாழி.

2. பார் புகழும் பதிதனிலே
பண்புடனும் மாண்புடனும்
அரசகேசரியானின் துணை கொண்ட
அரவணைப்பில் வாழ்கின்ற தாத்தாவே வாழி வாழி.

3. விக்கினங்களைத் தீர்க்கும்
விநாயகனின் உடலெடுத்து
அரசகேசரியானின் அரவணைப்பில்
அன்பை வேதமாகச் சொரிந்த தாத்தாவே வாழி வாழி.

4. இளமையிலே கற்று
இனிமையாய் வாழ்ந்து
இல்லற வாழ்வையும்
இனிதாய் நடத்துகிற தாத்தாவே வாழி வாழி.

5. அத்திமுக விநாயனை
நித்தம் நினைத்து
சித்த மகிழ்வோடு
வாழ்கின்ற தாத்தாவே என்றென்றும் வாழி.

6. ஐயிரண்டு நாள் வளர்ந்த வெண்மதியம் தோன்றி
அன்பு சொரிவது போல
தொட்டிலில் துயிலும் நாள் தொடக்கம்
அன்பைச் சொரிந்த வண்ணம் உள்ளார்.

7. எழுபதாம் அகவையினிலே
எழுந்து நிற்கும் தாத்தாவின்
அரவணைப்பில் வளர்ந்த யான்
அணையாத தீபமாய் பிரகாசிக்கிறேன்.

சோ. வரப்பிரதன் (பேரன்)
(6ம் ஆண்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— OM —

# LET'S FERVENTLY FELICITATE!

Seventy years of fruitful living on this Universal Casual Ball is an occasion most divine! This is the Bibilical span allotted to man by His Maker. Hence the celebration of this event by anyone is something special and spectacular especially by a Priest whom everyone knows as the Chief High - Priest of the SRI ARASAKESARI PILLAIYAR TEMPLE, NEERVELY, THE VENERABLE KARTHIKESA - SAMBASATHASIVA KURUKKAL.

For those who have known Kurukkal as a little child, as a school boy, barely out of his teens and assuming the role of a full - fledged priest nearly half - a - century ago on the demise of his grand-father, he has been an epitome of what a priest should be in the SAIVA TRADITION of Hinduism serving his congregation to the best of his ability with an unaffected grace; far from the madding crowd, winning the reverence of all. Even those who came to scoff him stood to pray!

His charming personality, well-chiselled brahminical features, humility and the Bhakthi of his calling are all inherent in him. The devotion and sanctity with which he appears at the Shrine and attends to his many duties places him high in the estimation of all the devotees.

We are passing through an era of modernity which has begun to erode our spiritual heritage; there's a kind of dilution, stuntedness and inadequacy all round; values are fast changing! Gurus of the image and attributes of SRI SAMBASATHASIVA KURUKKAL are wanted more and more if THE GLORIES OF SAIVAISM are to be preserved and furthered.

Unlike priests in other religions, a Saiva Priest comes from a distinct caste; to be frank, not every Tom, Dick and Harry could take to the Saiva priest hood; a Saiva Priest's day begins even before the sun rises; he has his priestly duties throughout the day; he has to be on night - long vigil; it is physically and mentally tiring and taxing; he is expected to bathe more than once; keep away from many practices that a man revels in doing; he has many restrictions; he is tied down to vedic rules; he has to self - abnegate many things; his conduct is critically watched by the congregation. When the life of a Saiva Priest is assessed in this light, OUR KURUKKAL HAS LIVED UP TO THE HIGHEST STANDARDS; TO THE NOBLEST TRADITIONS OF PRIESTHOOD FOR FIFTY LONG YEARS! That indeed is a splendid record very few can excel!

We take this occasion to offer OUR KURUKKAL Our Respectful Greetings and Salutations and MAY HE LIVE TO SEE A THOUSAND AND ONE FULL - MOONS SERVING THE LORD AND MINISTERING TO OUR SPIRITUAL NEEDS. WE PRAY FOR HIS SUMMERS'S ABUNDANCE AND WINTER'S SUPPLY! MAY HIS HOME BE BLESSED.

— A Pilgrim —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்மஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள்

அவர்களின்

# குரு பரம்பரை

— தி. நடனசபாபதி சர்மா

பிரம்மஸ்ரீ கார்த்திகேசக் குருக்கள் சாம்பசதாசிவக் குருக்கள் அவர்கள் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலின் நித்திய நைமித்தியக் கடமைகளைப் பொறுப்பேற்று ஏறக்குறைய அரை நூற்றாண்டுகளுக்கு அண்மையாய் இருக்கும்.

கோபுர கலசத்தில் சூரியஒளி படரும்போது ஏற்படுகின்ற ஒளிப்பிரவாகம் போன்றது அன்னாரின் தேக காந்தி. தங்க நிறமும், தங்க விமானத்தில் நிலாக் காய்ந்ததையொத்த பிள்ளைச் சிரிப்பும் தண்ணளியான பேச்சும், அண்டியவரை அன்போடு உபசரிக்கும் பண்பும், சீரிய ஒழுக்கமும், உயர்ந்த பண்பும் அவரை ஒரு ஆதர்ச சிவாசாரியாராகக் காட்டப் போதுமானவை. அவரது உருவத்திலே சிவாசாரிய லட்சணங்கள் மண்டிக்கிடக்கின்றன. இந்த மாதிரியான சீரிய லட்சணங்கள் எல்லாம தன்னகத்தே கொண்டிருந்தமையாலேயே அரசகேசரிப் பெருமான் அவரைத் தமக்கு அர்ச்சனை செய்யும்படி வைத்துக்கொண்டார்.

இவர் சிறுவயதிலே, மாயவரத்திலிருந்து இங்கு வந்து கோப்பாயில் வசித்து வந்த பெருந்தகை, தெய்வத்திரு பிரம்மஸ்ரீ ஸ்ரீனிவாச சாஸ்திரிகளிடம் சமஸ்கிருத பாடமும் வேதாத்யயனமும் கற்றுக் கொண்டார். உரிய வயது வந்ததும் மணமுடித்து தமது மாதாமஹரான இராமசாமிக்குருக்கள் (அப்பாச்சாமிக் குருக்கள்) பார்த்துவந்த அரசகேசரிப் பிள்ளையாரின் பூஜா காரியங்களையும், ஊர்க்காரியங்களையும் பார்த்ததுமன்றி, நீர்வேலியின் சுற்று வட்டாரத்திலமைந்த அச்செழு, சிறுப்பிட்டி, புத்தூர், உரும்பராய் போன்ற அயல் கிராமங்களில் கோவில் கும்பாபிஷேகம், துவஜாரோகணம் மற்றும் விசேஷ நைமித்தியக் கிரியைகள் யாவையும் பார்த்து வந்தார். இன்று அயல் கிராமங்களில் காணப்படும் கோவில்களில் பல இவரால் கும்பாபிஷேகம் பண்ணப்பட்ட ஆலயங்களேயாம். பிற்காலத்தில் இவரது இரண்டாவது புத்திரர் சோமதேவக் குருக்களுடைய உதவியும் வாய்த்தபின் இவரால் ஈடேற்றப்பட்ட கோவில் கைங்கரியங்கள் மிகப் பல. நீர்வேலியும் அதன் சுற்று வட்டாரமும் இவரது சமய சாம்ராச்சியமாய் விளங்கிற்றென்றால் மிகையாது.

ஒருவருக்கு அவரது கல்வி, ஞானம் தோற்றம் அழகு இவையெல்லாம் அவரவர் கர்மவினைகளுக்கேற்ப பிரதானமாக அவரவர் மூதாதையரிடம் இருந்து கிடைப்பனவே. இது மானிடவியலாளர் ஏற்றுக்கொண்ட உண்மை. நூலைப்போல சீலை; தாயைப்போல பிள்ளை என்று இதை சிலசமயங்களில் கிராம வழக்காகக் கூறுவர். ஒருமனிதனுடைய பண்புகளில் காணும் சிறப்புக்கள் ஒரே தலைமுறையில் கிடைப்பனவல்ல. அவை எத்தனையோ தலைமுறைகளில் சந்ததி வழியாகத் தேறித்தேறி வந்து சித்திப்பனவாகும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியெல்லாம் சிந்திக்கும் போது பிரம்ம ஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்களுடைய குருபரம்பரையைப் பற்றியறிய ஆவல் உண்டாவது இயல்பே. இவரது முன்னோர். யார் அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பன போன்றவற்றை அறிய யாவருமே விரும்புவர். அதிர்ஷ்டவசமாக வேறு எந்தக் குருபரம்பரையினருக்கும் கிடைக்காத வாய்ப்பு இவரது குருபரம்பரையினருக்குஅமைந்துவிட்டது. மேலும் இவரது குருபரம்பரைச் சரித்திரம் வாசிக்கும் பொழுது சுவாரஸயமாகவும் இருக்கின்றது.

மற்றவர்கட்கு கிடைக்கப்பெறாத வாய்ப்பு என்று கூறப்பட்டது என்னவெனில், இவரின் முன்னோர்களது வரலாறு செப்பேடுகளில் எழுதப்பட்ட சாசனங்களாக கிடைத்துள்ளமையாலேயே.

தென்னிந்தியாவில் திருவுத்தர கோசமங்கையெனும் ஒரு பழம்பெரும் தலமுண்டு. அங்கே மங்களேஸ்வர சுவாமி கோவில் கொண்டிருக்கிறார். அந்தக் கோவிலில் பூஜா காரியங்களை 32 குருக்கள் குடும்பத்தினர் வேதாக மோக்தமாக மிகவும் சிறப்புடன் நிகழ்த்தி வந்தனர். இதனை அவதானித்த அன்று அத்தேசத்திற்கு அரசனாயிருந்து இராச்சிய பரிபாலனம் செய்த சோமசுந்தர சேதுபதி மகாராசா மிக்வும் மகிழ்ச்சிகொண்டு அவர்களின் சேவையினைப் பெரிதும் மெச்சி, அவர்களுக்கு அந்தக் கோவிலின் பூசை உரிமைகளை சூரிய சந்திரர் உள்ளவரை அவர்களுக்கு உரிமையாக்கி, அவர்கள் வாழ்வதற்கு கிராமங்களையும் கொடுத்து, இவற்றையெல்லாம் அழியாது செப்பேட்டில் எழுதிச் சாசனஞ் செய்துவைத்தான். அந்தச் செப்பேட்டில் காணப்பட்ட சாசன வசனங்களை இக்கட்டுரையின் அடியில் கொடுக்கிறோம்.

சோமசுந்தர சேதுபதி மகாராசா இருந்தகாலம் தென்னகமெங்கும் சைவ மறுமலர்ச்சி தோன்றிப் பரவிய காலம். கறையான் புற்றினால் மூடுண்டு சிதம்பரத்தில் அழிந்து கொண்டிருந்த மூவர் தேவாரங்களையும் நம்பியாண்டார் நம்பி மீட்டு உலகுக்கு அளித்ததுவும் அவையெல்லாம் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டதுவும் ஏறக்குறைய இந்தக் காலகட்டத்திலேயாம். நாயன்மார் காலத்தையடுத்து வந்த நூற்றாண்டுகளில் பழமையான ஆகமங்கள் எழுச்சிபெற்றன. தென்னிந்தியாவில் பலநூறு கோவில்கள் சிவாகம முறைப்படி கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டன. சோழ பல்லவப் பேரரசர்களால் சைவம் பேணப்பட்டு, சைவமரபெல்லாம் பரந்துபட்டு தமிழகம் முழுவதும் ஒரு உன்னத நிலையில் இருந்தது.

திருவுத்தரகோச மங்கையில் மங்களேஸ்வர சுவாமிக்கு பூசைத் தொண்டு செய்தவர்களுள் காஞ்சிபுரம் கல்யாண சுந்தரக் குருக்களின் மகனான சிவசுப்பிரமணியக் குருக்கள் ஒருவர். ஒருநாள் இவரும் வேறு பல குருமாரும் அரசனைச் சந்திக்கச் சென்றபோது, சிவசுப்பிரமணியக் குருக்கள் அரசன்மேல் சம்ஸ்கிருத கீர்த்தனங்களைப் பாடினார். மற்றக் குருமாருக்கு இவ்வளவு பாண்டித்திய மிருக்கவில்லை. பெரிதும் மகிழ்ந்த மகாராசா சிவசுப்பிரமணியக் குருக்களை தலைமைக் குருக்களாக நியமித்தார்.

மேலே கூறப்பட்ட காஞ்சிக்கலியாண சுந்தரக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்களே சாம்பசதாசிவக் குருக்களின் முதலாவதாக அறியப்பட்ட மூதாதையராவர். சுப்பிரமணியக் குருக்கள் என்ற இந்தப் பெயரைப் பின்வந்த சந்ததியினர் பலரும் தம்மக்களுக்கு வைத்திருப்பதைக் காணலாம்.

இந்த முப்பத்திரண்டு குடும்பத்தைச் சேர்ந்த குருமாரும் இடைவிடாது பதினைந்து தலைமுறை காலமாக மங்களேஸ்வரப் பெருமானின் பூஜாகாரியங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். இப்படி யிருக்கும் நாளில் உள்நாட்டுக் கலகங்கள் தொடங்கின. எங்கு கலகம் ஏற்பட்டாலும் முதலில் பாதிக்கப்படுவது சான்றோரும் ஆலயங்களுமே! இது நாம் கண்டறிந்து பட்டறிந்த உண்மை!! இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக் கலகங்களினால் கிராமங்களிலிருந்து கோவிலுக்கு சேகரிக்கப்படும் நெல், தேங்காய், நெய் முதலிய சம்பாரங்களைச் சேமிக்க முடியாமலும் குருமார் நடமாட முடியாதவாறும் மற்றும் இயல்பானநடை முறைகள் பல பின்பற்றப்பட முடியாமலும் மங்களேஸ்வரப்பெருமானின் பூசைக்குத் தடங்கல் ஏற்பட்டு கொடுமைகள் குவிந்து எங்கும் சீர்குலைந்து அலங்கோலமான நிலைமை உருவானது.

மங்களேஸ்வரப் பெருமானுக்குக் குருத்துவத் தொண்டுகள் ஆற்றிவந்த பிராமணர்களுள் எம்பெருமானின் திருநாமத்தையே பெற்றோரினால் சூட்டப்பட்ட மங்களேஸ்வரக் குருக்கள் என்ற பெயருடைய பிராமணோத்தமர் ஒருவர் இருந்தார். நாட்டில் இவ்வாறாகக் கலகம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, மங்களேஸ்வரக் குருக்களும் மற்றும் குருக்கள்மாரும் அரசனை அடைந்து நாட்டு நிலைமையையும், கோவில் கருமங்கள் செய்யமுடியாமல் ஏற்பட்ட நிலைபரங்களையும் எடுத்துக்கூறி கோவிலையும் குருக்கள் குடும்பங்களையும் காப்பாற்ற அரசனென்ற வகையில் அவனைத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பலவாறு கேட்டும் மன்னன் குருக்கள்மார் கொடுத்த அபாயக்குரலைக் கேட்டும் மன்னனது கடமைப்படி அபயமளிக்காமல் வாழாவிருந்தான்.

மன்னனோ இந்தக் கலகங்களை அடக்கப் போதிய படைபலமற்றவனாய் திராணியற்றவனாய் குருமாருக்கு எவ்வித ஆறுதலுங் கூறாது தன்பாட்டிலே ஒன்றும் அறியாதவனாக இருந்தான்.

மங்களேஸ்வரக் குருக்கள் மனமுடைந்த நிலையில், மங்களேஸ்வரப் பெருமானுக்கு தான்செய்த சிவப்பணிக்கு தடையேற்பட்டதேயென மிகவருந்தி, மங்களேஸ்வர சுவாமியின் சந்நிதானத்தையடைந்து அழுது புலம்பி அவர் பாதங்களில் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கி] கண்ணில் வழிந்த கண்ணீரையோ மனத்தில் வந்த வேதனையையோ அடக்க முடியாமல் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக சுவாமியை விட்டுப் பிரியமனமில்லாதவராய் உத்தரகோச மங்கையை விட்டு நீங்கினார். அப்பொழுது அவருடன் அவரது மனைவியாரும், சுந்தரேஸ்வரக் குருக்கள் என்பவரும் வேறுமிரண்டு குருக்கள்மாரும் இவர்களுடன் உத்தரகேசமங்கையை விட்டு நீங்கினர். உத்தரகோசமங்கையில் இனித்தொடர்ந்து இருக்க முடியாது என்பதை ஐயந்திரிபற ஆராய்ந்து, சிலகாலத்திற்கு கலகம் அடங்கும்வரை வேறெங்காவதுபோய் இருந்துவிட்டு கலகம் அடங்கியதும் திரும்பவும் உத்தரகோச மங்கைக்குத் திரும்பலாம் என்ற எண்ணத்தோடு, அங்கிருந்து புறப்பட்டு இராமேஸ்வரம் வந்தடைந்தனர்.

அங்குவந்து தங்கியிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து அங்கே தங்கியிருந்த முத்துமாணிக்கச் செட்டியாரைச் சந்திக்க நேர்ந்தது. முத்துமாணிக்கச் செட்டியார் தான் குளக்கோட்டரசனால் காரைதீவு வியாவிலில் கட்டிமுடிக்கப்பட்ட ஐயனார் கோயிலுக்கு குருக்கள்மாரைத் தேடி இந்தியாவுக்கு பயணம் வந்த வழியில் இராமேஸ்வரத்தில் தங்கியிருப்பதாகக்கூறி மங்களேஸ்வரக் குருக்களது வரலாற்றையும் இன்னது என்று கேட்டறிந்து, இது திருவருளின் செயல் எனத் தெளிந்து, மங்களேஸ்வரக் குருக்களைத் தன்னுடன் யாழ்ப்பாணத்திற்கு வரும்படி வருந்தியழைத்தார். மங்களேஸ்வரக்குருக்களும் அதற்கிசைந்து காரைநகரையடைந்து வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைத்தார்.

இந்த மங்களேசுவரக் குருக்களே சாம்பசதாசிவக்குருக்களின் முற் சந்ததியினரில் முதன் முதலில் ஈழத்துக்கு வந்தவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மங்களேஸ்வரக் குருக்களின் ஐந்தாவது சந்ததியில் வந்த சுப்பிரமணியக் குருக்கள் என்பவருடைய ஐந்தாவது சந்ததியைச் சேர்ந்தவரே சாம்ப சதாசிவ குருக்களின் தந்தையாரும், கோப்பாய் நாவலர் பாடசாலையின் அதிபராக நீண்டகாலம் ஆசிரியப் பணியாற்றிய பெருந்தகை பிரம்மஸ்ரீ. சுப்பிரமணிய குருக்கள் கார்திகேச ஐயர் அவர்கள். அந்தக்காலத்திலேயே அதாவது அந்தணர்கள் அரசசேவையில் நுளையாத மிகப்பழைய காலத்திலேயே ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்று வெகுவிரைவிலேயே அதிபராக உயர்ந்தார். இவர் தமிழ், கணிதம், ஓவியம் இவற்றில் புலமை மிக்கவர். புராண படனத்தின் போது பயன் சொல்லும் திறமை மிக்கவர், இவர் உவாத்திமைப் பணியிலிருந்ததனால் ஒரு சிவாசாரியராக வராவிட்டாலும் சிவதீட்சைபெற்று சிவபூஜா துரந்தராக இருந்ததோடு, அரசகேசரிப் பிள்ளையார் ஆலயப்பூஜை காரியங்களில் பங்கு பற்றி அதன் நிர்வாகத்திற்கு உதவிபுரிந்தவர். மேலும் தமது மூத்தமகனான சாம்பசதாசிவக் குருக்களையும் அந்தக் காலத்தில் அந்தண குடும்பங்களிலிருந்த அரசசேவை மாயையில் மூழ்கி அரசாங்க உத்தியோகத்திற்குப் படிப்பிக்காமல் அரசகேசரிப் பிள்ளையாரின் முழுநேரத் தொண்டுக்கு அர்ப்பணித்த பெருமையுடையவர். இவ்வாறான எழுச்சி மிக்கதும், பூர்வீகப் பெருமையும், பரம்பரை மகிமையும் சிறப்பும் வாய்ந்த இந்த அந்தணர் குலத்தில் வந்த எமது சாம்பசதாசிவக் குருக்கள் தம்மூதாதையர் போல் எல்லாப் பெருமைக்கும் உரியவர் என்பது வெள்ளிடைமலை, அவர் நீண்டகாலம் வாழ்ந்து இறைபணி இயற்ற எல்லாம் வல்ல இறைவன் அருளுவானாக.

## மகாராசாவினால் கொடுக்கப்பட்ட செப்புப்பட்டய சாசனம்

திரு உத்தரகோசமங்கை யென்னுந் திருத்தலத்திலிருந்து மங்களேஸ்வர சுவாமிக்கு இப்போ பூசைசெய்கிறவர்கள் முப்பத்திரண்டு குருமார்கள். இந்த முப்பத்திரண்டு குருக்கள்மாருக்கும் சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னால் குருக்கள்மார் முப்பத்திரண்டு பேருக்கும் ஒவ்வொரு செப்புப் பட்டயம் கொடுக்கப்படுகிறது. செப்புப்பட்டயத்திலெழுதப் படுகிற விஷயம் என்னவானால்;-

மங்களேஸ்சுவரர் துணை.

கலியப்தம் நாலாயிரத்து நானூறு. சாலிவாகன சகாப்தம் ஆயிரத்திருநூற்றைம்பத்தொன்று. பிரபவாதி வருஷம் முப்பத்திரண்டாவது விளம்பி வருஷம் சித்திரை மாதம் இருபத்தைந்தாந் திகதியும் திங்கட்கிழமையும் சோதி நட்சத்திரமும் பூருவபக்கத் திரயோதசியும் மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழுதப்படுகிற சாதனம்:-

திரு உத்தரகோசமங்கை யென்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்ற மங்களேஸ்சுவரசுவாமி கோயிலுக்கு இப்போ முதற் பூசைப்பங்காளராக இருக்கிற காஞ்சிபுரம் கல்யாணசுந்தரக் குருக்கள முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக்கள், முதல் ஸ்தானிகராகவும் மற்றவர்கள் தங்கள் தங்கள் பூசைப் பங்கு முறைப்படி ஸ்தானிகர்களாகவும் மகாராசாவாகிய என்னால் தத்துவங் கொடுக்கப்படுகிறது.

இன்று முதலாக சகலவிதமான காரியங்களையும் செய்யவும், செய்விக்கவும் தத்துவம் கொடுக்கப்படுகிறது, மேற்படி கோயிலிலேயுள்ள ஆபரணம் முதலாக சகலவிதமான சாமான்களும் கஜானாப் போக்கு முதலிய திறவுகோல்களும் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது. இன்று தொடக்கம் மேற்படி கோயிலிலே பணிவிடை செய்கிறவர்கள் எல்லோரும் பூசைசெய்கிறவர்களும் ஸ்தானிகர்களுமாயிருக்கிற குருக்கள்மார் கட்டளைப்படி நடக்கவேண்டும். மேற்படி கோயிலுக்குரிய பூமியும் இவர்களாலேயே செய்விக்கப்படவேண்டும். இவர்களுக்கு மங்கள புக்களமென்னும் கிராமத்தை சீவியத்திற்காகக் கொடுக்கிறேன். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குக் கோயிலிலே சம்பளம் கிடையாது. இவர்கள் மங்கள புக்களமென்னும் கிராமத்தை பூசைப்பங்கு ஸ்தானிகர் பங்குபோல முப்பத்திரண்டு பங்காகப் பகிர்ந்து கொள்ளவேண்டியது. இவர்களினால் ஒருகாலத்திலும் கிரயத்திற்குக் கொடுக்கப்படாது வாங்குகிறவர்களுக்கும் இராசசபையிலே தண்டம் விதிக்கப்படும், மற்றப் பணிவிடைகாரர்களுக்கும் இவர்களாலேயே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

எப்பொழுதும் இவர்கள் மகாராசாவுக்கு விபூதிப்பிரசாதம் அனுப்பவேண்டியது. இந்தப் பட்டயத்தை சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னாலும் என்னுடைய வம்சத்தினராலும் எந்தக் காலத்திலும் இராமநாதபுரத்தையும் திரு உத்தரகோசமங்கையையும் இராச்சிய பரிபாலனம் செய்கிற இராசாக்களாலும் இந்தப்பட்டயத்தை அழிக்கப்படாது. மேற்படி கோயிலின் பூசைப் பங்காளராகவும் ஸ்தானிகர்களாகவும் தத்துவம் பெற்ற குருக்கள்மார்களுக்கு இந்தப் பட்டயமானது அவரவர்கள் சந்ததி உள்ள வரைக்கும் சூரிய சந்திரர் உள்ள வரைக்கும் விபூதி உருத்திராட்சம் அழியாமல் இருக்கும்வரைக்கும் இந்த பட்டயமானது அழியாமல் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது.

இந்தப் பட்டயத்தை ஒருவராலும் அழிக்கமுடியாது. இதிலே என்னுடைய கையெழுத்தும் வைக்கிறேன்.

இங்ஙனம்

சோமசுந்தர சேதுபதி மகாராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சைவ சமய மரபும் சிவாச்சாரியாரும்

— பேராசிரியர் வி. சிவசாமி —

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ள சமயம் சைவசமயம், சைவமெனில சிவசம்பந்தமானதெனப் பொருள்படும். சிவம் எனில் மங்கலம், நன்மை, மகிழ்ச்சி, செழிப்பு, பேரின்பம் (முத்தியின்பம்) எனப் பொருள்படும். இத்தகைய கருத்துக்களைக் கொண்டிலங்கும் சொல்லினால் இறைவனை அழைத்து வருவது மிகச்சிறப்பான அமிசமே. சிவம் – சைவத்தொடர்பினைக் காராணாகமம் "சிவம் சைவத்தையும், சைவம் சிவத்தையும் தோற்றுவித்தன. (சிவனேஸ்தாபிதம் சைவம், சைவேனஸ்தாபிதம் சிவம்)" எனக்கூறும். இச் சைவசமயம் எப்போது தோன்றிற்று? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? இவ் வினாக்களுக்கு விடையளிக்க முடியாது. இது ஸநாதனதர்மமாகத் (என்றுமுள்ள தர்மமாக) திகழ்கின்றது. இதன் மரபும் மிகப் பழைமையானது.

இச்சைவமரபு காஷ்மீர சைவமரபு, வீரசைவமரபு, தமிழகத்துச் சைவமரபு என மூன்று பிரதான மரபுகளைக் கொண்டதாகும். இவற்றுள்ளே மூன்றாவதான தமிழகத்துச் சைவமரபிலே முக்கியமான இடம் வகிக்கும் சிவாச்சாரியார் பற்றிச் சில நூல்கள் குறிப்பாகச் சைவாகமங்களை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாகக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆச்சாரியர் எனும் பதம் உயர் நிலையுள்ள ஆசிரியரை - குருவைக் குறிக்கும் பதமாகும். ஆச்சார்ய எனும் வடமொழிப் பதம் தமிழிலே ஆசிரியர், ஆசான் என மருவிவந்துள்ளது. வடமொழியிலே ஆச்சார்ய எனும் சொல் ஆசாரம் (ஒழுக்கம்) எனும் சொல்லுடன் நெருங்கிய தொடர்புடையது. இச்சொல்லுடன் சிவ எனும் சொல்லும் சேர்ந்தே சிவாச்சார்ய என சொல்லுருவாக்கப்பட்டுள்ளது. எனவே வேர்ச் சொற்களின் கருத்து அடிப்படையிலே நோக்கும் போது சிவ சம்பந்தமானவரும், ஒழுக்கமுடையவருமான ஓர் உயர்ந்த மனிதனையே இது சுட்டுவது தெளிவு. சிவாச்சாரிய எனும் பதத்திற்கு சிவனைப் பூசிக்கும் அல்லது பின்பற்றும் ஆசான், சிவனிலிருந்துதோன்றிய ஆசான் (இக்கருத்து காரணம், காமிகம் முதலிய ஆகமங்களிலே வருகின்றது.), சிவனின் (இறைவனின்) நோக்கத்தை நிறைவேற்றுபவர், செயற்படுத்துபவர், சிவன்சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்தவர், சிவன் வடிவமாக விளங்கி மற்றவர்களை நல்வழிப்படுத்துபவர், எனப்பல பொருள் கூறலாம். எவர் எக்கருத்தினை முதன்மைப் படுத்தினாலும், மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் அனைத்திற்கும் இப்பதம் இடமளிக்கின்றது.

இறைவனை வழிபட்டு முத்தியடைதலே சைவசமயத்தின் பிரதான இலக்காகும். இவ்வழிபாடு (பூஜா) ஆத்மார்த்தம் (குறிப்பாக ஒருவர் தனக்காகவே தான் வீட்டிலோ வெளியிடத்திலோ செய்யும் பூசையாகும்) பரார்த்தம் (ஒருவர் இங்கு குறிப்பாகச் சிவாச்சாரியர் மற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகளுக்காகச் சிறப்பாகக் கோயிலிலும், பிற இடங்களிலும் செய்யும் பூசை) என இருவகைப்படும். இவ்விருவகைப் பூசைகளையும் செய்வோர் சிவனிலிருந்தே தோன்றியவர்களாக இருக்கவேண்டும் காரண, காமிகம் முதலிய ஆகமங்கள் கூறும். குறிப்பாக பரார்த்த பூசைசெய்யும் சிவாச்சாரியார்கள் ஆதிசைவ மரபினர் ஆதி சிவனிலிருந்து தோன்றியவர்கள் என இந்நூல்கள் கூறும். மேலும் இவர்களை பிரமாவில் இருந்து அன்றி சிவனிலிருந்தே தோன்றியவர்கள் என இந்நூல்கள் தெளிவாகக் கூறுவதுடன் இவர்களே பரார்த்த பூசை செய்வதற்கு அருகதையுடையவர்களென அழுத்திக் கூறுகின்றன.

தமிழகத்துச் சமஸ்கிருத அறிஞர்கள் (சிவாச்சாரியார்கள் உட்பட) தமது தனித்துவத்தினையும், முக்கியத்துவத்தினையும், வெளிப்படுத்தத் தவறிலர். பாரதம் அடங்கிலும் இந்துசமய புனித மொழியாக (தேவபாஷையாக)வும், பண்பாட்டு மொழியாகவும் சாஸ்திரீய மொழியாகவும் விளங்கிவந்துள்ள சம்ஸ்கிருதத்தை எழுதுவதற்கு இவர்கள் "கிரந்தம்" எனும் தனிவரிவடிவத்தினை உருவாக்கினர். இவ்வடிவமே இன்றைய சிங்கள வரிவடிவமும், தென்கிழக்காசிய நாடுகளிலே நிலவும் வரிவடிவங்களும் உருவாகுதற்குத் துணைபுரிந்துள்ளது. இந்த வரிவடிவத்திலேதான் தமிழக வடமொழி அறிஞர்கள், வேதங்கள், ஆகமங்கள், வடமொழி இலக்கிய நூல்கள், கல்வெட்டுக்கள், பிறஅறிவியல் நூல்களை எழுதுவதற்கு நீண்டகாலமாகப் பயன்படுத்திவந்தனர். மரபுவழியாக வடஇந்திய பார்வையில் இந்தியாவை இமயம் தொடக்கம் சேது அல்லது கடல்வரை எனக்கூறுவது (ஹிமவத் சேது பர்யந்தம், ஆசமுத்திரக்ஷிதீச) எனக் கூறுவது வழக்கம். ஆனால், காரணாகமம் இதற்கு மாறாக கன்னியாகுமரிக்கும் இமயமலைக்கும் இடையிலுள்ள புனித இடம் (குமாரீ ஹிமவத் மத்யஸ்தம் பூதம்) எனக் கூறுகின்றது. இங்கு தென்னகத்திற்கு முதன்மையளிக்கப்படுதலை அவதானிக்கலாம், மேலும் இவர்கள் (சிவாச்சாரியார்) ஏற்கனவே குறிப்பிட்டவாறு தம்மை ஆதிசைவராக சிவப்பிராமணராகக் குறிப்பிடுவதும் கவனித்தற்பாலது. தென்பாரதத்திலேதான் சைவம் தோன்றிற்று (தக்ஷிணபாரதே சைவோ தீபவம்) எனக் காரணாகமம் குறிப்பிடுவதும், மணிவாசகரின்" "தென்னாடுடைய சிவனே போற்றி" எனும் கூற்றினை வலுப்படுத்துவதை அவதானிக்கலாம்.

தென்னகத்திற்கே — இங்கு தமிழகத்திற்குச் சிறப்பான சைவசமயத்திற்கான பரார்த்த பூசை செய்யும் சிவாச்சாரியார்களின் தகைமைகள், பண்புகள், ஆளுமை முதலிய பற்றி மேற்குறிப்பிட்ட ஆகமங்கள் எடுத்துக் கூறியுள்ளன. இவற்றிலுள்ள சில கருத்துக்கள் தர்மசாஸ்திரங்களையொட்டிக் கூறப்பட்டிருப்பினும் இவற்றிலே தனித்துவமான கருத்துக்களும் உள்ளன. அந்தணர்களின் கடமைகளாக (வேதம்) ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல், தானம் கொடுத்தல், பெறுதல் ஆகியன தர்மசாஸ்திரங்களிற் போலவே இவற்றிலும் கூறப்படுகின்றன. அவற்றிலே முக்கியமானவை பற்றிக் குறிப்பிடலாம்.

சிவாச்சாரியர்கள் குறிப்பாகத் தமக்கு அவசியமான பல அறிவியல்களையும் நன்கு கற்றிருக்கவேண்டும். சைவசித்தாந்தம் (சைவசித்தாந்தஜ்ஞ), வேதங்கள், அவற்றின் தத்துவம் பற்றிய அறிவு (வேதார்த்ததத்துவஜ்ஞ), சகல சாஸ்திரங்களிலும் மிகுந்த தேர்ச்சி (சர்வசாஸ்திரார்த்தகுசல) வாஸ்து சாஸ்திர அறிவு, மேலான தத்துவ அறிவு, சொற்கள் வாக்கியங்களின் முக்கியத்துவம் பற்றிய அறிவு, இனிய பேச்சுத்திறன் முதலியன அவர்களுக்கு அவசியமாகும்.

சிறப்பாக இவர்களின் ஒழுக்கமும், பண்பும் வலியுறுத்தப்படுகின்றன. இவர்கள் தேவர்கள், அக்கினி, குரு ஆகியோரிடத்துப் பக்தியுள்ளவர்களாக விளங்க வேண்டும். இவர்களின் சிறப்பான சேவைக்கு இது அவசியம். புலனடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஜிதேந்திரிய), பற்றின்மை (வீதராக), பொறாமையின்மை, (விமத்சர), தவஞ் செய்வோரிடத்தில் பற்று, அவாவின்மை (விகதஸ்பிருஹ) முதலிய தன்னலமற்ற நற்பண்புகள் இவர்களுக்கு இன்றியமை யாதன, இவர்களின் ஒழுக்கம் விழுப்பம் தருவதாக இருக்கவேண்டும். சமயாசாரங் களைப் பாதுகாத்தல் (சமயாசாரபாலக) இவர்களுக்குரிய ஒரு சீரிய கடமையாகும். இவர்கள் முறைப்படி தீக்ஷை, ஆச்சார்யா பிஷேகம் பெற்ற சமய குருமாராகவும், சிறந்த ஒழுக்கமுடையவர்களா(சுசீல)க வும் விளங்கவேண்டும். அந்தணர் வேதத் தினை மறந்தால் திரும்பவும் ஓதலாம். ஆனால், அவர்கள் ஒழுக்கம் கெட்டால், ஈடுசெய்ய முடியாதென்னும் கருத்தினைக் திருவள்ளுவரும்

"மறப்பினு மோத்துக் கொளலாகும்
பார்ப்பான்
பிறப் பொழுக்கங் குன்றக் கெடும்"

எனக் கூறியிருப்பது ஒப்பிடற்பாலது. இது போன்ற கருத்துக்கள் தர்மசாஸ்திரங்க ளிலும் வந்துள்ளன. சமயகுருமாரின் மூன் உதாரணமும், வாழ்க்கையும் மற்ற வர்களுக்கு கலங்கரை விளக்கமாகும்.

இவர்கள் வைதிக சைவக்கிரியைகளை நன்கு அறிந்திருக்க வேண்டும் (தர்ம கிரியாநிபுண). இக்கிரியைகளில் இடம் பெறும் மந்திரம், முத்திரை முதலியன வற்றிலும் நல்ல ஞானம் அவசியமாகும். இகபர நன்மைகளுக்கான கிரியைகளை இவர்கள் செய்வதால் இவை பற்றிய அறிவு திருப்திகரமாக இருத்தல் வேண் டும்.

இவர்களுடைய ஆளுமையும் குறிப் பிடற்பாலதே. எல்லா அவயவங்களும் பூரணமாக உள்ள (ஸர்வாவயவஸம் பூர்ண) முழுமையான மனிதர்களாகவும், இவர்களுக்குரிய இலட்சணங்கள் அனைத் துமுள்ளவராகவும் (ஸர்வலக்ஷண லக்ஷித) இருக்கவேண்டும். இவர்கள் வணங்கும் தெய்வங்கள் தெய்வச்சிலைகள் போன்று இவர்களும் முழுமையானவர்களாக மிளிர் தல் வேண்டும். இவற்றுடன் இனிய காட்சியுள்ளவராக (ப்ரியதர்சன)வும், தங்கள் குடுமியினைச் சௌளத்தின் பின் னர் முறைப்படி சீவி முடிந்தவராகவும், மீசை, தாடியற்றவராகவும், இல்வாழ்க்கை யினை மேற்கொண்டு நன்கு வாழ வேண்டும்.

மேலுமிவர்கள் எல்லா உயிர்க்கும் நன்மைசெய்பவராக, அன்பு காட்டுபவ ராக (ஸர்வப்ராணிஹிதகர) விளங்குவர். சைவம் மனித நேயத்துடன் நின்று விடாது எல்லா உயிர்களின் நேயத்தினை யும் வலியுறுத்திக்கூறும் சமயம் என்பதும் ஈண்டு குறிப்பிடற்பாலது. இதேகருத்தி னைத் திருவள்ளுவரும்

"அந்தணர் என்போர் அறவோர்மற்
றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

எனக் குறிப்பிட்டுள்ளமையும் ஒப்பிட்டு நோக்கற்பாலது.

இவர்கள் முழுமுதற் கடவுளாம் சிவ பிரானின் ஆணையில் என்றும் ஈடு பாடுள்ளவராக (சிவதந்திரைகசித் தாத்மா) சித்தத்தைச் சிவன்பால் வைத் தவராக விளங்குவர்.

இவற்றைவிட பஞ்சகச்சம் தரிப்பவர் களாகவும், தமிழிலும், வடமொழியிலும் நல்ல பாண்டித்தியம் உள்ளவராகவும் உலகியல் ஞானம் உள்ளவராகவும் இவர் கள் இலங்குவர். சமயஞானம் மட்டு மன்றி உலகஞானமும் அவசியமாகும்,

இப்பெயர்ப்பட்ட சிவாச்சாரியார்கள் சமூகத்தின் ஒரு சீரிய உறுப்பினராக மக் களுக்கு முன்மாதிரியான, தன்னலமற்ற, ஒழுக்கமுள்ள வாழ்க்கையினை மேற் கொண்டு உத்தமமான நிலையில் விளங்கு வார்கள் என்பதில் ஐயமில்லை. இவர் கள் எப்பொழுதும் மக்களின் நலனில் அக்கறையுள்ளவராக விளங்குவர்.

இவர்கள் தோற்றத்திலும் அறிவிலும் நடைமுறை வாழ்க்கையிலும் வேறுசில வற்றிலும், தாமும் அன்பர்களும் வணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் சிவனையே நினைவூட்டுவர். இவர்கள் கிரியைகள் செய்யும்போது தம் மைச் சிவனாகவே பாவனை (சிவோகம் பாவனை) செய்வார்கள்; அருள்பாலிப் பர். மக்களும் அவரைச் சிவனாகவே பாவனைசெய்து தெய்வம் போலவே அவரை வணங்குவர்.

''குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு குரு
தேவோ மகேஸ்வரஹ்!
குருஸாக்ஷாத் பரப்ரஹ்மதஸ்மை
ஸ்ரீ குருவே நமஹ்!!

என்பது இதனைத் தெளிவாகக் காட்டு கிறது. மக்களுடைய இகபர நன்மை களுக்குக் குறிப்பாக ஆன்மீக ஈடேற்றத் துக்காகத் தம்மை அர்ப்பணிக்கும்' தியாக உணர்வுள்ள பெருந்தகையினராக இவர் கள் விளங்கவேண்டியவர்கள்.

இவர்களின் கலைத்திறனையும் பிற வற்றையும் கருத்திற்கொண்டு பேராசிரி யர் கா. கைலாசநாதக்குருக்கள் இவர்க ளைச் சிறந்த நடனக் கலைஞருக்கு ஒப் பிட்டுள்ளார். சிவஸ்ரீ நா. சோமஸ்கந்த சர்மா இவர்களைச் சிறந்த வைத்தியரா கக் குறிப்பிடுகிறார். பிறிதொருவகையிற் பார்க்கும்போது இவர்கள் சமூகப்பணிபுரி யும் சான்றோராகவும் விளங்குகின்றனர் எனலாம்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களைத் தொகுத்து நோக்கும்போது, இத்தகைய பெருந்தகையினர் உண்மையிலே தமது பணிகளை ஓர்இறை அழைப்புப் போலக் கருதிச் செயற்படின், இவர்கள் ''தமக் கென வாழாப் பிறர்க்குரியாளர்'' என்பது வெள்ளிடைமலை. இவர்களின் சீரிய ஒழுக் கம், இறைபக்தி, ஆழ்ந்த அறிவு, ஆளுமை, இனியதோற்றம் முதலியன எக்காலத் துக்கும் முன்மாதிரியானவையே. ஆனால் நடைமுறை வாழ்க்கையில் எத்தனைபேர் இவற்றிற்கு உதாரண புருஷர்களாக விளங்குகின்றனர் என்பது தெரியாது, எனினும் இச்சீரிய இலட்சியங்கள் எவ ருக்கும் முன்மாதிரியானவை. உலகிலுள்ள சமயங்களிலும், தனித்துவங்களிலும் மனித வாழ்க்கை பற்றிக் கூறப்பட்டுள்ள வற்றை இரண்டாக வகுக்கலாம். ''வாழ்க்கை வாழவேண்டியது. அதனைச் சீரிய முறையில் வாழவேண்டும், உலகினை வெறுக்கக் கூடாது'' எனும் வாழ்க்கை வாழவேண்டும் (Life affirmation) என்பது ஒன்று. வாழ்க்கை நிலையற்றது; துன்ப கரமானது, விரைவாக இதிலிருந்து விடு படவேண்டும். நிலையற்ற வாழ்க்கை யாற் பயனில்லை எனும் கருத்துக் கொண்ட வாழ்க்கை வேண்டாம் (Life Nagation) என்பது மற்றதாகும். ஆனால் சைவசமயம் முன்னதையே பெரிதும் வலி யுறுத்துகின்றது.

தமிழகத்திற் போன்றே ஈழத்திலும் குறிப்பாக யாழ்ப்பாணச் சைவமரபிலும் மேற்குறிப்பிட்ட இலட்சியங்களை முன் வைத்துச் சிவாச்சாரியார்கள் வாழ்ந்த னர். இன்றும் வாழ்கின்றனர். அத்தகை யோரில் ஒருவரும் நீர்வேலியைச் சேர்ந்த வரும், தமது 70வது அகவையினை முடித் துக் கொண்டவருமான சிவஸ்ரீ சாம்பசதா சிவக் குருக்கள் ஐயா அவர்கள் விளங்குகின்றார். இச்சமயப் பெரியார் நோய், துன்பமின்றி மேலும் பல்லாண் டுகள் வாழ்ந்து இறைபணியும், மக்கள் பணியும் செய்ய எல்லாம்வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரன் திருவருள் பாலிப் பாராக.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள்மிகு
# ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார்
# ஆலய வரலாறு

நாடெல்லாம் ஆலயம் அமைத்து, ஆன்மீக வாழ்விற்கு வழி காட்டிச் சிறப்புடன் வாழ்ந்தனர் எம் முன்னோர். அவர்கள் எமக்கென விட்டுச் சென்ற பழம்பெரும் பாரம்பரியங்களை அருமையாகப் பேணிப் பொலிவுறக் காப்பது எம் தலையாய கடமை அன்றோ! இவ்வுணர்வினையே மகா கவி பாரதியாரும் தம் பாடல் ஒன்றில்:

"எந்தையும் தாயும் பிறந்து வளர்ந்து
இருந்ததும் இந்நாடே:
அவர் முந்தையராயிரம் ஆண்டுகள்
வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே
அவர் சிந்தையில் ஆயிரம் எண்ண
மிளிர்ந்து சிறந்தும் இந்நாடே
அதை வந்தனைசெய்து மனந்திலிருத்தி
என் வாயுற வாழ்த்தேனோ
இதை வந்தேமாதரம், வந்தே மாதரம்
என வாழ்த்தி வணங்கேனோ"

என எடுத்தியம்பியமை எம் உள்ளத்தை உருகவைக்கின்றது!

எம் கிராமத்தின் கண், நடுநாயகமாய் எழுந்தருளி அருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலயமும் பழமை — பெருமை — புதுமைக்குரியது. இன்று அதன் புனித மகா கும்பாபிஷேகப் பெருவிழா கோலாகலமாக நடைபெறுகின்றது. இந் நூற்றாண்டில் இப் புண்ணிய நிகழ்வு நான்காவது முறையாக நிகழ்கின்றது; முன்னைய விழாக்கள் முறையே 1932, 1951, 1973 ஆகிய ஆண்டுகளில் இனிதே நிகழ்ந்தன.

எம் மானிலத்தின் தொன்மையான 12 சைவ ஆலயங்களில் இதுவுமொன்றெனத் த்ரமான வரலாற்று நூல்கள் சான்று பகருகின்றன. இதன் ஸ்தாபிதம் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமையப்பட்டதென அறியப்படுகின்றது. மேலும் 1792 இல் அன்றைய அரசினரின் ஆலயப் பதிவேட்டில் இவ்வாலய விபரங்களும் உள. எது எவ்வாறாகவிருப்பினும், இவ்வாலயம் மிகத் தொன்மை மிக்கது; அற்புதமானது அடியவர்க்கெலாம் கண்கண்ட தெய்வமாய், அன்னவர் குறைகளைந்து அருள் சுரக்கும் 'கற்பகம்' ஆனது.

ஆலயத்தின் திருமஞ்சன தீர்த்தம் தான்தோன்றியானது. அவ்விசேடத்தை விளக்கும் வகையிலேயே பிள்ளையாரின் திருவுருவம் எழுந்தருளப்பட்டதாகும். தீர்த்தக்கிணற்றின அமைப்பு, உருவம், ஆழம், நீரின் புனிதம் ஆகியவற்றினைப் பார்ப்போர், சுவைப்போர் வியந்தே நிற்பர்!

தமிழ் மன்னன் பரராசசேகரன் மைத்துனன் — மன்னன் பண்டாரத்தின் முதன்மந்திரி அரசகேசரிக்கும் இவ்வாலயத்திற்கும் ஏதோ ஒருவகையில் இறுகிய தொடர்பின் காரணமாகவே இதனை "ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார்" என அழைக்கப்பெற்றதென ஒரு கர்ணபரம்பரைக் கதையுமுண்டு!

ஆலய பரிபாலனம் அதன் ஆரம்பம் முதல் 1879 வரை வழிபாடாற்றியோராலும், 1880 — 1893 வரை அமரர் ஸ்ரீமான் கதிர்காமர் ஐயம்பிள்ளையென்ற சிவபுண்ய சீலராலும் 1894—1903 வரை அக்கால ஆலய குருவினாலும், 1904—1906 வரை எழுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட அடியவர் குழுவினாலும், 1907—1949 வரை "அப்பாசாமிக்குரு" என மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட ஆலயக்குரு, சிவஸ்ரீ சுவாமிநாத — இராம சுவாமிக் குருக்களாலும் பல்வேறு இடர்கள், தளர்வுகள், மத்தியிலும் பரிபாலிக்கப்பட்டு குருக்கள் அவர்கள் 1947 இல் அமரரானதும், ஆலயப் பொறுப்பினை 1949 இல் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அறங்காவல் சபையின ரிடம் ஒப்படைக்கப்பெற்று, அன்று முதல் இன்றுவரை காலத்திற்குக்காலம் தெரிவு செய்யப்படும் பரிபாலனசபையினரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. பரிபாலன சபையினர் ஆலயத்தின் பரிணாம வளர்ச் சியில் அதன் பழமை குன்றாது பல, பல, புனித புதிய பணிகளை சிறப்புடன் ஆக்கி வருவதைப் பலரும் அறிவார்.

சைவ ஆலயங்களில் நிகழும் சகல சிறப்பு விழாக்களுடன், வருடாந்த உற்சவம் ஆண்டு தோறும் ஆவணிச் சதுர்த்தியன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் பெரு விழாக்கள் தொடர்ந்து நடைபெற்று பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவத் துடன் இனிதே நிறைவு பெறும். ஆலயப் பிரதம சிவாச்சாரியாராக சிவஸ்ரீ கார்த்திகேய சாம்பசதாசிவக் குருக்களும் அவரின் புத்திரர் சிவஸ்ரீ சோமதேவக் குருக்களும் தம் தந்தையாருக்குத் துணை யாயுமிருந்து தம் அரனார் தொண் டினைப் பக்தி சிரத்தையுடன் ஆற்றி வருகின்றனர்.

இவ் அறப்பணிக்கு அடியார் திருக் கூட்டமும் கொடை வள்ளல்களும் மூல வேராக அமைந்து, காலந்தோறும் கண் துஞ்சாது கருமமே கண்ணாய் நின்று கணபதிக்கன்பு செய்து தொண்டாற்றிய வண்ணமிருக்கின்றனர்.

இவ்வேளை, சீலமிகு சீர்த் திருத் தொண்டாற்றி இறைபதமடைந்த இனிய வர்களையும் நாம் நன்றி உணர்வுடன் நினைவு கொள்வோமாக. விநாயகர் திருத்தொண்டில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த முன்னைய முகாமை யாளர்கள், அறங்காவல் உறுப்பினர்கள், அவர் தம் பணிகளை உளமார வாழ்த்திப் போற்றும் வேளை, ஆலயத்தின் பாரிய பணிகளில் அவற்றையெலாம் அசுர வேகத்தில் நீதி, நிதானம் தவறாது தன் அபார ஆளுமையுடன் 1959 இல் கோபுர மண்டபமமைத்தும், தென்னிந்திய சிற்பாசாரிகளைக் கொண்டு வியப்புமிகு சித்திரத் தேரினை 1967 இல் உருவாக் கியும், நந்தவனமமைத்தும், பழைய வாகனங்களைப் புதுக்கியும், புதிய பல ஆக்கியும், மேலும் ஆலயத் தேர் மண் டபம் போன்ற பல தரப்பட்ட பணிகளை எவரும் ஏவாவண்ணம் உழைத்து இவற் றிற்கெல்லாம் வேண்டிய நிதியினைப் பெற இந்திய முன்னணிப் பாடகர்களை அழைத்து இலங்கையின் பல பாகங்களில் இன்னிசை நிகழ்வுகள் நடத்தி நிதி திரட் டியும், பக்தகோடிகளின் அன்பளிப் புடனும் குறிப்பாக கொடைவள்ளல், மலாயன் பென்சனர் அமரர் ஸ்ரீமான் காசிப் பிள்ளை செல்லையாவினதும் அவர் தம் தர்மபத்தினியார் அமரர் பொன்னம்மாவி னதும் பாரிய நிதி உதவியுடனும் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய பிள்ளை யாரின் இரதத்தைப் பலரும் வியக்கும் வகையில் அமைக்க உழைத்த அமரர் கனக சபாபதி வேலுப்பிள்ளை கலாகரத்தினம், சமாதான நீதிவான், போன்றவர்களின் தொண்டினை எம் சமூகம் என்றுமே போற்றக் கடைப்பாடுடையது.

அண்மையில் 1992 இல் முருகப் பெருமானுக்கும் இரதமொன்றினை அடியவர் பொருளுதவியுடன் தன் முழு நேரத்தையும் அர்ப்பணித்து அமைத்து முடித்த பெருமைக்குரிய, அறங்காவல் சபையின் செயலாளர், அமரர் வேலுப் பிள்ளை சின்னத்தம்பியின் தொண்டினை யும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

ஆலயம் அருள் பொழிய, அடியவர் பால் அனுக்கிரகிக்க, முப்போதும் திரு மேனி தீண்டி, நித்திய நைமித்திய தொண்டினைப் பக்தர்கள் பரவசமடையு மாறு தொண்டாற்றும் அந்தணப் பெரி யோர்களையும் காலை, மாலை, உச்சி தோறும் தம்மை மறந்து தொண்டாற் றும் பக்தர்களையும், கரம் கூப்பி வணங்குவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில்

சம்புரோக்ஷண

# கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**சிவநேயச் செல்வர்களே!**

நிகழும் ஆங்கிரச ஞு ஆவணி மீ. 23ந் உ(07-09-1932) புதன்கிழமை காலை உதயம் 6 மணிக்கு மேல் சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில், குறித்த அரசகேசரிப்பிள்ளையாருக்குச் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நடைபெறும்.

**கிரியா கால அட்டவணை**

ஆங்கிரச ஞு ஆவணி மீ.

18 ந் தேதி வெள்ளிக்கிழமை பகல், கர்மாரம்பம், அனுஞ்ஞை.
இரவு. கிராமசாந்தி, வாஸ்துசாந்தி.

19 ந் ,, சனிக்கிழமை பகல் நவக்கிரகசாந்தி, மிருத்சங்கிரகணம்.
இரவு அங்குரம்.

20 ந் ,, ஞாயிற்றுக்கிழமை ரக்ஷாபந்தனம். இரவு யாகாரம்பம்

21 ந் ,, திங்கட்கிழமை காலை, அஷ்டபந்தனம், எண்ணெய் சாத்துதல்.

23 ந் ,, புதன்கிழமை உதயம் கும்பாபிஷேகம்.

அன்று முதல் பதினைந்து தினம் வரை அலங்கார உற்சவம் நடைபெறும்.

UNIVERSITY OF JAFFNA
யாழ்ப்பாண

**சு. இராமசாமிக் குருக்கள்.**
**ஷை கோயில் ஆதீனகர்த்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ARASAKESARI PILLAIYAR TEMPLE,
## NEERVELY, JAFFNA

This temple is situated about a mile to the west of the sixth mile post on the Jaffna - Pt. Pedro road. It bears the name of a distinguished person of the court of Pararajasekaram, King of Jaffna (1478 - 1519). Pararajasekaram was one of the most successful Kings of Jaffna and during his reign art, learning and culture flourished. The King's brother Segarajasekeram, an eminent scholar, invited poets and learned people from India and held discourses. Arasakesari, a nephew of the King was an eminent Sanskrit scholar who translated Kalidasa's Sanskrit classic entitled "Raguwamsam" into Tamil. He is said to have done this, sitting on the banks of the Nayan Mar Kaddu Kulam in Nallur. There was yet another Arasakesari who ruled as regent (from 1615 to 1617) but met with an untimely death.

A publication made by one A. S. Cumaraswamy, copy of which is available with the chief priest Sri Samba Sathasiva Kurukkal of the temple, relates how this temple became to be founded. During the era mentioned above, when the Nallur - Neervely region enjoyed its golden age, it was revealed in a dream that there was a spring situated on the "Rasa Veethy", the waters of which were a very sacred theertham. The King had the "Rasa Veethy", a roadway running from Nallur North - wards, to be examined and the sacred spring was located, and a "theertham" was built. By the side, of course a Vinayaka temple was founded. But the celebrated Arasekesari Pillaiyar Kovil of that era which enjoyed Royal patronage has all been lost, due to domolition by foreign invaders in the seventeenth century.

However, subsequently, in 1800, it is said, that one Kadirgamar Iyampillai took the initiative to build a shrine of some sort which later in 1873, Sri Cumarasamy Kurukkal. grand father of the present Kurukkal made into a proper agamic Vinayakar Kovil. A Board of Trustees took charge of the temple in 1949 and have made several improvements and additions. An elaborate ornamental Gopura Vasal, found at the entranee, was constructed in 1959. The temple is often referred to as just "Sempaddu Pillaiyar Kovil"

Apart from the Moolasthana Vinayaka Moorthy, there are shrines of the sacred Siva Lingam and Ambal, Subramaniyar, Navakgrahams and also of course of vairavar.

The temple is well administered today and regular pujas and other obser-vances are made and monthly Sathurthi festivals held. The annual festival commences with the avany sathurthy in August and continues for 12 days.

A notable feature is that the above "theertham" occupies the sixth place in a long list of sacred theerthams of the Island.

※ ARUMUGAM.S "ANCIENT HINDU TEMPLES OF SRI LANKA"
Colombo - 1980. PAGE - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ancient Hindu Temples in Ceylon

For lack of space many old temples of Jaffna have not been marked in the map. Besides there may be several other temples in Ceylon that ought to find a place in the map, but only those whose antiquity is definitely known are mentioned. Except No 45 all the rest in the list are more than four hundred years old or shrines once flourished and late went to ruin.

There are innumerable devales in Sinhalese areas dedicated to Vishnu, Skanda, Aiyanar and Pattini. They are not included in this List. Each village has its devale and therefore it is impossible to mark all of them in map of this size. As the Vishnu temple at Dondra is a popular one, and as the rites and ceremonies at the temple uutil its destruction by the Portuguese were in accordance with Hindu Agamic principles, it has been included in the list.

| | | |
|---|---|---|
| 01. | Kandaswamy Temple | — Mavittapuram. |
| 02. | Naguleswaram or Thiruthambaleswaram | — Keerimalai. |
| 03. | Sambeswaram | — Mathagal (Little trace) |
| 04. | Vishnu Temple | — Ponnalai. |
| 05. | Nagapooshany Amman Temple | — Nainativu. |
| 06. | Arasakesari Pillaiyar Temple | — Neervely. |
| 07. | Anganamai Kadavai | — Kanterodai. |
| 08. | Kailaya Nathar Temple | — Nallur. |
| 09. | Kandaswamy Temple | — Nallur. |
| 10. | Varivanaeswaram | — Chavakachcheri. |
| 11. | Vishnu Temple | — Vallipuram. |
| 12. | Nagathambiran | — Nagarcoil. |
| 13. | Uruthirapurieswaram | — Urithirapuram. |
| 14. | Thanthontryeswaram I | — Odduchuddan. |
| 15. | Kannakai Amman Temple | — Vattapalai. |
| 16. | Kumarapuram | — Mullaitivu. |
| 17. | Temple to Iswara | — Kachchilai Madu. |
| 18. | Kovil Kaadu | — Vavunikulam (Ruins). |
| 19. | Temple to Iswara | — Panangamam (Ruins). |
| 20. | Temple to Ganesha | — South of Kalmunai. |
| 21. | Aiyanar Temple | — Vellankulam. |
| 22. | Rajaraja Isvarattu Mahadevan Kovil | — Matota. |
| 23. | Tiruvirameswaran Udaiyar Mahadevan Kovil | — Matota (No trace) |

* Kandaswamy Malai (Girikanda Cetjya) — Tiriyay.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 24. Pillaiyar Temple | — | Omantai. |
| 25. Temple to Iswara | — | Padawiya (Ruins). |
| 26. Santhirasegaram II | — | Cheddikulam. |
| 27. Asuvagiri | — | Kudiramalai (Ruins). |
| 28. Temple to Iswara | — | Anuradhapura (Ruins) |
| 29. do do | | do (Ruins). |
| 30. Thenkailasam | — | Kantalai |
| 31. Temple to Lord Konesar | — | Tambalagamam. |
| 32. Koneswaram Temple | — | Trincomalee. |
| 33. Nagara Kali | — | Trincomalee. |
| 34. Temple to Parameswara | — | Tirukarasai (Ruins). |
| 35. Chitra Velauthaswamy | — | Verugal |
| 36. Temple to Vishnu | — | Pomparippoo (Ruins). |
| 37. Naehchiamman Kovil | — | Kalpitiya (Ruins). |
| 38. Vikrama cala-mega-Iswara | — | Budumuttava (Ruins) |
| 39. "Manvari" - Temple to Iswara | — | Northern bank of the Deduru Oya (Tottering state) |
| 40. Munneswaram | — | Chilaw. |
| 41. Siva Devale No. 1 | — | Polonnaruwa (Ruins). |
| 42. do do No, 2 | — | do |
| 43. Temple to Lord Siva | — | Erakavilla (Eravur). Destroyed by Mahasen. |
| 44. Thanthontryeswaram II | — | Kokkaddychcholai. |

* *Perhaps this is one of the Hindu temples destroyed by Mahasen in the fourth century- On the temple sites he built viharas. Hence this confusion.*

| | | |
|---|---|---|
| 45. Iswara Temple | — | Padawita, Matale South (Ruins) |
| 46. Nanchundan (Iswara) | — | Negombo (No trace) |
| 47. Kamachchy (Iswary) | — | Negombo (No trace) |
| 48. Temple to Lord Siva | — | Kotte (No trace.) |
| 49. Berindi Kovil (To Lord Parameswara) | — | Sitawaka (Ruins) |
| 50. Sivanolipadam (Sri Pada) | — | Adam's Peak |
| 51. Temple to Lord Ganesha | — | North of Kalutara (No trace) |
| 52. Shrine to goddess Kali | — | Bentota. |
| 53. Temple to Pillaiyar | — | Devinuvara. (No trace) |
| 54. Temple to Vishnu | — | Devinuvara |

55. Temple to Lord Santhirasegaram I. In later times it was known as Nagarisa — Dondra Head (Ruins).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. Kathirgamam — Kataragama.

57. Temple to Lord Skanda — Okanda (Okandamalai)

58. Temple to Iswara (Brahmanagama of ancient times) destroyed by Mahasen in the fourth century.

59. Temple to Skanda — Tirukovil.

60. Temple to Lord Siva — Amparai (No trace).

61. Kandaswamy Temple — Mandur.

## Ruins of Hindu Temples

I. Komputukki

II. Mara-illuppai

III. Kuravil Kovil (Near Puthukkudiyiruppu)

IV. Kanniya Kovil (Saptamarikas) Mannakandal

V. Pandarakulam

VI. Madukanda

VII. Karaitivu (Puttalam District)

VIII. Anuradhapura

IX. Polonnaruwa.

* *The Pillar inscription that is in the Amparai Kachcheri reveals the existence of a temple to Siva before 700 A. C. Some derive the word Amparai from "Ambal" (consort of Siva).*


▢ NAVARATNAM. C. S. "A SHORT HISTORY OF HINDUISM IN CEYLON" Sri Sanmuganatha Press, JAFFNA, 1964. (PAGES 87-89)


187288



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

157258

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபரம்பரை

உ

**மா. மங்களேஸ்வரக்குருக்கள்**

↓ சூரியநாராயணக்குருக்கள்

↓ கனகசபாபதிக்குருக்கள்

↓ தாமோதரஐயர்

↓
- கண்டோபபண்டிதஐயர்
- சுப்பிரமணியக்குருக்கள் – சுன்னாகம்
  - ↓ கார்த்திகேயக்குருக்கள்
    - கோபாலஐயர்
      - சுப்பிரமணியக்குருக்கள் (சுப்பையர்)
        - கார்த்திகேயஐயர், அதிபர், நாவலர் பாடசாலை, கோப்பாய். + (குப்பம்மா)
          - **சாம்பசதாசிவகுருக்கள்** + (கௌரி அம்மா)
            - பாலச்சந்திரசர்மா + (மாலினி) → சிறீகரன், கிருஷ்ணவேணி
            - சோமதேவக்குருக்கள் + (ஜெயந்தி) → வரப்பிரதன், சிவஜெயன், நிதர்சனன், சிந்துகேயன், மனுப்பிரிஜா
            - கோபாலசர்மா + (பவானி) → ஹம்சத்தொனி, ரகுபரன்
            - சிவபாலசர்மா + (விஜயலட்சுமி) → சாம்பவி, கார்த்திகன்
            - பவாணி + (கு. ஹரிஹரசர்மா)
            - காத்தியாயினி + (ச. ஜகதீஸ்வரன்)
          - குகதாசசர்மா + (ஜகதாம்பிகை)
          - பராபரை அம்மா + (ஐ. சோமசுந்தரஐயர்)
        - நாகம்மா + (பொன்னுத்துரைஐயர்)
        - பொன்னம்மா + (கார்த்திகேசஐயர்)
        - விசாலாட்சி அம்மா + (சிவகடாட்சகுருக்கள்)
      - இராமசாமிஐயர்
      - சபாபதிஐயர்
      - வெங்கடாசலஐயர்
      - இருபெண்கள்
    - சுப்பிரமணியக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைதிக விவாகத்தில் சில முக்கிய கிரியைகள்

சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள், மயிலணி.

நமது வைதிக மதத்தில் விவாஹமென்பது மிக உயர்ந்த கர்மாவாகும். விவாஹ காலத்தில் சொல்லப்படும் மந்த்ரங்கள் வதூவரர்களுக்கு தீர்க்காயுள், ஆரோக்யம், பரஸ்பரம் ஆழ்ந்த பிரீதி, பசு, புத்திர, தன, தான்யாதி சம்பத்துக்கள் முதலானவை இம்மந்திரங்களினால் பிரார்த்திக்கப்படுகின்றன.

விவாஹம் எட்டுவிதம், அதில் முதல் நான்கும் சிறந்தவை. அவைகளிலும் முதலாவதான ப்ராஹ்ம விவாகம் சாலச்சிறந்தது. இப்பொழுது நடைமுறையில் இம்முறையான விவாஹமே காணப்படுகிறது. தனக்குத் தகுதியான வதூவைத் தேடித் தருமாறு வரன் பெரியோர்களான அந்தணர்களை வேண்டுகின்றான் என்று தான் விவாஹ ஆரம்பமந்திரமே அறிவிக்கிறது. நமது சநாதன தர்மப்படி, பிராம்மணன் பிறக்கும் போதே மூன்றுவிதக் கடமைகளைத் தீர்க்க வேண்டியவனாகவே பிறக்கிறான். ப்ரம்மச்சர்ய ஆச்சிரமத்தில் வேதாத்யயனஞ் செய்து, அதன் பொருளைத் தெரிந்து கொள்வதனால் ரிஷிகளின் கடனைத் தீர்ப்பவனாகவும் பிறகு கிருஹஸ்தாச்ரமத்தை அடைந்து யஜ்ஞங்களைச் செய்து தேவதைகளின் கடனைத் தீர்ப்பவனாகவும், மக்கள்பேற்றை அடைவதனால் பிதிர்க்கள் கடனைத் தீர்ப்பவனாகவும் மனிதன் ஆகிறான் என 'யஜ்ஞேந தேவேப்ய: ப்ரஜயா பித்ருப்ய:'' வேதம் கூறுகிறது. விவாகத்திற்கு ''ஸஹ தர்மசாரிணீயோகம்'' என்றும் பெயருண்டு. யாகம் முதலிய எல்லாவகையான கிருஹஸ்த தர்மங்களையும் செய்வதற்கு மனைவி உடனிருந்து ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும். பாணினியும் தமது ஸூத்ரத்தில் ''பத்யுர்நோ யஜ்ஞஸம்யோகே'' யஜ்ஞத்திற்காகக் கணவனுடன் இருப்பவள் என அறிவிக்கிறார். ஆகையால் அவளுக்கு பத்னீ என்று பெயர்.

ப்ராஹ்ம விவாகத்தில் முக்கிய அங்கங்களாக இருப்பன:-

''வாக்தானஞ்ச ப்ரதானஞ்ச வரணம் பாணிபீடனம்|
ஸப்தபதீதி பஞ்சாங்கோ விவாஹ: பரிகீர்த்தித:||

என்றபடி (1) கன்னிகையைக் கொடுப்பதாகக் கன்யா பிதா வாக்குப் பண்ணுதல் (2) கன்னிகா தானம் (3) கன்யாவரணம் (4) பாணிக்கிரஹணம் (5) ஸப்தபதீ என்னும் ஐந்துமாகும். இவற்றோடு ''மாங்கல்ய தாரணம்'' என்பதொரு காரியமும் முன்னோர்களால் சேர்க்கப்பட்டு விவாகத்தில் ஓர் அங்கமாக இருக்கிறது.

வரப்ரேஷணம் (கன்யாவரணம்) என்பதிலிருந்தே விவாகக் கிரியைகள் ஆரம்பமாகின்றன. ப்ராம்மண விவாகத்தில் கிரியைகள் நடாத்தும்போது வரன் வடக்குப் பக்கமாகவும், வதூ (கன்னிகை) அவனது வலப்பக்கமாக தெற்கிலும் உட்கார்ந்து கர்மாக்களைச் செய்தல் விதியாகும். பத்னீ, பர்த்தாவின் இடப்பாகத்திலிருக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் சில உண்டு. ஆசீர்வாதம், மங்கள ஆலாத்தி, ரக்ஷாபந்தனம், யோக்த்ர விமோசனம் (தர்ப்பக்கயிற்றை அவிழ்த்தல்) என்பவற்றின்போது பத்னீ இடப்பாகத்திலிருக்கவேண்டியவள். இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]
[illegible]
[illegible]

என்னும் வேதவாக்கியத்தால் தெள்ளிதினறியக்கிடக்கின்றது. விவாகத்தில் நிர்ணயிக்கப்படும் சுபலக்னம் ஸப்தபதிவரை தொடர்ந்ததாக இருக்கவேண்டும். விவாகமாகி கிருஹஸ்தாச்ரமத்தை ஸ்வீகரித்தவுடன் ஔபாசனாரம்பம் ஆகி அக்னி சித்தி ஏற்படுகிறது. அந்த அக்கினியில்தான் பாக - யக்ஞங்கள் யாவற்றையும் செய்யவேண்டும். இப்படிச் செய்வதனால் தன் குடும்ப ஷேமம் மட்டிலுமில்லாமல் பரம்பரையாக உலகக்ஷேமம் வரை உள்ள காரியங்களைச் செய்வதற்கு கிருஹஸ்தாச்ரமம் அவகாசம் அளிக்கிறது.

இனி விவாகத்தில் இடம்பெறும் சில முக்கிய கர்மாக்களின் தாற்பர்யத்தைப் பார்ப்போம்.

விவாகத்தில் தர்ப்பத்தினால் வட்டமாகச் செய்யப்பட்டதை பெண்ணின் சிரஸ்ஸில் வைத்து. அதன் மீது நுகத்தடியின் வலப்புறத் துவாரத்தை வைத்து, அத்துவாரத்தில் சுவர்ணத்தை வைத்து அதன் மீது ஜலம் விடப்படுகின்றது அப்போது சொல்லும் மந்திரமும் அதன் கருத்தும் பின்வருமாறு.

𑌖𑍇 𑌰𑌥𑌸𑍍𑌯 𑌖𑍇𑌽𑌨𑌸𑌃 𑌖𑍇 𑌯𑍁𑌗𑌸𑍍𑌯 𑌶𑌤𑌕𑍍𑌰𑌤𑍋 ।
𑌅𑌪𑌾𑌲𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰 𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌪𑍂𑌤𑍍𑌵𑍍𑌯𑌕𑍃𑌣𑍋𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌚𑌮𑍍 ॥

இந்திராணியின் கணவனான இந்திரனே! அபாலா என்ற அத்ரி மஹர்ஷியின் பெண்ணை சக்கரத்தினுடைய துவாரத்திலும், ரதத்தினுடைய துவாரத்திலும், நுகத்தடியினுடைய துவாரத்திலும், ஜலம் விட்டு மூன்று முறை பரிசுத்தஞ் செய்து சூரியனைப் போன்ற காந்தி உள்ளவளாகச் செய்தாய் என்பது இதன் கருத்து. இஃது ரிக்வேதத்திலுள்ள மந்திரம். இந்த மந்திரத்தைப் பார்க்கும் போது இந்த விவாகமந்திரங்கள் எவ்வளவு காலமாக நம் தேசத்தில் போற்றப்பட்டுவருகின்றன என்பது நன்றாகப் புலனாகிறது. இந்த மந்திரத்தில் ''அபாலா'' என்ற பெண்மணியின் வரலாறு குறிக்கப்பெறுகிறது.

முன்னொரு காலத்தில் ''அத்ரி'' மஹர்ஷியின் பெண்ணும் ப்ரம்ம ஞானியுமான அபாலா என்பவள் தன் உடலின் சர்மதோஷத்தால் வருந்தி இந்திரனைக் குறித்துத் தவம் செய்தாள். இந்திரனுக்குப் பிரியமான ஸோமரசத்தையும் அத்துடன் பொரிமுதலானவற்றையும் இந்திரனுக்குக் கொடுத்துச் சந்தோஷப்படுத்தினாள். இந்திரனும் ஸோமரசத்தைப்பருகிச் சந்தோஷமடைந்து அபாலாவின் சர்மரோகத்தைப் போக்குவதற்காக ரதம், வண்டி, நுகத்தடி ஆகியவற்றின் துவாரங்களின் வழியாக ஜலத்தை விட்டு அந்த ஜலத்தினால் அவளைப் பரிசுத்தஞ் செய்து அவளைச் சூரியனுக்கு ஒப்பான காந்தி உடையவளாகச் செய்தான் என்றும் ஹரதத்தரின் பாஷ்யத்தில் காணப்படுகின்றது. இந்திரன் மூன்று வகைத் துவாரங்களின் வாயிலாக ஜலத்தை விட்டு அபாலாவின் தோஷத்தைப் போக்கி அவளை எப்படிப் பரிசுத்தமாக்கினானோ அது போலவே மந்த்ர பலத்துடன் கூடிய தீர்த்தத்தை வரன் இங்கு நுகத்தடியின் துவாரத்தில் சுவர்ணத்தை வைத்து அதன் மீது விடுகிறான். இவ்வாறு விடப்படும் ஜலம் இந்த மணப்பெண்ணைப் பரிசுத்தப்படுத்தட்டும் என்ற கருத்தைக் கொண்டதே என்பதை நாம் அறியவேண்டும். மணப்பெண்ணிடத்து வெளிப்படையாகத் தெரியாமல் ஏதாவது தோஷம் இருப்பினும் அது விலகவேண்டும் என்பதற்காகவே மந்த்ரத்துடன் கூடின ஜலம் நுகத்தடியின் துவாரத்தில் விடப்படுகிறது. மந்த்ரத்திற்கு அவ்விதச் சக்தி உண்டு என்பதை நமக்குப் புகட்டுவதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவே ரிக்வேதத்தில் அபாலா செய்த ஸ்தோத்திரத்திலிருந்து இந்த மந்த்ரம் எடுக்கப்பட்டிருக்கிறது. இதன் கருத்தை அறியாதவர்கள், பெண்ணின் தலை மீது நுகத்தடியை வைப்பதற்குக் கூறும் காரணம் வேறுவிதமானது. எப்படி நுகத்தடியில் பூட்டிய இரண்டு மாடுகளும் சுமையைச் சமமாகப் பகிர்ந்து வண்டியை இழுக்கின்றனவோ அதுபோல இந்தத் தம்பதிகள் வாழ்க்கையை ஒழுங்காக நடாத்திச் செல்ல வேண்டுமென்பதைக் காட்டுகிறது என்று கூறுகின்றனர். இரண்டு மாடுகளின் கழுத்தில் நுகத்தடியை வைப்பது போல இங்கு இருவர் தலையிலும் வைப்பதில்லை. ஆதலால் இம்மாதிரி ஊகம் பொருந்தாது.

இவ்வாறு நுகத்தடியின் துவாரம் வாயிலாக மந்த்ரபூர்வமாக விடப்பட்ட ஜலத்தினால் இந்த விவாகப் பெண்ணின் உடல் யாதொரு தோஷமுமின்றி திருமணத்திற்குத் தகுதியுடையதாகும்.

இதன் பின் விவாகமாக இருக்கும் கன்னிகைக்கு மங்கள ஸ்நானஞ் செய்து கூறைப் புடவை உடுத்தி மாங்கல்ய தாரணமான பின்னர் முக்கியமான '**பாணிக்ரஹணம்**' என்னும் ''**வரன் கன்னிகையின் கையைப் பிடித்தல்**'' என்னும் முக்கிய கர்மா இடம்பெறுகிறது. இதனைச் சிறிது ஆராய்வோம்.

வரன் தன்னுடைய வலக்கையினால் நிமிர்ந்துள்ள (மேலே குவிந்துள்ள) பெண்ணின் வலது கையைச் சேர்த்துப் பிடிக்க வேண்டும் (அதாவது எல்லா விரல்களையும் சேர்த்துப் பிடிக்க வேண்டும்) அப்போது வரன் சொல்லும் மந்த்ரங்கள் பின்வருமாறு:-

க்ருப்ணாமி தே ஸௌபகத்வாய ஹஸ்தம் மயா பத்யா ஜரதஷ்டிர் யதாஸ:
பகோ அர்யமா ஸவிதா புரந்திர் மஹ்யம் த்வாதுர் கார்ஹபத்யாய தேவா:॥

நீ நல்ல பிள்ளைகளைப் பெற்று, கிழத்தனமடையும் வரை என்னுடன் இருப்பதற்காக உன் கையை நான் பிடிக்கிறேன். பகன், அர்யமா, ஸவிதா, இந்திரன் முதலான தேவர்கள் உன்னை வீட்டிற்குத் தலைவியாக இருக்கும் பொருட்டு எனக்கு அளித்துள்ளார்கள்.
ஸ்ரீமத் இராமாயணத்திலும் ஜனகர் ராமனிடம்

''இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ
ப்ரதீச்ச சைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணினா॥''

என்று சீதையைப் பாணிக்ரஹணம் செய்துகொள்ளுமாறு சொல்வதும் இந்த மந்த்ரத்தின் அடிப்படையில்தான் என்று தோன்றுகிறது. கையைப் பிடிப்பது சினேகிதத் தன்மைக்கு அடையாளமாக மக்களின் அனுபவத்தில் இருப்பதைக் காண்கிறோம். இப்படிக் கையைப் பிடிக்கும்போது இந்தப் பெண் சுமங்கலியான கிழவியாக ஆவதாகில், அவள் வயதைவிட அதிக வயது கொண்ட கணவனும் வெகுகாலம் ஆயுளுடன் வாழவேண்டும் என்ற பிரார்த்தனையும் அடங்கியிருப்பதைக் காணலாம்.

விவாகத்தின் முக்கிய அங்கமான ''**ஸப்தபதீ**'' என்ற கர்மாவின் மந்த்ரார்த்தங்களைப் பார்ப்போம்.

பின்பு வரன் கன்னிகையின் கையை விடாமல் பிடித்துக்கொண்டு அவளோடு எழுந்திருந்து, அக்கினிக்கு வடக்காக கிழக்குத்திக்கிலோ, வடக்குத்திக்கிலோ, கன்னிகையின் வலது காலைப் பிடித்து அவளை ஏழு அடிகள் எடுத்துவைக்கச் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

„ஏகமிஷே விஷ்ணுஸ்த்வான்வேது। த்வே ஊர்ஜே, த்ரீணி வ்ரதாய,
சத்வாரி மாயோபவாய, பஞ்ச பசுப்ய: ஷட் ராயஸ்போஷாய,
ஸப்த ஸப்தப்யோ ஹோத்ராப்யோ விஷ்ணுஸ்த்வான்வேது॥"

ஏகமிஷே விஷ்ணுஸ்த்வான்வேது என்றுசொல்லி முதல் அடியையும்,
த்வே ஊர்ஜே விஷ்ணுஸ்த்வான்வேது என்று இரண்டாவது அடியையும்,
இதுபோல ஒவ்வொர் அடியையும் விஷ்ணுஸ்த்வான்வேது என்பதைச் சொல்லி ஏழு அடிகள் வைக்கவேண்டும்.

இந்த ஏழு அடிகள் வைக்கும் போது சொல்லப்படும் மந்த்ரங்கள் எல்லாம் இல்லறம் நடத்துவதற்கான நோக்கத்தையும் பயன்களையும் அறிவிக்கின்றன. இல்லறத்தில் உணவு முக்கியம். உடல் நலத்துடன் கூடிய வாழ்வு மிக முக்கியம். தம்பதிகள் மனப்பொருத்தத்துடன் சௌக்கியமாக வாழவேண்டியதும், வீட்டில் மாடு, கன்றுகள் நன்றாக இருந்து பால் முதலிய வஸ்துக்கள் நிறைய இருக்கவேண்டியதும் அவசியம் என்பதில் ஐயமில்லை. இவைகளை மஹாவிஷ்ணு தம்பதிகட்கு அருளவேண்டும் என்பதற்காக ஒவ்வோர் அடியிலும் அவள் தொடரவேண்டுமென்று இந்த 'ஸப்தபதி'யில் கூறப்படுகிறது. இணைபிரியாத ஸ்நேஹத்தைத் தம்பதிகள் வேண்டவேண்டும். அந்தச் சிநேகம் அவர்களுக்கு யாதொரு விக்கினமுமின்றி நீடித்து இருக்க வேண்டும். அதற்கு ஒத்த மனப்பான்மையும், சஹதர்மமும், சமமாகச் சுகதுக்கங்களைப் பாவிப்பதுமாக அந்தச் சிநேகிதம் பிரகாசிக்கவேண்டும். இவை இந்த ஸப்தபதியின் முக்கிய நோக்கங்களாகும். மணமகள் ஏழாவது அடி வைத்தபிறகு, அவளைப் பார்த்து மணமகன் இம்மந்த்ரத்தைச் சொல்கிறான்.

„ஸகா ஸப்தபதா பவ ஸகாயௌ ஸப்தபதா பபூவ। ஸக்யம் தே கமேயம்
ஸக்யாத்தே மாயோஷா: ஸக்யான்மே மாயோஷ்டா: ஸமயாவ ஸங்கல்பாவஹை ஸம்ப்ரியௌ
ரோசிஷ்ணூ ஸுமனஸ்யமானௌ இஷமூர்ஜமபி ஸம்வஸானௌ ஸம் நௌ மனாம்ஸி
ஸம் வ்ரதா ஸமு சித்தான்யாகரம்। ஸா த்வமஸி அமூஹம் அமூஹமஸ்மி ஸா த்வம் த்யௌர
ஹம் ப்ருதிவீ த்வம் ரேதோஹம் ரேதோப்ருத்த்வம் மனோஹமஸ்மி வாக்த்வம் ஸாமாஹ
மஸ்மி ருக்த்வம் ஸா மாமனுவ்ரதா பவ பும்ஸே புத்ராய வேத்தவை ஸ்ரியை
புத்ராய வேத்தவை ஏஹி ஸூந்ருதே॥"

ஏழு அடிகளைத் தாண்டின நீ தோழியாக வேண்டும். ஏழு அடிகளைத் தாண்டின நாம் சிநேகிதர்களாக ஆகிவிட்டோம். உன்னுடன் நட்பை அடைகிறேன். என் நட்பிலிருந்து நீயும் விலகாதே. நாம் சேர்ந்தவர்களாக இருப்போம். இன்னஇன்னவற்றைச் செய்ய வேண்டுமென்பதை ஒன்றாகச் சங்கல்பம் செய்வோம். நல்ல அன்புள்ளவர்களாகவும் ஒருவர்க்கொருவர் பிடித்தமுள்ளவர்களாகவும் நல்ல மனத்தை உடையவர்களாகவும் உணவையும் பலத்தையும் சேர்ந்தே அனுபவிக்கிறவர்களாகவும் வாழ்வோம். நாம் கருத்தொருமித்தவர்களாவோம். விரதங்களைச் சேர்ந்து அநுஷ்டிப்போம். நம் விருப்பங்கள் சேர்ந்தவையாக இருக்கும். நான் ஸாமாவாக இருக்கிறேன். நீ ரிக்காக இருக்கிறாய். நான் ஸாமாவாக இருக்கிறேன். நீ ரிக்காக இருக்கிறாய். நான் மேலுலகமாக இருக்கிறேன், நீ பூமியாக இருக்கிறாய். நான் சுக்கிலமாக இருக்கிறேன், நீ ரேதஸ்ஸைத் தரிப்பவளாக இருக்கிறாய். நான் மனமாக ஆகிறேன், நீ வாக்காக ஆகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஸாமாவாக ஆகிறேன், நீ ரிக்காகிறாய். அத்தகைய நீ என்னைப் பின்பற்றுபவளாக இருப்பாயாக. புருஷப் பிரஜைகளை அடைவதற்காகவும் செல்வத்தையும் பிள்ளையின் பொருட்டும் அடைவதற்காக இன்சொல் உடையவளே! நீ வருவாயாக.

"த்யாவாப்ருதிவீ" என்று இரண்டும் ஒன்று சேர்ந்த தேவதையாகவே வேதத்தில் பல இடங்களில் வருவதை நாம் காண்கிறோம். ஆகவே அவற்றைப் போல் நாம் இருக்கிறோம் என்று வரன் சொல்வது பொருத்தமே. மனத்தால் எது நினைக்கப்படுகிறதோ அதை வாக்கு வெளியிடுகிறது. ஆகவே இரண்டுக்கும் ஒற்றுமை அதிகம். இதை வைத்துத்தான் நீ வாக்கு, நான் மனம் என்று வரன் வதூவைப் பார்த்துச் சொல்லுகிறான். அவ்விதம் ஒன்று சேர்ந்த மனப்பொருத்தத்தினால் தம்பதிகளின் வாழ்க்கை பிரகாசிக்கும் என்பதற்காகவே மனோவாக் உதாரணத்தை மந்த்ரம் கூறுகிறது. என்றைக்கும் இனிமையான சொல்லுடன் பதிவ்ரதை இருக்கவேண்டுமென்பதையும், இன்சொல்லாலேயே மனைவி கணவனுடைய மனத்தைக் கவர்ந்து வாழ்க்கையை நன்றாக நடத்தவேண்டுமென்பதையும் விளக்குகிறது "ஸூந்ருத" என்ற சொல், வதூவை வரன் இந்தச் சொல்லால் அழைத்து, 'வா நாம் இல்லறம் நடத்துவோம்'' என்று அழகாகக் கூப்பிடும் இந்த இடத்தில் காவ்ய ரஸம் பொழிகிறது.

இந்த ஸப்தபதி மந்த்ரம் முழுவதுமே வெகு அழகாக அமைந்திருக்கிறது. என்னவெல்லாம் கோரிக்கை, என்னவெல்லாம் எண்ணங்கள், எவ்விதமாகவெல்லாம் நல்ல வாழ்க்கையை நடத்த வேண்டுமோ அவை எல்லாம் இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. மிகவும் அழகான இந்த மந்த்ரங்களின் பொருளை நன்றாக அறிந்து, நல்ல முகூர்த்தத்தில் அக்கினி முன்பாக வரன் சிரத்தையுடன் சொல்வானேயாகில், விவாகம் நல்வாழ்க்கையைக் கொடுத்து நற்பயனைத் தரும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. திருமணம் செய்து கொள்ளப்போகிற வரன்கள் எல்லோருமே இதை நன்றாக அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே விவாகத்தில் சொல்லப்படும் சில முக்கியமான மந்த்ரங்களின் அர்த்தங்களை என் சிற்றறிவுக்கெட்டியவாறு விவரித்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு, ஆசார்யர்

குரு, ஆசார்யர் என்ற இரு வார்த்தைகளையும் பொதுவாக ஒரே அர்த்தத்திலேயே சொல்கிறோம். ஆனால் ஒன்றிற்கொன்று வித்தியாசமும் சொல்லப்படுகிறது.

ஆசார்யர் என்பதில் ஆசரணம், ஆசாரம், சர எனும் வார்த்தைகளின் தொடர்புடையது. தர்ம நூல்களின் ஒழுக்கம்தான் ஆசாரம். அதாவது, சாஸ்திர விதிப்பிரகாரம் ஒழுகுவது. இப்படி ஒரு ஒழுங்கு முறையில் நடந்து காட்டுவது ஆசார்யரின் பண்பு.

ஆசிநோதி ஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி|
ஸ்வயம் ஆசரதே யச்ச தம் ஆசார்யம் ப்ரசக்ஷதே||

அதாவது எவன் சாஸ்திர அர்த்தங்களை ஆராய்ந்து (பிறருக்கு அதைப் போதித்து) பிறரை அதன்படி நடக்கப்பண்ணுகிறானோ (அதுமட்டுமன்றி) தானே அந்த விதிப்படி நடந்து காட்டுகிறானோ அவனே ஆசார்யன்.

உபதேசத்தால் மட்டுமன்றி தனது வாழ்க்கை உதாரணத்தாலேயே சாஸ்திர சம்பிரதாயங்களின் ஆசார அனுஷ்டானங்களான பழக்கவழக்கங்களைப் பின்பற்றி ஒழுக்கமாக வாழ்கிறவனே ஆசார்யன். தன்னளவில் இப்படியிருக்கிறவன் மட்டும் ஆசார்யன் அல்லன். ஆசார்யன் என்றால் உடனே சிஷ்யனும் இருந்தாக வேண்டும். தர்மாசாரங்களை போதனை பண்ணி அதன்படி நடக்கும்படி பண்ண வேண்டும். போதனை செய்ய வேண்டுமென்பதால் கற்றறிந்த வித்வானாக இருந்து சந்தேகங்களைப் போக்கவல்லவனாகவும் இருக்கவேண்டும்.

ஆசார்யரிடம் வித்தையை அப்பியாசம் பண்ணுவதற்கு குருகுலவாசம் என்று பெயர். குரு என்றால் அவர் உள்ளுக்குள்ளே ரொம்பப் பெருமை படைத்தவராக இருக்க வேண்டும். ஆசார்யர் என்பவர் வெளியிலே படிப்பிலே பெரியவர். வெளியிலே போதனை பண்ணுவதில் சதுரர், வெளியிலே நடத்தையால் வழிகாட்டுவதில் சிறந்தவர். ஆனால் குரு வெளியிலே எதுவுமே பண்ணவேண்டுமென்றில்லை. அவருக்கு வெளிப்படிப்பு, வித்வம் வேண்டுமென்றில்லை. ஒழுகிக்காட்டவோ, போதனை பண்ணவோ தேவையில்லை. மௌன குருகூட இருந்திருக்கிறார்கள். வாய்திறவாத தக்ஷிணாமூர்த்திதான் ஆதிகுரு. ஆசார்யர் ஒழுங்கான முறையிலே கற்றுத்தேறி போதித்து வாழ்ந்து காட்டுபவர். எந்த ஒழுங்குமே இல்லாமலிருப்பவர் குரு.

ஆனால் ஞானிகளாகவும், யோகிகளாகவும் குரு என்பவர்கள் இருப்பர். உள்ளே இப்படியிருக்கிறவர்களே வெளியில் ஆசார்யர்களாகி போதனையும் சாதனையும் செய்யும் இரண்டுமாய் இருப்பவர்களும் உளர். வெளியிலே முறையாக இருந்த ஆசார்யர்கள் உள்ளே தனக்குத்தானே ஒரு பெருமை படைத்த குருவாகவும் இருந்திருக்கிறார்கள். குருவாக இருந்தபலர் முறையான வழிக்கு வராமலும் இருந்திருக்கிறார்கள்.

ஆதாரம் :- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீச்வர ஸ்ரீ சந்த்ர சேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள் அருள் வாக்குகள், ரா. கணபதி (தொகுத்தவர்) தெய்வத்தின் குரல் மூன்றாம் பகுதி, வானதி பதிப்பகம், சென்னை, 1982. பக்-21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஈழநாட்டின் சமய, கலை, கலாச்சார பண்பாட்டு வளர்ச்சிகட்குப் பெருந் தொண்டாற்றிய அந்தணர்குல திலகங்கள்

— நீர்வை மணி

ஈழநாட்டிலே பல ஆயிரம் ஆண்டுகளாக தனிச்சிறப்புமிக்க சமய, கலை, கலாச்சார. பண்பாடுகள் விளங்குகின்றன. இதில் சைவமும் தமிழும் அதனுடன் சார்ந்த கலை கலாச்சார பண்பாடுகளும் உலகுள்ளோர் 'பல்துறைப்பட்டோரையும் தன்பால் கவர்ந்திழுக்கும் பெருமையுடையதாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெருமைக்குக் காரணமாக விளங்கிய ஆன்றோர்களின் பணிமகத்துவமானது. மகத்துவம்மிக்க இப்பணிகளில் ஈடுபட்ட ஆன்றோர்கள் பலரும் அவ்வப்போது மக்களால் பாராட்டப்பட்டும் கௌரவிக்கப்பட்டும் வந்துள்ளார்கள்.

இந்த விதத்திலே இங்கு நாம் குறிப்பாக அந்தணர் குல உத்தமர்கள் பலர் ஆற்றிய பணிகளைச் சிறப்பாக இங்கு நோக்குதல் எம்மக்களுக்கு புத்தூக்கம் தரும் முயற்சியாயிருக்கும் என நம்புகின்றோம்.

ஈழத்து அந்தணர் குலப்பெருமக்கள் பலரும் பல்துறைப்பட்ட வளர்ச்சிகளிலும் பங்குகொண்டதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்குமிடத்து எமது வயதிற்கும் சிற்றறிவுக்கும் எட்டியவரை குறிப்பிடக் கூடியவர்களை இங்கு நாம் எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்,

வடமொழியிலும், தமிழிலும் ஆற்றல் மிக்கவர்களாக விளங்கிய அந்தணப் பெரியார்கள் :

நவநீதகிருஷ்ணபாரதியார்
முகாந்திரம் சதாசிவஐயர்
காசிவாசிசெந்திநாதஐயர்
வித்துவான் கணேசஐயர்
பண்டிதர் வ. மு. ரெத்தினேஸ்வரஐயர்
காரைநகர் — கணபதீஸ்வரக் குருக்கள்
அச்சுவேலி — ச. குமாரசுவாமிக்குருக்கள்
திரு. க. வை. ஆத்மநாதசர்மா
நல்லூர் ஆதீனம் — சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள் (மணிஐயர்)
சிவஸ்ரீ பூரணானந்தேஸ்வரக்குருக்கள்
நயினை சிவஸ்ரீ ஐ. கைலாயநாதக் குருக்கள்
வியாகரண சிரோன்மணி கி. சீதாராம சாஸ்திரிகள்
வித்தியாதிபதி திரு. கி. லட்சுமணஐயர்
சங்கானை அ. அருணாசலசாஸ்திரிகள்
ஈழநாடு முன்னாள் ஆசிரியர் ஐபாறான்
நாயன்மார்கட்டு சிவஸ்ரீ சாம்பசிவக் குருக்கள்
சிவஸ்ரீ நாராயண சாஸ்திரிகள்
சிவஸ்ரீ பி. பா, பஞ்சாட்சரக்குருக்கள்

போன்றோர் ஆற்றிய பணிகள் அளப்பரியது. இங்கு நமக்குத்தெரியாது இலைமறை காயாக இருந்து பல அந்தணக் குலப் பெருமக்கள் பலரும் பெரும்பணியாற்றியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைவிட கலை இலக்கியத் துறைகளிலும், சமய கலாச்சார, குருத் துவப் பணிகளிலும் தனிச்சிறப்புடன் மேலும் பல பெரியார்கள் குலச்சிறப்பு விளங்கப் பணிபுரிந்துள்ளனர். இன்றும் வளர்ந்துவரும் சமுதாயத்திலும் இது தொடர்ந்து சிறப்புற்று வருவது கவனிக் கற்பாலது.

நீர்வையூரிலும் சிறந்த கல்விமானா கவும், கோப்பாய் நாவலர் வித்தியா சாலை அதிபராகவும் பணியாற்றிய சிவஸ்ரீ சு. கார்த்திகேய ஐயர் வடமொழி யிலும், தமிழிலும் சிறந்து விளங்கிய ஒருவராவார். அவர் வழித்தோன்றலான கார்த்திகேயஐயர் சாம்பசதாசிவக்குருக்கள் அவர்களும் இலங்கையிற் சரித்திர பிர சித்தி வாய்ந்த நீர்வேலி அரசகேசரி விநா யகர் ஆலய முதுபெருங்குரவராக இருந்து செய்துவரும் சிறப்பான அடக்கமான குருத்துவப்பணி பெருமதிப்பிற்குரியதா கும். பெருமைமிக்க ஆலயத்தின் பெருங் குரவரான அந்தணர்குலதிலகமாக விளங் கும் சிவஸ்ரீ சாம்பசதாசிவக்குருக்கள் அவர்கள் எழுபதாவது அகவைகாணும் இந்த ஆண்டிலே ஈழத்து அந்தணர்குல திலகங்களாக விளங்கிய ஆன்றோர்கள் பலரையும் நினைவிற் கொள்வதுடன், இன்றைய வளர்ந்து வரும் சமூகமும் செந்தண்மை பூண்டு சிறப்புடன் பணி தொடர எமது அந்தணர் குலதிலகங் களின் ஆசிகள் என்றுமுளதாகுக.

எழுபதாவது அகவை காணும் பெருங்குரவர் சிவஸ்ரீ கார்த்திகேய சாம்பசதாசிவக்குருக்கள் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் சுகவாழ்வுடன் குருத்துவப் பணி ஆற்ற எல்லாம் வல்ல அரசகேசரி விநாயகப் பெருமான் திருவருள் துணை நிற்பதாக.

சுபமஸ்து.

இன்று பல அந்தணர் குலப்பெரியார்கள், அறிஞர்கள் பல்துறைப்பட்டவர்கள் எம்மிடையே பெரும் பணிகள் ஆற்றிவருகின்றனர். அவர்களின் உயர்ந்த, சிறந்த நற்செயற்பாடுகளை நன்மனத்தோடு வரவேற்று அவர்கட்குப் பலவழிகளிலும் உறுதுணையாய் நிற்க இந்த நல்ல நாளிலே உறுதி செய்து கொள்வது எதிர்காலம் சிறக்க வழிசமைக்குமன்றோ!

# அறங்களை உய்த்தறிதல்

— இ. முருகையன்

இன்றைய யுகம் விஞ்ஞான தொழில் நுட்ப யுகம் என்பது பலருக்கும் ஒப்ப முடிந்த முடிவாகும். எந்த ஒரு நம்பிக்கைக்கும் நடத்தைக்கும் பகுத்தறிவின் அடிப்படையில் ஆதாரம் தேடுவது வழக்கமாகி விட்டது. நியாயங்கள் உண்மையிலே விஞ்ஞான பூர்வமாக இல்லாது போனாலும் விஞ்ஞானம் போன்ற தோற்றமாவது அவற்றுக்கு இருக்க வேண்டும். அப்படி இருந்தாலொழிய இன்றைய மனிதன் அவற்றை ஒப்புக்கொள்ளத் தயங்குவான். அது கால நெறி.

இந்தக் கால நெறியின் வயப்பட்டுத் தானோ என்னவோ நன்னடத்தை, நல்லொழுக்கம், அறம் என்பவற்றுக்கும் பகுத்தறிவின் அடிப்படையில் விளக்கம் காண்பதற்கு முயற்சிகள் நடைபெற்றுள்ளன. இந்த முயற்சிகளில், ஐரோப்பிய மெய்யியற் சிந்தனையாளர்கள் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகக் கணிசமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். தமிழர்களுக்கு மிகவும் பரிசயமான அறநெறிச் சிந்தனையாளர் திருவள்ளுவர். அவர் ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர் என்று கருதப்படுகிறார். உலகப்பொதுவான அறநெறிகளை இனங்கண்டு தொகுப்பதிற் பெருவெற்றி கண்ட தமிழர் என்று அவரைக் கொள்ளலாம். அப்படிப்பட்ட வள்ளுவரும் பகுத்தறிவு வழிப்பட்ட சிந்தனைகளையே பெரிதும் போற்றியுள்ளார். அறநெறிக் கருத்துகளைப் பொறுத்தவரையில், 'கான்ற்' என்னும் மேலைப்புலத் தத்துவ ஞானியாருக்கும் வள்ளுவருக்குமிடையே காணப்படும் ஒற்றுமைக் கூறுகள் சில வற்றை இங்கு எடுத்து நோக்குவோம்.

## 2

'அறமாவது யாது?' என்ற விசாரணையைத் தீவிரமாக மேற்கொண்டார் கான்ற். அறத்தின் அறிவியல் அடிப்படை என்ன என்று காண்பதற்கு அவர் முயன்றார். அப்படி முயன்றதன் பயனாக அவர் சில முடிபுகளைப் பெற்றார்.

வெறும் நியாயங்களையும் தருக்கங்களையும் மாத்திரம் கொண்டு ஓர் ஒழுக்க நெறிக் கோவையை நிருணயஞ் செய்தல் இயலாது என்பது அவரது முடிபுகளில் ஒன்று. கணித முறையான நியாயிப்புகளிலும் நிறுவல்களிலும் மறுக்க இயலாத உண்மைகள் என்று சிலவற்றை ஏற்றுக் கொண்டு தான் கணித அறிஞர்கள் செயற்படுகின்றார்கள். அவை வெளிப்படை உண்மைகள் (அக்சியங்கள்-axioms) எனப்படும். அக்சியங்களை நிறுவுவதற்கு நியாயங்கள் இல்லை. அவை எடுகோள்கள் ஆகும். அவற்றை ஒப்புக் கொண்டால், பின்னர் வேறு நியாயங்களையும் ஆதாரங்களையும் துணைக் கொண்டு புதிய முடிபுகள் சிலவற்றை நாங்கள் சென்றடையலாம்.

கணிதவியலிற் போலவே அறவியலிலும் அக்சியம் இருத்தல் வேண்டும் என்பது கான்ற்றின் கருத்தாகும். அக் கருத்தின் படி 'நிபந்தனையற்ற கட்டளை (கற்றேகோறிக்கல் இம்பறேற்றிவ்) என்னும் ஒரு தத்துவம் உண்டு. இதுவே அறங்கள் எல்லாவற்றுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமாயுள்ள அடிப்படை அக்சியம். இந்தத் தத்துவத்தை எதுவித நிபந்தனையும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஏற்றுக் கொண்டால், அற நெறிக்கோவையின் விரிவுகள் யாவற்றையும் அந்த அடிப்படைத் தத்துவமாகிய அக்சியத்திலிருந்து உய்த்தறியலாம். இது சிந்தனையாளர் கான்ற்றின் கருத்தாகும்.

அவர் கூறிய நிபந்தனையற்ற கட்டளை யாது? 'ஒருவருக்குப் பொருத்தமானதென்று கொள்ளப்படும் ஒழுக்க நெறி உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் பொருத்தமாய் இருத்தல் வேண்டும்'. இது தான் கான்ற்றின் அடிப்படைத் தத்துவம்.

எடுத்துக் காட்டாக, A என்னும் ஒருவர் கொலை செய்யலாம் என்று தரும நியதி ஒன்று இருப்பதாகக் கருதிக் கொள்ளுவோம். கான்ற்றின் நிபந்தனையற்ற கட்டளையின்படி A மட்டுமல்லாமல், B, C, D .. முதலான சகலரும் கொலையில் ஈடுபடலாம். அப்படி உலகில் உள்ள அனைவரும் கொலையில் ஈடுபட்டால், மனிதர்கள் யாருமே மிஞ்சி இருக்கமாட்டார்கள். ஆகவே, சமுதாயம் அழிந்தொழியாமல் இருக்க வேண்டுமானால், B, C, D முதலிய சகலரும், A உட்பட, கொலைச் செயலைத் தவிர்த்தல் வேண்டும். கொல்லாமை ஓர் அறமாகப் போற்றப்படல் வேண்டும்.

இது போலவே, உண்மை பேசுதல், சம வாய்ப்பு, திருடாமை முதலான எல்லா அறங்களையும் கான்ற்றின் அடிப்படைத் தத்துவத்திலிருந்து உய்த்தறியலாம். மேற்கூறிய நிபந்தனை அற்ற கட்டளை தான் அறவியலின் அடிப்படை அக்சியமாகும்.

இது அறிவியலின் வழி நின்று சிந்தித்துத் தெளியப்பட்ட ஒரு முடிபாகும். இமன்யுஎல் கான்ற் என்னும் மெய்யியல் அறிஞர் இந்த முடிபைக் கண்டறிந்து வழங்கி உள்ளார்.

இனி, திருவள்ளுவரின் பக்கமாக நமது கவனத்தை திருப்புவோம்.

## 3

திருவள்ளுவர் தம் நூலிலே பல இடங்களில், அறம் என்பது யாது என வரையறுக்க முயன்றுள்ளார். 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரம் முழுவதிலும் அறத்தைப்பற்றிய அடிப்படை எண்ணங்கள் எடுத்துரைக்கப் படுகின்றன.

"மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்னும் கூற்று ஓர் அக்சியம் போல அமைந்துள்ளது. மன மாசுகளை நீக்கி ஒழுகுவதே அற ஒழுக்கமாம். மன மாசுகள் யாவை என்பதையும் பல்வேறு குறட்பாக்களில் அவர் வகுத்துரைக்கத் தவறவில்லை. ஆயினும் அந்தக் குறள்கள் யாவற்றுள்ளும் முதன்மையான கோட்பாடொன்றைக் கூறும் ஒன்றாக, பின்வரும் குறளை நாம் கொள்ளுதல் வேண்டும்.

'தன்னைத்தான் காதலன் ஆயின்,
எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்'

(உன்னிலே உனக்கே அன்பு இருந்தால், நீ மற்றவர் யாருக்கும் தீமை விளைவிக்காதே.) உனக்கு நன்மை தரும் என்று நீ கருதும் ஒன்று உலகில் உள்ள எவர் ஒருவருக்காவது தீமை தருவதாய் இருக்கக் கூடாது.

நீ மட்டும் வாழ்ந்தாற் போதாது. எல்லோரும் நலமாக வாழுதல் வேண்டும்.

வாழு : வாழவிடு

இதுதான் அறவியல் முழுமைக்கும் அடிப்படையாக உள்ள அச்சாணி; அக்சியம்.

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே'

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குறைவிலாது உயிர்கள் வாழ்க'
என்றும் சான்றோர் பலரும் வற்புறுத்திய, வலியுறுத்திய அக்சியம் இதுதான்.

இந்த அக்சியத்திலிருந்து பகுத்தறிவு நெறிப்படி நியாயிப்பதனால், மனித குலம் கடைப்பிடிக்க வேண்டிய அற நெறிகள் அனைத்தையுமே உய்த்தறிந்து கொள்ளலாம்.

'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்று விளக்கியவர் வள்ளுவர். அவர் பகுத்தறிவுவாதி. அதனாலேதான் அறவியல் முழுவதையும் அறிவியல் முறையில் உய்த்தறிவதற்கு அவர் வழி காட்டியுள்ளார்.

## 4

இப்படியாக இமன்யுஎல் கான்ற்றும் திருவள்ளுவரும் மனித சமுதாயம் பூசலின்றி அமைதியுடன் வாழ்வதற்கு வேண்டிய மையக் கோட்பாட்டைச் சூத்திரமாக்கித் தந்திருக்கிறார்கள்.

'வல்லது வாழும்' என்பது உயரியல் விஞ்ஞானக் கருத்து. விலங்குகள் ஒன்றை ஒன்று கொன்று வென்று தின்று வாழும் இயல்பு உடையன. உயிரியல் விஞ்ஞானத்தின்படி மனிதர்களும் விலங்குகள்தான்.

ஆனால் இந்த — மனிதனாகிய — விலங்கு நாகரிகம் பெற்ற விலங்கு; சமுதாயமாகத் தனது குலக்குழுவைச் சீராக ஒழுங்குபடுத்தித் திட்டமிட்டு வாழும் விலங்கு – அதனாலேதான் அந்தச் சமுதாய விலங்குக்கு அவன், அவள், அவர்கள் என்று உயர்திணை வாய்ப்பாட்டாற் சுட்டப்படும் தகுதி கிடைத்துவிடுகிறது.

மனித சமூகத்திலே 'வல்லது வாழும்' என்னும் கோட்பாடு அப்படியே செல்லுபடியாகாது; செல்லுபடி ஆகக்கூடாது. 'வல்லவர் நல்லவராயின் வாழ்வர்' என்னும் கோட்பாடுதான் செல்லுபடி ஆகும் – செல்லுபடியாக வேண்டும்.

நாகரிகத்தின் பேறு அது. பண்பாட்டின் பயன் அது.

அறிவியல் முறைப்படி செயற்பட்ட சிந்தனைகள் சிலவற்றிலிருந்து நமக்குக் கிடைத்த முடிபு–அறவியல் முடிபு – இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தெய்வீகத் திருமுறைகளை சைவ உலகம் பேண வேண்டும்

— ஆறு – திருமுருகன்

மிகப் பழமை வாய்ந்த சமயம் எனப் போற்றப்படும் சைவ சமயத்திற்கும், தமிழ் மொழிக்கும், பெருமை தருவது திருமுறைகளாகும். இத் திருமுறைகள் பரம்பொருளாகிய சிவபெருமானை அன்பினால் அர்ச்சிப்பதற்கு அடியவர்களால் படைக்கப்பட்டதாகும். ஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் சுவாமிகள் வரை படைக்கப்பட்ட அருட்திருமுறைகளை பன்னிரு திருமுறையாக சைவத்தமிழ் உலகம் பலநூறு வருடங்களாகப் பேணிப் போற்றி வருகிறது. திருமுறை என்பதற்கு தெய்வத்தன்மை உடைய நூல் என்பது பொருள். முறை—நூல். திரு, தெய்வத்தன்மையைக் குறிக்கும் அடை. இறைவனை வேதசுலோகங்களாலும், மந்திர உச்சரிப்புக்களாலும், புரோகிதர்களும, ஞானிகளும், ஆரம்பகாலத்தில் அர்ச்சித்த வரலாறு உண்டு. எனினும் காரைக்காலம்மையார் பரம்பொருள் ஆகிய சிவபெருமானை அன்பின் வெளிப்பாடாக அரிய தமிழ் வார்த்தைகளால் திருப்பதிகம்பாடி தமிழ் வேத அர்ச்சனையை தொடக்கி வைத்தார் என அறிஞர்கள் சிலர் கருத்துரைப்பர். பாமரரும், படித்தவரும் பக்தியோடு இறைவனை உணர்ந்து வழிபடுவதற்கு தமிழிசைப் பாவாக அமைந்திருக்கும் திருமுறைகள் அன்று முதல் இன்றுவரை அரும் பயன் தருகின்றன. தமிழ் வேந்தர்கள் தென்னாட்டில் புகழ்கொடி கட்டிப்பறந்த காலத்தில் ஆன்மீக எழுச்சியை வளர்ப்பதற்கு திருக்கோயில்களை கட்டுவித்ததோடு திருமுறைகளைப் பேணுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தனர். திருமுறைகள் சைவசமய தத்துவக் கருத்துக்களையும், வாழ்வியற் கருத்துக்களையும், திருத்தலப் பெருமைகளையும், முழுமுதற் பொருளாகிய சிவபெருமானின பெருமையினைக் கூறும்போது மேற்குறித்த வற்றை இணைத்துக்கூறத் தவறவில்லை. கி. பி. 1060ம் ஆண்டு எழுந்த கல்வெட்டு ஒன்றில் "திருமுறைகளைப் பேணவேண்டும்" என்ற வாசகத்தினை அக்கால மன்னர்கள் பொறித்துள்ளார்கள். கி. பி. 1245ல் திருமுறைத் தேவாரச் செல்வன் திருமடம் என மடம் அமைத்துப் பேணியதற்கான கல்வெட்டு இன்றும் உள்ளது.

சோழப் பேரரசு காலத்தில் கங்கை முதல் கடாரம்வரை ஆண்ட இராஜராஜ சோழன், திருமுறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துப் பேணினான் என்பதற்கு பல சான்றாதாரங்கள் உண்டு. ஆலயங்கள் தோறும் இராஜராஜசோழன் காலத்தில் பண்ணோடு திருமுறைகளைப் பாட பலநூறு கோயில்களுக்கும் ஓதுவார்களை நியமித்து காணிக்கை கொடுத்தான் என சோழர்காலக் கல்வெட்டுக்கள் இன்றும் கருத்துக் கூறுகின்றன. ஆலயங்கள் தோறும் திருமுறை பாடுவது மட்டுமன்றி எவ்வேளையிலும் இறைவனை நினைந்துருகி மகிழ்வாய் மனநிறைவைப்பெற திருமுறைகளைப் பாடுகின்ற இயல்பு சைவத்தமிழர் பண்பாட்டோடு இரண்டறக் கலந்து இருந்து வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நித்திய வாழ்வில் திருமுறைகள்:

அதிகாலையில் எழுந்து இறைவனைப் பிரார்த்திப்பதற்கு சைவத்தமிழ் உலகம் திருமுறைகளை நன்கு பயன்படுத்துவது அக்கால வழமை. திருவாசகம் பாடிய மணிவாசகர் திருப் பெருந்துறையின் சிறப்பினைக் கூறுகின்றபோது திருப்பள்ளி யெழுச்சியில் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்'' எனக் குறிப்பிடுகிறார். நித்திய வாழ்வில் திருமுறைகளைப்பாடி இறைவனை வணங்குகின்ற போது கேட்கும் பலன் கிடைப்பதாக சைவமக்களிடையே நீண்டகால நம்பிக்கை நிலவி வருகிறது. எனவேதான் உண்ணும்போதும், உறங்கும்போதும், விழிக்கும் போதும், ஒருவனை வாழ்த்தும் போதும் திருமுறைகளை நன்கு பயன்படுத்துவர். திருமுறைகள் வேத சாரம் என்றும், வேதப் பொருள் என்றும், அனுபூதியாளர்கள் பலர் போற்றியுள்ளார்கள். இறைவனிடத்தில் தன் துன்பங்களை முறையிடுவதற்கும் திருமுறைகளைப் பயன்படுத்துகின்ற மரபு உண்டு. திருமுறை பாடிய அனுபூதிச் செல்வர்கள் தம் துன்பங்களில் இருந்து மீட்கத் துணை வருமாறு இறைவனை மன்றாடுகின்ற நிலையில் பாடிய திருமுறைகளை அடியவர்கள் தம்தம் நிலையில் நின்று இத் திருமுறைகளை பாடி துணை கேட்பது இயற்கை. நோயுற்றவர்கள் நொந்து மனம் வாடியவர்கள் இயற்கையின் சீற்றத்தால் அச்சப்படுபவர்கள், குறிப்பாக ''இடரினும் தளரினும்'' எனதுறு நோய் தொடரிலும் உனகழல் தொழுதெழுவேன்'' என்று சம்பந்தரின் பாடலைப் பாடி பக்தி வைராக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ளுகின்ற தன்மை இருந்துள்ளது. வினைப் பயன்களினால் துன்பப்படுகின்றவர்கள் ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என்ற அப்பர் சுவாமிகள் தேவாரத்தைப்பாடி பக்தியால் இறைவனை வழிபாடாற்றி துன்பங்களில் இருந்து தம்மைக் காப்பாற்றும் வழியாக திருமுறைகளைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதற்கு பிற்காலத்தில் வாழ்ந்த அனுபூதியாளர்கள், மற்றும் கிராமிய மரபுக் கதைகள், எம்முன்னோர்களின் வாய்மொழி மரபுக் கதைகள், எடுத்துக்கூறுகின்றன. நாள். கோள், கிரகநிலைகளிலிருந்து தம்மை மீட்கவும் திருமுறைகளைப் பக்தியோடு பயன்படுத்தும் மரபு உண்டு.

### ஆலயங்களில் திருமுறைகள்:

பல்லவர் காலம் முதல், திருக்கோவில் பூசை ஆராதனையோடு வழிபாட்டில் திருமுறைக்கு முக்கிய பங்கு கொடுக்கப்பட்டு வந்துள்ளது. சோழர் காலத்தில் கோயில்கள் தோறும் திருமுறை பண்ணோடு பாடுவதற்கு ஓதுவார்கள் நியமிக்கப்பட்டு திருமுறை தந்த அடியார்களுக்கு கோயில்கள் எழுப்பி திருமுறை ஏடுகளும், வழிபாட்டிற்குரிய ஒன்றாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தேவாரங்களை ஆராய்வதற்கு தனி மண்டபமும் அமைக்கப்பட்டது. சோழ அரசு ஆலயங்களில் திருமுறைக்கு கொடுத்த முக்கியத்துவம், சைவசமய மேன்மை இன்னும் உலகளாவிய ரீதியில் பரவுவதற்கு காரணம் எனலாம். ஆலயங்களில் நித்திய பூசையின் போது திருமுறைகள் தவறாது பாடப்படவேண்டும் என்பது எம் முன்னோர்களின் பிரதான விதிமுறை ஆகும். நல்லை நகர் நாவலர் பெருமான் இதனை வலியுறுத்தியுள்ளார். வேதபாராயணம் செய்யும் வேதியர்கள் அனைவரும் அனுபூதிச் செல்வர்கள் தந்த திருமுறைகளை பூசை வேளைகளின் போது, அர்ப்பணமாக்குதல் வேண்டும். சிதம்பரத்தில் தில்லைவாழ் அந்தணர்கள் இம்மரபைப் பேணியதாகக் கூறப்படுகிறது. தேவாரங்கள் சோழர் காலத்தில் சிதம்பரத்தில் இருந்து மீட்கப்பட்டதை ஞாபகப்படுத்தியே திருமுறை தொடங்குவதற்குமுன்'திருச்சிற்றம்பலம்' என்ற வார்த்தையை இன்றுவரை எல்லோரும் பிரயோகிப்பர். கோயில் என்றால் சிதம்பரம் எனக்கருதும் சைவ உலகம் நித்திய பூசையின் போது வேதியர்களும் திருமுறை ஓதுகின்ற மரபைத் தொடர்ந்து பேணவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் தோறும் திருமுறைக ளைக் கூட்டுப்பிரார்த்தனை செய்கின்ற முறை நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இம்மரபு ஞானசம்பந்தர் காலத்திலேயே தொடங்கிவிட்டது. சம்பந்தர் தலயாத்திரை மேற்கொள்கின்ற போதெல்லாம் அடியார்கள் புடைசூழ செல்லுவார். மீளா அடியவர்கள் ஒன்றுகூடி திருக்கூட்டமாக ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனை நடத்துகின்ற தன்மை இன்றும் நிலவுகிறது. கூட்டுப்பிரார்த்தனைகளால் புலனடக்கமும் பக்தி வைராக்கியமும் வளர்ச்சி பெறுகின்றன. இறைவனுக்கு மிகப்பிடித்த அர்ச்சனை, இசை அர்ச்சனை ஆகும். சுந்தரரை பரம்பொருளாகிய சிவபெருமான் "பாட்டே அர்ச்சனையாகும் பாடு" எனக்கேட்டதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**சைவக் கிரியைகளின்போது திருமுறைகள்**

சைவசமயத்தவர்கள் தம் வாழ்வில் வழிபாட்டிற்குரிய அத்தனை கிரியைகளிலும் திருமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். தமது இல்லங்களில் வாழ்க்கையோடு தொடர்புடைய சடங்குகளில் எல்லாம் திருமுறைகளைப் பாடத் தவறுவதில்லை. குறிப்பாக மங்களகரமான கிரியைகளிலும் ஒருவருடைய இறப்புக்குப் பின்னால் செய்யப்படும் அபரக் கிரியைகளிலும்கூட திருமுறைகளுக்கு உரிய இடம் கொடுத்தனர். திருமணக் கிரியையின்போது மணமக்களை பார்வதி சிவனாகப் பாவனைசெய்து மாங்கல்யம் நிறைவுற்றதும் தமிழ்நாட்டில் சில இடங்களில் இன்றும் திருமுறை பாடுகின்ற மரபு உண்டு. ஈழநாட்டிலும் சில வேதியர்கள் இக்கிரியையின்போது திருமுறை பாடும் பண்பை வலியுறுத்துவர். குறிப்பாக ஞானசம்பந்தர் சிவபெருமானையும், பார்வதியையும் நினைந்து பாடிய பாடலான,

"மண்ணில் நல்ல வண்ணம்
 வாழலாம் வைகலும்
எண்ணின் நல்லகதிக்கு
 யாதுமோர் குறைவில்லை
கண்ணினல் அகதுறும்
 கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும்
 பெருந்தகை யிருந்ததே"

எனப் பாடிய பாடலை இச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவர். இம்மரபு என்றும் தொடரவேண்டும். அபரக்கிரியைகளின் போது இறந்த உடம்பினை கடவுளாகப் பாவனைசெய்து வழிபாடு ஆற்றும்போது மிகப் புனிதமாக தூய்மையாக ஆசார சீலத்துடன் திருமுறைகளை ஓதவேண்டும்.

திருமுறைகள் சைவத் தமிழர்களின் எல்லாச் சடங்குகளிலும் ஓதப்பட்டதற்குச் சான்றாதாரமாக தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றாகிய தாய்லாந்து நாட்டில் இன்றும் மன்னனின் முடிசூட்டு விழாவிற்கு திருவாசகம் ஓதப்படுகிறது. சோழப் பேரரசு காலத்தில் பரவியிருந்த சைவசமயம் இம்மரபைப் பேணியதனை இன்றும் தாய்லாந்து நாட்டுச் சடங்கின் போது அறிந்துகொள்ள முடிகின்றது.

**திருமுறைகளும் ஈழநாடும்**

பல்லவர் காலத்திலேயே பஞ்ச ஈஸ்வரங்களில் அடங்குகின்ற திருத்தலங்களாகிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய திருத்தலங்களில் சம்பந்தர், சுந்தரரால் தேவாரம் பாடப்பட்டுள்ள ஈழநாட்டில் திருமுறைகளை வழிபாட்டின்போது முக்கியத்துவம் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சைவசமயத்தின் முக்கிய ஆவணமாக மதிக்கும் மரபு உண்டு. திருமுறைகளுக்கு தென்னாட்டவர் போல் இங்கும் விழா எடுப்பதும், பூஜையில் வைத்து வழிபடுவதும் பாராயணம் செய்வதும் என்றும் வழக்கில் உண்டு. ஈழநாட்டில் திருமுறைகளைப் பாதுகாக்கின்ற பணியே ஆலயங்கள் சமய நிறுவனங்கள் தொடர்ந்து பேணவேண்டும். திருமுறைகளை பாதுகாப்பதில் ஈழநாட்டை ஆண்ட அக்கால மன்னர்களும், மக்களும், முன்னின்று உழைத்துள்ளனர். நாவலர் பெருமான் முதல் யோகர் சுவாமிகள் போன்ற சித்தர்கள் வரை திருமுறைகளைப் பேணுவதில் அக்கறை காட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுறைகளில் வெளிப்படுத்தப்படும் தத்துவங்கள்;**

சைவத் திருமுறைகள் அரிய சைவ சித்தாந்தக் கருத்துக்களையும், வேதஉட் பொருளையும் விளக்கி நிற்கின்றன. பதியாகிய இறைவனது இலட்சணங்களையும், உயிராகிய ஆன்மாவைப் பற்றிப் பிடித்துள்ள ஆணவம், கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் திருமுறைகள் மிக ஆழமாக விளங்குகின்றன. 10ஆம் திருமுறையாகிய திருமந்திரத்தில் அடங்கியுள்ள 3000 பாடல்களும் உலகியல் தத்துவங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. பிறப்பு, இறப்பு, பிறவிகள், பிறப்பில் நின்றும் நீங்க வழிகள் போன்ற அரிய தத்துவங்களை திருமுறைகள் விளக்குகின்றன. திருவாசகத்தை மொழி பெயர்த்த பூபடிகள் திருமுறைகளின் தத்துவங்களை விரித்துக் கூறியுள்ளனர். திருமுறைகளில் சொல்லப்பட்டுள்ள தத்துவங்களை இன்றைய மெய்யியல் தத்துவ வியலாளர்கள் ஆராய்ந்து போற்றுவதனை அறியலாம்.

இத்தகைய சைவத் தமிழரின் மதிப் பார்ந்த திருமுறைகளை சைவ உலகம் தூய்மையாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். ஆலயங்கள் தோறும் பன்னிரு திருமுறை நூல்களும் பேணிப் பாதுகாத்து பூசையில் வைத்துப் பூஜிக்கப் படல் வேண்டும், சைவசமயத்தவர்களின் கிரியைகள் அத்தனையிலும் திருமுறைகளுக்கு முக்கிய இடம் கொடுத்தல் வேண்டும். தமிழகத்தில் தருமபுர ஆதீனம், பன்னிரு திருமுறைகளையும் தொகுத்து மீள்பதிப்பு செய்வதில் 1995 முதல் முயன்று வருவது பாராட்டுக்குரியது. திருமுறைகளைப் பேணும் பணியில் சைவ நிறுவனங்கள் முன்னின்று உழைக்க வேண்டும். பலநூறு ஆண்டுகளாக எம் சந்ததி காப்பாற்றிய இத்திருமுறைகள் சூரியன், சந்திரன் உள்ளவரை இவ்வையகத்தில் வாழ நாம் வழிசமைக்க வேண்டும். திருமுறைகளைத் தந்த சிவனடியார்களின் திருத்தாள் போற்றி சைவசமயத்தின் உயிர்நாடியாக விளங்கும் திருமுறைகள் வாழப் பிரார்த்தித்துக்காப் போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இலங்கையில் இந்து மதத்தின் தொன்மையும் மகிமையும்

— இ. குணநாதன்
அதிபர்
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்
நீர்வேலி.

இலங்கையில் இன்று பௌத்தம் அரச மதமாக விளங்கினாலும் பௌத்த மதத்தைவிட இந்து மதம் தொன்மையினையும் வரலாற்றுப் புகழினையும் கொண்ட மதமாகும். மரபு வழிக்கதைகளும் தொல்பொருளியல் ஆய்வுகள் மூலம் கிடைத்த சிலைகள், கல்வெட்டுக்கள், நாணயங்கள் போன்றவையும் சில வரலாற்றாசிரியர்களின் கூற்றுக்களும் இவ்வுண்மையை நிரூபணமாக்குகின்றன. பௌத்த மதத்தின் அரச செல்வாக்கின் காரணமாக இந்து மதத்தின் வரலாற்று உண்மைகள் வெளிக் கொணரப்படாமல் இருப்பது துரதிஷ்டவசமானதேயாகும்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பான்மையானோர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாவர். இந்நிலையில் 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடி நம் தமிழ்க்குடி' என்ற அழியாப் புகழ் கொண்ட வாசகத்தை நோக்கும்போது இந்து மதத்தின் தொன்மையை அறிய முடிகிறது. இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் சிந்துவெளிப் பிரதேசத்தில் நிலவிய மொஹஞ்சதாரோ-ஹரப்பா நாகரிகங்களின் எச்சங்கள் இந்து மதத்தின் தொன்மையை உலகறிய வைத்துள்ளன. இந்தியாவுடன் இலங்கை நீண்டகால வரலாற்றுத் தொடர்புகளைக் கொண்டிருப்பதனால் இலங்கையில் இந்துமதத்தின் வரலாறும் தொன்மையானது என ஊகிக்க இடமுண்டு.

கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் விஜயனது வருகையுடனேயே இலங்கையின் வரலாறு ஆரம்பமாகிறது என சிங்கள பாளி வரலாற்று நூல்கள் கூறினாலும் அதற்கு முன்பே இங்கு மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை மரபு வழிக் கதைகள் மூலம் அறிய முடிகிறது. மிகுந்த வலிமை நிரம்பிய தசக்கிரீவன் ஆகிய இராவணன் இலங்கையை ஆட்சி செய்த மன்னன் என்பதையும் அவன் ஒரு சிறந்த சிவபக்தன் என்பதையும் கர்ண பரம்பரைக் கதைகள் வாயிலாக அறிகிறோம். வானரங்களின் தலைவனான வாலியும் சிவனிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தான். " புரமெலாம் எரி செய்தோன் முதலினோர் பொருவிலா வரமெலாம் .." என்ற கம்பராமாயணச் செய்யுள் வாலி, சிவனிடமிருந்து வரம் பெற்ற சிறப்பினைக் காட்டுகிறது. எனவே, இலங்கையின் வரலாறு தொடங்குவதற்கு முன்பே இந்துமதம் இங்கு புகழுடன் விளங்கியது.

கி. மு. 3 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மகிந்த தேரரால் பௌத்த மதம் இங்கு கொண்டு வரப்படுவதற்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த சிங்கள - தமிழ் மொழி பேசிய மக்களின் மூதாதையர்கள் இந்துக்களாகவே இருந்தனர். இதனை கி. பி. 7 ஆம் நூற்றாண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா வந்த குவான்சுவாங் என்ற சீன யாத்திரிகனும் தனது பயணக் குறிப்புக்களில் குறிப்பிட்டுள்ளான். மகிந்ததேரர் தேவநம்பியதீசன் சிங்காசனம் ஏறும் வரை தனது இலங்கைப் பயணத்தைப் பின்போட்டிருந்தான் என முக்கிய வரலாற்று நூலான மகாவம்சம் கூறுவதில் ஒரு வரலாற்று உண்மை உண்டு. தேவநம்பியதீசனுக்கு முன்பு ஆட்சிப் பீடத்திலிருந்த முடசிவன் காலத்தில் இந்துமதம் மேலோங்கி இருந்ததால் அவன் பிறமதங்களை ஆதரிக்கமாட்டான் .என்ற எண்ணம் மகிந்ததேரருக்கு இருந்ததே அவ்வுண்மையாகும்.

பௌத்தம் இங்கு வருவதற்கு முன்பே வடபகுதியிலுள்ள ஜம்புக்கோள பட்டினம், வடமேற்கிலுள்ள மாதோட்டம், கிழக்கேயுள்ள கோணேஸ்வரம், முத்துக்குளிப்பில் முக்கியம் பெற்ற முன்னீச்சரம் என்பன நாகரிக வளர்ச்சியில் முன்னின்ற துறைமுகங்களாக விளங்கின என்பதை வரலாற்றுக் கதைகள் நிரூபிக்கின்றன. நாகரிக வளர்ச்சியில் முன்னணியில் நின்ற இத் துறைமுகப் பட்டினங்களில் இந்துமத வழிபாட்டுத் தலங்களும் மகிமையுடன் விளங்கின. இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் சேர். போல் பீரிஸ் என்ற வரலாற்று அறிஞரால் முன்வைக்கப்பட்ட கூற்று இக் கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது. ''விஜயன் இலங்கைக்கு வருவதற்கு அதிக காலத்திற்கு முன்னரேயே இலங்கையில் கருத்தில் கொள்ளத் தக்கனவும் முழு இந்தியாவின் வழிபாட்டுக்குரியனவுமான ஐந்து சிவாலயங்கள் இருந்தன. இவையாவன மகாதீர்த்தத்திற்கு அண்மையிலுள்ள திருக்கேதீஸ்வரம், முத்துச்சிலாபத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த முன்னீஸ்வரம், மாதோட்டைக்கருகில் தண்டேஸ்வரம், பெரிய கொட்டியாரக் குடாவுக்கு எதிராகவுள்ள திருக்கோணேஸ்வரம், காங்கேசன் துறைக்கு அண்மையிலுள்ள நகுலேஸ்வரம். '' (பீரிஸ். போல், 1917 : 17–18) இவ்வறிஞரின் கருத்தும் இந்து மதத்தின் தொன்மையையும் மகிமையையும் தெளிவு படுத்துகின்றது.

இந்து மதத்தின் குருமாராகிய பிராமணர் ஆதிகாலத்தில் பெற்றிருந்த முக்கியத்துவமும். அம்மதத்தின் தொன்மையையும் மகிமையையும் எம்மவர்க்கு உணர்த்துகின்றன. அரச நிறுவனங்களோடு சேர்ந்த கிரியைகள், அரச குடும்பத்தினரின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள கிரியைகள் என்பனவற்றை பௌத்தமதம் வந்த பின்னரும் பிராமணரே நிறைவேற்றியதிலிருந்து அவர்கள் சமுதாயத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணரலாம். அரச சபையில் ''புரோகிதர் என அழைக்கப்பட்ட மதகுரு செல்வாக்குடையவராக விளங்கினார். அரசனுக்கு ஏற்படும் ஐயங்களைத் தீர்ப்பதோடு கல்வி கேள்விகளிலும் தலைசிறந்தவர்களாகப் புரோகிதர் விளங்கினர். இவர்கள் இளவரசர்களுக்கு ஆசிரியர்களாகவும், வைத்தியர்களாகவும் சந்தர்ப்பம் வரும் போது அரச பதவியின் தலைவிதியை நிர்ணயிப்பவர்களாகவும் விளங்கினர்.

கி. மு. 4 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தைத் தலைநகராக்கி இலங்கையை ஆட்சி செய்த பண்டுகாபய மன்னன் பிராமணர்களுக்கென பிரத்தியேகமான வசிப்பிடத்தை அமைத்ததாக மகாவம்சம் தெரிவிக்கிறது. ''பிராமணா வட்டம்'' என அவ்வசிப்பிடம் அழைக்கப்பட்டது. தேவானம்பியதீசன் அசோகனுக்கு அனுப்பிய தூதுக்குழுவில் ஒரு பிராமணரும் இடம் பெற்றிருந்தார். அரசமரக் கிளை அநுராதபுரத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட வழியில் ''திவாக'' என்ற பிராமணனின் கிராமத்தில் தரித்துச்சென்றதாகவும் அரச மரக்கிளை நாட்டும் வைபவத்தில் ''திவாக'' என்ற பிராமணன் விசேடமாக அழைக்கப்பட்டதாகவும் வரலாற்று நூல்கள் கூறுவதிலிருந்து பிராமணர் பெற்றிருந்த செல்வாக்கை உணரலாம்.

பௌத்தமதம் அரச ஆதரவு பெற்றுக்காணப்பட்டதால் பிராமணர்கள் சில சந்தர்ப்பங்களில் இந்துமதத்தை மேனிலைக்குக் கொண்டுவருவதற்காக அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைந்த சந்தர்ப்பங்களும் உண்டு. கி. மு. 1 ஆம் நூற்றாண்டில் வட்ட காமினி மன்னன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்தபோது உருகுணையில் திஸ்ஸ என்ற பிராமணன் கிளர்ச்சியில் ஈடுபட்டான். இவனது கிளர்ச்சி உக்கிரமாகக் காணப்பட்டதால் பௌத்த பிக்குமார் நாட்டை விட்டுச்செல்ல வேண்டி ஏற்பட்டது. மேலும், அனுலா என்ற அரசி தனது கணவனுக்கு நஞ்சூட்டிக் கொன்ற பின்னர் நீலிய என்ற பிராமணனை மன்னனாக்கியதாகவும் மகாவம்சம் (மகாவம்சம் 34 : 25) குறிப்பிடுவது பௌத்தம் வந்த பின்னரும் இந்து மதத்தின் அசைக்க முடியாத வலிமையைக் காட்டுகின்றது.

பௌத்தம் இங்கு வந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் இந்து மதத்திற்கும் அதன் குருமாராகிய பிராமண வகுப்பினருக்கும் அரசர்கள் ஆதரவு கொடுத்து வந்ததை கி. பி. 5 ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த சீன யாத்திரிகனாகிய பாகியானின் குறிப்பு தெளிவுபடுத்துகின்றது. இவன், இலங்கை மன்னன் கடுமையான பிராமணீய விதிகளின்படி தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டதாகக் குறிப்பிடுகின்றான். பிராமணர்களின் செல்வாக்கை இரண்டாம் சேன மன்னன் காலத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றும் எடுத்துக் காட்டுகிறது. ''இம்மன்னன் பொன்னாலான ஆயிரம் சாடிகளில் முத்துக்களை இட்டு நிரப்பி ஒவ்வொன்றின் மேல் ஒவ்வொரு விலையுயர்ந்த இரத்தினக் கல்லை வைத்து அவற்றை ஆயிரம் பிராமணர்களுக்கு இரத்தினக்கல் பதித்த பாத்திரங்களிலே பாற்சோறும் அத்துடன் பொன் நூலும் தானமாக வழங்கினான்.'' என சூளவம்சம் (சூளவம்சம் 51 : 65 — 69) என்ற வரலாற்று நூல் தெரிவிக்கின்றது. எனவே, வரலாற்றுச் சான்றுகளை நோக்கும்போது இந்து மதத்தின் குருமாராகிய பிராமணர்கள் ஆசிரியர்களாக, புரோகிதர்களாக அரச ஆலோசகர்களாக முக்கியம் பெற்றிருந்ததைக் காணலாம்.

கி. மு. 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 1 ஆம் நூற்றாண்டு வரை கண்டெடுக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பெயர்கள் அக்காலத்தில் நிலவிய இந்து வழிபாட்டு முறைகளை எடுத்தியம்புகின்றன. வியாபாரிகள், கிராம சபை உறுப்பினர்கள், இல்வாழ்வோர், இளவரசர்கள், அரசர்கள், நிர்வாகிகள் ஆகியோர் 'சிவ' என்ற பெயரைச் சூடியிருந்ததைப் பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இது சிவ வழிபாடு சமூகத்தில் பல்வேறு மட்டங்களிலும் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டுகிறது. சிவனால் பாதுகாக்கப்படுபவன் என்ற பொருள் தரும் 'சிவகூட', 'சிவக்கிரத', 'சிவபாலித' என்ற சொற்களும் சிவனடியான் என்ற பொருள்தரும் 'சிவதாஸ' என்பதும் சிவ வழிபாட்டின் மகிமையை எடுத்தியம்புகின்றன. இக்கருத்தை வலியுறுத்துவதற்கு கி. பி. 1 ஆம் நூற்றாண்டில் ஈழத்து மக்கள் சிவனையே வழிபட்டனர் என்ற கிரேக்க அறிஞரான பிளினியின் (Beliney, C. T, 1968) கூற்றும் சான்றாக உள்ளது.

பிராமிக் கல்வெட்டுக்கள் முருக வழிபாட்டின் மகிமையையும் வெளிக்காட்டுகின்றன. இக்கல்வெட்டுக்களில் வரும் 'வேல', 'வேலச', 'குமர' போன்ற குறிப்புக்கள் முருக வழிபாட்டுடன் தொடர்புடையவையாகும். கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் போன்ற இடங்களில் காணப்படும் 'கந்தழி வழிபாடும்' முருகவழிபாட்டின் தொன்மையைக் காட்டுகிறது. மேலும், பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் 'பம', 'பம்தாஸ', ஆகிய சொற்கள் பிரமன் மக்களால் வழிபடப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் வேதகாலக் கடவுளர்களாகிய அக்னி, இந்திரன், மித்திரன், சோமதேவ, சூரியன் போன்றவர்களும் ஆதிகாலமக்களால் வழிபடப்பட்டனர். விநாயக வழிபாடு பற்றிய குறிப்புக்களும் பிராமிக கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளன. 'கண', 'கணச', 'கணகச', 'கணகுட்டச', 'கணதத' ஆகிய பதங்கள் கணங்களின் தலைவனாகிய விநாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையே குறித்து நிற்பதாக வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

பௌத்தம் இங்கு வருவதற்குமுன்பு நிலவிய இந்து வழிபாடுகளில் சக்தி வழிபாடும் முக்கியம் பெற்றுள்ளதை நாட்டின் பல்வேறு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட சுடுமண்ணாலாகிய பெண் உருவங்கள் உறுதிப்படுத்துகின்றன. புத்தளம் மாவட்டத்திலுள்ள அரிப்பு, தல்கஸ்வேவ, தப்போவ, மரதன்மடுவ ஆகிய இடங்களிலும் கிளிநொச்சியிலுள்ள உருத்திரபுரத்திலும் வவுனியாவிலுள்ள பன்சல்வேவவிலும், அநுராதபுரத்திலுள்ள பண்டெல்லவேவவிலும் பெண்தெய்வ உருவங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை அன்னையின் வடிவங்களான கொற்றவை, கண்ணகி, துர்க்கை, காளி ஆகிய மூர்த்திகளினுடையதாகக் குறிப்பிடுகின்றனர், இந்த உருவங்களை ஆராய்ந்த தெரணியாகலை என்ற வரலாற்றாசிரியர் சிந்துவெளி போன்று இலங்கையிலும் மிகப் பழைய காலத்திலிருந்து தாய் வணக்கம் இருந்து வந்ததாகக் குறிப்பிடுகின்றார். (Detaniyagala. P. E. P. 1960, 1961).

பௌத்த சிங்கள மன்னர்கள்கூட இந்து மதக் கிரியைகளில் நம்பிக்கை கொண்டு அவற்றைப் பின்பற்றியதாக பாளிவரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. மகாநாக என்ற இளவரசன் கோகர்ணக் கடற்கரையில் கடலை நோக்கிய வண்ணம் கிரியை ஒன்றில் பங்குபற்றியதாகவும் அப்போது காட்சி தந்த பாம்பைத் தொட்டதன் மூலம் அரச பதவி பெறும் வாய்ப்பைப் பெற்றான் எனவும் சூளவம்சம் (சூளவம்சம் 41 : 80) கூறுகின்றது. பாம்பு இந்து மதத்தில் தெய்வத்தின் அம்சமாகக் காணப்படுவதைநாம் அறிவோம். மேலும், இக் கடற்கரையில் கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் மானவர்மன் என்ற இளவரசன் உருத்திராக்ஷ மாலை ஒன்றைக் கையிலேந்தி மந்திரம் ஒன்றை உச்சரித்ததாகவும் அப்போது முருகன் மயிலேறிவந்து வரமளித்ததாகவும் சூளவம்சம் (சூளவம்சம் 57 : 4—13) கூறுவது இந்துமத கிரியைகளின் மகிமையையும் அவற்றில் சிங்கள பௌத்தர் வைத்திருந்த நம்பிக்கையையும் காட்டுகின்றன.

சிலகால கட்டங்களில் இந்து சமயத்தின் அபரிமிதமான செல்வாக்கைகண்டு பொறாமை கொண்ட சிங்கள பௌத்த மன்னர்கள் இந்துக் கோவில்களை அழித்துள்ளனர். உதாரணமாக கி. பி. 3ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த மகாசேனன் என்ற மன்னன் திருகோணமலை, ஏறாவூர் ஆகிய இடங்களிலிருந்த பிராமணீயத் தெய்வங்களின் கோயில்களை அழித்து அவ்விடங்களில் விகாரைகளைக் கட்டியதாக மகாவம்சம் (மகாவம்சம் 37 : 4) கூறுகிறது. ஆனால் கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இந்த நிலையில் மிகுந்த மாற்றம் ஒன்றை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இக்காலப் பகுதியில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த இரண்டாம் மகிந்தன் என்ற மன்னன் "அங்குமிங்குமாக அழிந்திருந்த தேவாலயங்களைப் புனருட்தாரணம் செய்து அவற்றுக்கு விலையுயர்ந்த விக்கிரகங்களையும் செய்வித்ததோடு பிராமணர்களுக்கு மன்னர்கள் உண்பது போன்று இனிய உணவும் கொடுத்துப் பொற்கிண்ணங்களிலே அவர்களுக்குச் சர்க்கரையுடன் பாலும் கொடுத்தான்" என சூளவம்சம் (சூளவம்சம் 48 : 143—144) கூறுவது இந்து சமயத்தின் மகிமையைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.

திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய நாயன்மார்களின் வாயிலாக இலங்கையில் சிறப்புற்று விளங்கிய இந்துத் தலங்கள் பற்றி அறியக் கூடியதாக இருக்கின்றது. இலங்கையின் வடமேற்கில் அமைந்துள்ள திருக்கேதீச்சரம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைக் கொண்டதாகும். "மாதோட்டத்துள் மன்னு பாலாவியின் கரையில் கேதீச்சரம்" எனச் சம்மந்தரும் மாதோட்ட நன்னகரில்" "... பாலாவியின் கரைமேல், செய்யாச் சடைமுடியான் திருக்கேதீச்சரத்தானே" எனச் சுந்தரரும் குறிப்பிடுவது திருக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீச்சரத்தின் மகிமையைப் புலப்படுத்து கின்றது. இதேபோல கிழக்கில் அமைந் துள்ள திருக்கோணேச்சரத்தின் மகிமை யையும் சம்பந்தரின் தேவாரங்கள் எடுத் துக் காட்டுகின்றன. ''குடிதனை நெருங் கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோண மாமலையமர்ந்தாரே'' ''கரைகெழுசந் தும் காரகிற் பிளவு மளப்பருங் கனமணி வரன்றிக் குரைகடலோத நித்திலங் கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே' ''கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்தாரே'' முதலான சம்பந்தரின் தேவார அடிகள் திருகோண மலையின் மகிமையைக்காட்கின்றன,

தொல் பொருளியல் அகழ்வுகளின் போது இலங்கையின் பல்வேறு பாகங்க ளிலும் கண்டெடுக்கப்பட்ட நாணயங்க ளும் இந்து சமயத்தின் தொன்மையையும் மகிமையையும் உணர்த்துகின்றன. நாண யங்களில் எருது, யானை, குதிரை, சூரி யன், பிறை, சக்கரம், மீன், மரம், நாய் சிங்கம், மயில் முதலான இலச்சினைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இயற்கை வழிபாட்டை எடுத்தியம்பும் சின்னங்கள் என வாதிட்டாலும் எமது இந்து மதத் திற்கும் இவற்றுக்கும் தொடர்புகள் இருப்பதை மறுக்க முடியாது. எருது நாய், சிங்கம், மயில் என்பன முறையே சிவன், பைரவர், துர்க்கை, முருகன் ஆகிய இந்து தெய்வங்களின் வாகனங்களாகும் சூரியன், பிறை என்பன சிவனுடன் இணைந்தவையாகக் காணப்படுகின்றன. சக்கரம், மீன் என்பன திருமாலை நினை வூட்டுகின்றன.

கி.பி. 1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அச்சில் வார்க்கப்பட்ட இலச்சினை களைக் கொண்ட நாணயங்கள் பல முல் லைத்தீவு, அநுராதபுரம், திஸமகாராம ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள் ளன. இவற்றில் யானை, எருது, நந்தி பாதம் முதலான சின்னங்கள் உள்ளன. பெரும்பாலும் செப்பிலமைந்த இந்நாண யங்கள் நீள்சதுரம் அல்லது வட்டவடி வம் கொண்ட அமைப்பை உடையன. முல்லைத்தீவில் கண்டெடுக்கப்பட்ட நாணயத்தின் முன்புறத்தில் ஒருவர் மும் பின்புறத்தில் படுத்திருக்கும் எருது ஒன்றின் உருவமும் அமைந்துள்ளன. முன் புறத்தில் இருப்பது சிவனின் உருவம் என வும் பின்புறத்தில் இருப்பது சிவனது வாகனமாகிய எருதுவினுடையதெனவும் 'பாக்கர்' என்ற வரலாற்றாசிரியர் தெரி விக்கின்றார். ஆண் தெய்வம் மட்டுமல்ல சில நாணயங்களில் பெண் தெய்வமும் சித்தரிக்கப்பட்டுள்ளது. முன் பக்கத்தின் பெண்ணின் உருவமும் பின்பக்கத்தில் படுத்திருக்கும் எருது, இலையுடன் கூடிய கும்பம் என்பனவும் காணப்படுகின்றன. இத்தகைய நாணயங்கள் சிவனின் மனை வியாகிய பார்வதியைக் குறிப்பனவாக ஊகிக்க இடமுண்டு.

எனவே, இங்கு நோக்கியவற்றிலி ருந்து பௌத்த மதம் இலங்கைக்கு வரு வதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்து மதம் செழிப்புடையதாக இருந் ததை ஏற்றுக்கொள்ளலாம். பௌத்தம் அரச மதமாக வந்த பின்னரும் ஒரு சில சந்தர்ப்பங்களைத் தவிர இந்து மதம் தன்னிலை தளராது தலை நிமிர்ந்து நின் றது. இன்றும் பௌத்தம் அரசின் ஆத ரவைப் பல துறைகளிலும் முழுநிறை வாகப் பெற்று தழைத்தோங்கினாலும் இந்து மதம் தன்மகிமையில் மங்கவில்லை. இந்து மத மூர்த்திகளின் அருள்பாலிப்பை அரசுத்தலைவர்கள் இன்றும் வேண்டுவ தைக் காண்கிறோம். எனவே, இந்து மதம் தொன்மையானது மட்டுமல்ல அன்றிலிருந்து இன்றுவரை மகிமையுடன் மங்காது மிளிர்ந்துவரும் மதமாகவும் விளங்கிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சைவ நீதி

— இ. தியாகராசா ( நீர்வை இரதி)

நாம் இந்துக்கள். சிவனை முழு முதற் தெய்வமாகக் கொண்டவர்கள். சைவ சமயத்தவர். சைவ சமயம் முதன் முதல் தோன்றிய சமயமாகும். சைவ சமயம் எப்போதுதோன்றியது என்பதற்கு சரித்திரத்தில் ஆதாரமில்லை. இப்படி யான பழைமை பெருமையும் வாய்ந்த சைவசமயத்தவர் என்று எண்ணும்போது எமக்குப் பெருமையும் மதிப்பும் உண்டா கின்றது. சைவ சமயத்தில் உள்ள பெரு மைகளை உணர்ந்து மேலை நாட்டவர் பலர் இன்று சைவர்களாக மாறி வரு கின்றனர். இப்பேர்ப்பட்ட சைவ சமயத் திற்கு ஒரு நீதி உண்டு. அது மேன்மை கொள் சைவ நீதி. அந்த நீதிகளைப் புறக் கணித்து விட்டு எத்தனை பேர் இன்று சைவர்கள் என்று சொல்லிக்கொண்டு வாழ்கிறோம்.

சைவ சமயத்திலே விலக்கப்பட்ட பஞ்ச மாபாதங்கள் ஐந்தாகும். அவை யாவன: மாமிசம் புசித்தல், மது அருந்து தல், பொய் பேசுதல், களவெடுத்தல், பிறன் மனை நயத்தல் என்பனவாகும். உண்ணற்பொருட்டு உயிர்களை கொலை செய்தலும் பின் ஊனை உண்டலும் சைவ சமயத்தில் விலக்கப்பட்ட ஒன் றாகும். உயிர்களெல்லாவற்றிலும் இறை வன் வியாபித்து இருக்கிறார். இறைவன் அருளால் உருவான உயிரை அழித்தலும் உயிர் நீங்கிய உடலைப் புசித்தலும் சைவ சமயத்தவர்களால் தவிர்க்கப்படவேண் டிய ஒன்றாகும். தன்னுடைய உடலைப் பெருக்க வைப்பதற்கு பிற ஊனை உண் பவன் எப்படி அருளாளனாக இருக்க முடியும்? அப்பேர்ப்பட்டவர் எப்படித் தம்மை சைவ சமயத்தவர் என்று கூறிக் கொள்ள முடியும்?

சைவ சமயத்தில் விலக்கப்பட்ட முக் கியமான அடுத்த அம்சம் மது அருந்த லாகும். உலகில் நடைபெறும் சகல தீமை களுக்கும் மது அருந்துதலே காரணமாக அமைகின்றது. மது அருந்திபவன் பிற பஞ்சமாபாதங்களைக் கூசாது தன் அறி வற்ற நிலையில் புரிகிறான். களவெடுத் தல், பிறர் மனை நயத்தல் போன்றவற் றைச் செய்ய அவன் பின் நிற்பதில்லை. மது அருந்துகிறவனை பெற்ற தாய்கூட வெறுக்கிறாள் என்று தெய்வப் புலவர் வள்ளுவர் கூறுகிறார். இப்படியான சகல தீமைகளுக்கும் மூலகாரணமான மதுவை அருந்திய நிலையில் சில சைவர்கள் ஆல யங்களுக்குச் செல்கின்றனர். அங்கு வழி படும் உண்மையான பக்தர்களுக்கு இடைஞ்சல்களைக் கொடுக்கின்றனர். இன்று மது அருந்துதல் ஒரு நாகரீக மாகக்கூட கருதப்படுகிறது. நன்றாகக் கற்றவர்கள் மதுவினால் ஏற்படக்கூடிய கேட்டினை நன்கு தெரிந்தவர்கூட மது வினை அருந்துகிறார்கள். சைவ சமயப் புறச் சின்னங்களைத் துலக்கமாகப் பூசி அல்லது அணிந்துகொண்டு கூட மது போதையில் உலாவுகின்றனர். இது கவ லைக்குரியது. சைவசமயத்திற்கு முரணா னது. மது அருந்துதல் போன்று கேடு விளைவிக்கக் கூடியதே பிறர் மனை நயத் தல். அதாவது விபசாரமாகும். இத னால் சமூகத்தில் கொலைகளும், கொடிய நோய்களும் பரவுகின்றன. அண்மையில் உலகைப் பயமுறுத்தும் 'எயிட்ஸ்' என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் உயிர்க்கொல்லி நோய்க்கு மூல காரணம் விபசாரமே. ஏக பத்தினிமுறை சைவ சமயத்தினரால் கடைப்பிடிக்கப்பட்ட நீதியாகும்.

வாய்மை சைவ சமயத்தில் வற்புறுத்திக் கூறப்பட்ட நீதியாகும். உடற்தூய்மை நீரால் அமைவதுபோல அகத்தூய்மை வாய்மையால் அமையும் என வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். எவ்வளவுதான் நீராடி உடலைத் தூய்மை உள்ளதாக வைத்திருந்தாலும் உண்மை பேசாதவர் தூய்மையானவர் அல்லர். தூய்மையற்ற உள்ளத்தில் இறைவன் உறைய மாட்டான். ஆகவே சைவ நீதியின்படி நாம் உண்மை பேசுபவர்களாக வாழ்தல் அவசியமாகும். வாய்மை எனப்படுவது யாதொன்று தீமை இல்லாதவற்றையே பேசுதல் ஆகும் எனத் தெய்வப் புலவர் வரையிலக்கணம் கூறியுள்ளார் வாய்மைக்கு.

பிறர் பொருளைக் கவர எண்ணுதல் களவு. களவும் சைவநீதியில் தவிர்க்கப்பட்ட ஒன்றாகும். பிறர் பொருள்மீது ஆசை வைப்பதும், அதனைக் கவர எண்ணுவதும் தீமையே பயக்கும். அதனால் அவமானமும்படவேண்டி ஏற்படும். களவினால் வரும் செல்வம் இருக்கும் செல்வத்தையும் அழித்துவிடும். ஆதலால் பிறர் பொருள்மீது ஆசைகொள்வதும், அவர்களுக்குத் தெரியாமல் அதைக் கவர எண்ணுவதும் பாவமான காரியமாகும். அதேநேரத்தில் ஆலயங்களுக்குச் செல்வோர் பிறர் கவனத்தைத் தம்பால் ஈர்க்கும் வகையில் அணிகலன்களை அணிந்து செல்வதும் தம்மிடமுள்ள செல்வத்தைப் பறைசாற்றுவதுபோல் டாம்பீகமாக நடந்துகொள்வதையும் தவிர்த்துக்கொண்டால் திருட்டைத் தூண்டும் எண்ணங்கள் எழாது.

ஆலயம் என்பது இறைவன் உறையும் இடம். அது ஆன்மாக்கள் தம் மனத்தை இறைவன்பால் லயிக்க வைக்கும் இடம். மனத்தை இறைவன்பால் லயிக்க வைப்பதற்கு இடைஞ்சலாக எந்த ஒரு நிகழ்ச்சியும் நடைபெறுதல் ஆலயத்தில் தவிர்க்கப்படல்வேண்டும். நடனம், இசை நிகழ்ச்சிகள், பொப் இசைகள், வில்லுப்பாடல் – அப்பாடலில் தரமற்ற நகைச்சுவைகள் மனிதனுடைய கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன. இதனால் ஆலயத்துக்குச் செல்கின்ற நோக்கம் மாறி வேறொன்றாக மாறிவிடுகின்றது. குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்ட முறையாக முடிகின்றது.

சைவர்களாகிய நாம் சைவ நீதியின்படி நடந்து, நாம் இப்பிறவி எடுத்த நோக்கம் மேலேயும் பிறந்து பிறந்து இவ் உலகில் துன்பப்படாது இறைவனையடைதலே என்ற உண்மையைஉணர்ந்து இறைவன் பாதங்களையடைய முயற்சிப்போமாக!

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஈழத்தில் இந்து சமயம், தமிழ் வடமொழிகள் வளர்த்த அந்தணப் (பிராமணப்) பெரியார்கள்

— ப கணேசலிங்கம்
*விரிவுரையாளர்,*
*இந்து நாகரிகத்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

ஈழத்தில் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கு பல்வேறு சமூகத்தினர் பங்களிப்புக்களைச் செய்துள்ளார்கள். இச்சமூகத்தினருள் பிராமண குலத்தவர் (அந்தணப்பெரியார்கள்) முக்கியமானவர்கள். ஈழத்தின் இந்துப் பண்பாட்டு மரபிலே குருமாராகப் போற்றப்படுகின்றவர்களுள் வீரசைவக் குருமார்கள் (சைவக்குருமார்கள்) அந்தணக்குருமார்கள் (சிவாச்சாரியர்கள், பிராமணர்கள்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஈழத்திலே பன்னெடுங் காலமாக வேதாரணியத்தைச் சேர்ந்த சைவக்குருமார் குருத்துவம் வகித்து வந்தார்கள். இந்து சமூக அமைப்பில் நால் வகை வருணப்பகுப்பாட்டில் பிராமணர்கள் முதலாம் இடத்தினை வகிக்கின்றார்கள். ஈழத்திலே கிறிஸ்து தசாப்தத்திற்கு முன்னர் வாழ்ந்த பிராமணக் குலங்கள் பற்றிய செய்திகள் பிராமிக்கல் வெட்டுச் சான்றுகளிலே காணப்படுகின்றன. மேலும் கிறிஸ்து தசாப்தத்திற்கு முன் ஈழத்தில் வாழ்ந்த பிராமண குலங்கள் பற்றிய இலக்கியச் சான்றுகள் கிடைத்துள்ளன.

ஈழத்தில் பிராமண குலங்கள் அந்தணப் பெரியார்கள் புரோகிதர்கள்) கிறிஸ்து தசாப்தத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இப் பிராமண குலங்கள் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களாகவும் ஈழநாட்டைச் சேர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். இப் பிராமண குலங்களுள் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கும் தமிழ் – வட மொழிகளின் வளர்ச்சிக்கும், பங்காற்றியவர்களுள் பெயர் குறிப்பிடத்தக்கவர்கள் பற்றிய விபரங்கள் விரிவாக ஒல்லாந்தர் ஆட்சிக் காலப் பகுதியிலிருந்தே கிடைத்துள்ளன. இக்காலத்திலே யாழ்ப்பாணத்தில் கொச்சிக் கணேசையர் பரம்பரை ஒன்று நிலவியதை அறியமுடிகின்றது. இவர்களது ஆட்சியினைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சி ஈழத்தில் நிலவியது. இக்காலப் பகுதியிலே பல நூற்றுக்கணக்கான அந்தணப் பெரியார்கள் பங்களிப்புகளைச் செய்துள்ளதை இலக்கியச் சான்றாதாரங்களிலிருந்து அறிந்து கொள்ளமுடிகின்றது.

ஈழத்தில் தென்னிந்திய திராவிட சமூக அமைப்பு போன்று விவசாயிகள், விவசாயிகள் இல்லாத பிறதொழில்செய்வோர் என்ற இருகூறான சமூகஅமைப்பே ஆதிகாலத்தில் நிலவியது. இத்தகைய சமூக அமைப்புக்கும் வட இந்திய வேத நெறிச் சமூக அமைப்பான பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற அமைப்பிற்கும் பெருவித்தியாசம் இருந்தது. வேதநெறி அமைப்பில் பிராமணர் பெற்ற முக்கியத்துவத்தை தென்னக ஈழ சமூக அமைப்பில் விவசாயிகள் பெற்றனர். இருந்தும் வடக்கிலிருந்து வந்த வேத நெறிக் கலாச்சாரப் பரம்பலால் தமிழகம் – இலங்கை ஆகிய பகுதிகளில் பிரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணர் முக்கியபங்கினை வகிக்கத் தொடங்கினர். இவ்வாறு இவர்கள் சமய நெறி முறைகளிலும் பிறவற்றிலும் தமது கல்வி வேள்விகளால் பெற்ற முக்கியத்துவம் அக்காலத்தில் இவர்களுக்கு ஒரு செல்வாக்கான இடத்தை அளித்தது இவர்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தினைத் தமிழகத்திலுள்ள சங்க இலக்கியங்கள் போன்று இலங்கைப் பாளி நூல்களும் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றின் கூற்றினை உறுதிப்படுத்துவனவாக ஈழத்தின் ஆதிக் கல்வெட்டுக்களான பிராமிக் கல்வெட்டுக்கள் அமைகின்றன என. "கிறிஸ்து தசாப்தத்திற்கு முன் ஈழத்தில் வாழ்ந்த பிராமண குலங்கள் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் "என்ற தலைப்பிலான கட்டுரையில் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் (1989) எடுத்துக் கூற்யுள்ளார்.

எல்லாமாக இருபத்திரண்டு கல்வெட்டுக்களில் பிராமணர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சமகாலத்தில் எழுதப்பட்டதாலும் இவை தரும் சான்றுகள் மிகவும் நம்பகரமானவையாகும். ஈழத்தில் அநுராதபுர மாவட்டத்தில் ஏழு கல்வெட்டுகள் காணபபடுகின்றன. ஈழத்தின் தென்கிழக்குப் பகுதிகள் குருநாகல், புத்தளம், கண்டி, மாத்தளை, பொலநறுவை, அம்பாறை, ஆகிய இடங்களில் பிராமண குலங்கள் வாழ்ந்ததற்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளதாக வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக் கூறியுளளாாகள். மேற்கூறிய மாவட்டங்களை உற்றுநோக்கும் போது பெரும்பாலானவை வரண்டவலயப் பிரதேசத்திலேதான் காணப்படுகின்றன. இவ்வலயம் தான் கிறிஸ்தாப்தத்திற்கு முனனர் குடியேற்றம் நடைபெற்ற இடமாக விளங்கியதோடு அரச இருக்கைகளும் காணப்பட்ட இடமாகும். இக்கல்வெட்டுக்களில் பிராமண குலங்கள் (பமண) என அழைக்கப்பட்டாலும் இவர்கள் பல்வகைக் கோத்திரங்களைச் சார்ந்தவர்களாகவும் விளங்கியமை இவர்கள் பெயரால் புலப்படுகின்றது. இத்தகைய கோத்திரங்கள் பல தமிழகத்திலும் சமகாலத்திற் காணப்பட்டதை சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. என தா. வி. கும்பு-சுவாமி கூறியுள்ளாா. மேலும் கோத்திரங்கள் பற்றிவரும் குறிப்புகளைத் தவிர பிராமணர் என்ற அடைமொழி இன்றியும் பிராமிக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் பிராமண கோத்திரங்கள் காணப்படுகின்றன என பரணவித்தானா கூறுகின்றார்.

பிராமண குலத்தவர் அதுவும் வடமொழி வேத நெறி வந்தோர் பலர் கடைப்பிடித்த சமய நெறியினை எடுத்துக் காட்டும் விதமாக பிராமிக் கல்வெட்டுககளில் காணப்படும் வேதநெறிக் கடவுளரின் பெயரைச் சூடியிருந்த மக்கள் பெயர்கள் ஆகியனவும் எடுத்துக் காட்டுகின்றன. ஈழத்தின் பௌத்தம் கால் கொள்ள முன்னர் மக்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கைகள் இந்துமத நம்பிக்கைகளே என்பதும் இவற்றுள் வேத நெறி வழி வந்த நம்பிக்கைகளும் கணிசமாக இருந்ததும் புலனாகின்றது. இந் நம்பிக்கைகளின் கிரியை நெறியாளர்களாகப் பிராமண குலத்தவர் அன்று விளங்கினர். குகைச் சாசனங்களில் வேதநெறிக் கிரியைகளில் மட்டுமன்றி பல்வகைத் தொழில்களில் ஈடுபட்டவர்களாகவும், பிராமணர் குறிக்கப்படுகின்றனர். நாட்டின் நிருவாகத்திற் கூட இவர்கள் கணிசமான பங்கினை வகித்ததைப் பிராமிக் குகைச் சாசனங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஈழத்திலே திருக்கோயில் வழிபாட்டு மரபுகளை நன்கு பேணி வளர்த்தவர்களுள் அந்தணப் பெரியார்கள் (சிவாச்-சாரியர்கள்) பிரதான இடத்தினைப் பெற்று விளங்குகின்றார்கள். ஈழநாட்டுத் திருக்கோயில் சார்ந்த மரபுகளைப் பேணி வளர்த்தவர்களும் தற்பொழுதும் வளர்த்து வருபவர்களுள் சிவாச்சாரியார்கள், வீரசைவகு குருமார்கள் (பண்டா-ரங்கள்), பல்துறைசார்ந்த கலைச்சமூகத்தினர் ஆகியோர்களைக் குறிப்பிடலாம். ஈழநாட்டிலே அமைந்து விளங்குகின்ற புராதன ஆலயங்களினதும் பிரசித்தி பெற்ற ஆலயங்களினதும் அறங்காவலர்களாகவும் பரம்பரைப் பூசகர்களாகவும் புரோகிதர்களாகவும் ஈழத்து அந்தணப் பெரியார்கள் (பிராமணர்கள்) விளங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார்கள். மேலும் இவர்கள் இந்து மக்களது பரார்த்த பூசைமுறை ஒழுங்குகள், இல்லறத்திலே பிறப்புக்குப் முன்னும் பின்னும் செய்யப்படுகின்ற கிரியை மரபுகளை நன்கு திட்டமிட்டு நடாத்தி வருவது கண்கூடாகும்.

ஈழத்திலே ஆரம்பகாலம் முதல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலப் பகுதிகள் வரை வாழ்ந்த அந்தணப் பெரியார்கள் தமிழ் மொழி, வடமொழி, இந்துப் பண்பாடு, இந்துசமயம், இந்துக்கிரியை மரபு, இந்து தத்துவம், இந்துக் கலை, திருக்கோயில் வழிபாட்டு மரபைப் பேணுதல், சோதிடம் ஆகியனவற்றின் வளர்ச்சிக்குத் தம் மாலான பங்களிப்புக்களை அவ்வக்காலங்களிலே ஆற்றிவந்துள்ளார்கள். இவர்களது ஆக்கங்கள் சோதிடம், தருக்கம், ஒழுக்கவியல், இந்து சமயம் தொடர்பான விடயங்கள், கண்டனங்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், அறிக்கைகள், தொகுப்புக்கள், வரலாறு, வழிபாடு, தல புராணங்கள், விரதங்களும் கிரியைகளும், இந்து சமய துதி நூல்கள் ஆகிய அம்சங்களைக் கொண்டுள்ளன. மேலும் இவர்களது ஆக்கங்கள், கல்வி, விவாக வழக்கங்கள், மொழிபெயர்ப்பு, சமஸ்கிருத மொழிச் சேர்க்கை, தமிழ்மொழிக் கட்டுரைகள், இலக்கணங்கள், வரலாறு ஆகிய விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டமைந்தன. மற்றும் இசை, சங்கீதம், சமஸ்கிருத இலக்கியம், தமிழ் இலக்கியம், பிரபந்த வரிசை, சரித்திரம் ஆகிய வடிவ அமைப்பிலும் இலக்கியங்களை ஆக்கியளித்துள்ளார்கள். இவ்விலக்கியங்கள் பல்வேறு விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்டன.

ஈழத்தின் இந்து சமயம், தமிழ், வடமொழி ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய அந்தணப் பெரியார்களை (பிராமணர்களை)

1) இந்தியாவிலிருந்து ஈழம் வந்து குடியேறிய சமய, மொழிப் பணிகள் புரிந்து புகழீட்டியோர்கள்.

2) ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் தோன்றி இந்து சமய, மொழிகளின் வளர்ச்சிக்காகத் தத்தம் புலமைகளை நிலைநாட்டிப் புகழீட்டியோர்கள்.

3) ஈழத்திலிருந்து இந்தியாவுக்குச் சென்று இந்து சமயம், வடமொழி, தமிழ்மொழிப் பணிகள் புரிந்து புகழீட்டியோர்கள் என வகைப்படுத்தி நோக்கலாம்.

ஈழத்தில் வாழ்ந்த அந்தணப் பெரியார்கள் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களைப் பின்வருமாறு வகுத்து நோக்கலாம். அவையாவன:-
இந்து சமய தத்துவ நூல்களை ஆக்கியளித்தமை, இந்து சமயம் சார்ந்த வடமொழியிலுள்ள நூல்களைத் தமிழுக்கு மொழிபெயர்த்தமை, வடமொழி நூல்களை ஆக்கியமை, இந்து சமய தத்துவ நூல்களுக்கு உரைகள் வகுத்தமை, திருக்கோயில்கள், வழிபாட்டு மரபுகள் ஆகியவற்றை முதன்மைப் பொருளாக வைத்துப் பல தல இலக்கியங்களை ஆக்கியமை, இந்து சமயக் கருத்துக்களை இலகு தமிழிலும் வினாவிடைகளிலும் விளக்கியமை, இந்து சமயத்தின் உண்மைகளையும், பெருமைகளையும் துண்டுப் பிரசுரங்கள், சிறிய சிறிய புத்தகங்கள் பிரசங்கங்கள், சொற்பொழிவுகள் மூலம் வெளிப்படுத்தியமை, இந்து சமய வளர்ச்சிக்கு ஆலயங்கள், மடங்கள், சபைகள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியமை, இந்து சமயச் சிந்தனைகளைப் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாயிலாக மக்களுக்கு விளங்கப்படுத்தியமை, கிறிஸ்தவ மத ஆட்சியாளர்களின் பல்வேறு மாற்றங்களிலிருந்தும் தாக்கங்களிலிருந்தும் இந்து சமயத்தினைக் காப்பாற்றுவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டமை, இந்து சமயத் தர்மங்களை இயலுமானவரை நிலை நாட்டுவதற்கு உழைத்தமை, அந்தணப் பெரியார்கள் சிறந்த போதனையாளராகவும், சாதனையாளராகவும் விளங்கியமை, இந்து சமயத்தினைத் தனிப்பட்ட ரீதியிலும் குழு நிலைகளிலும் நிறுவன ரீதியிலும் வளர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெடுப்பதற்குப் பெரிதும் முயன்றமை, இந்து சமயத்தவர்கள் இந்து சமயச் சூழலில் வாழவும், கல்விகற்கவும், பண்பாட்டு விழுமியங்களைப் பேண உதவியமை, இந்து சமயத்தின் பெயரில் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த இந்து சமய மக்களால் பின்பற்றப்பட்ட மூட நம்பிக்கைகள், காலத்துக்கு ஒவ்வாத சமய நடைமுறைகளைக் களைந்தெறிந்து புதுவழியில் இந்து சமயத்தினை வளர்த்தெடுக்க உழைத்தமை, இந்துசமய மகாநாடுகளை நடாத்தியும், தலைமை தாங்கியமையும், திருக்கோயில்களிலும் மடங்களிலும் ஆதீனங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் புராணபடன மரபினைத் தோற்றுவித்துப் பேணி வளர்த்தமை, ஆங்கிலத்தில் சைவ நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஈழத்தில் ஒல்லாந்தர் ஆட்சியானது கி. பி. 1658 ஆம் ஆண்டு தொடக்கம் கி. பி. 1796 ஆம் ஆண்டுகள் வரை நிலவியது. இக்காலப் பகுதியில் ஈழத்திலே வாழ்ந்த அந்தணப் பெரியார்களாக பிராமண முதலியார், கொச்சிக் கணேசையர் (ஆதி நாராயண கணேசையர்), வட்டுக்கோட்டை கணபதி ஐயர் (1709 - 1781) வண்ணார் பண்ணை பாரத்து வாசி, அனந்த சுப்பையர் ஆகியோர்களைக் குறிப்பிடலாம்.

பிராமண முதலியார் கொச்சிக் கணேசையர் என்பவருடைய முழுப்பெயர் ஆதி நாராயண கணேசையர் என்பதாகும். கொங்கணச் சாதியைச் சேர்ந்தவரானகையாற் கொச்சிக் கணேசையர் என்றும் அழைக்கப்பட்டார். யாழ்ப்பாணப் பட்டணத்துக்கருகில் வண்ணார்பண்ணையில் கொச்சிக் கணேசையர் என அறியப்பட்ட ஒருவர் ஒல்லாந்தர் காலப் பிற்கூற்றில் வசித்துவந்தார். இவர் ஒரு பிராமணப் பிரபு. யாழ்ப்பாணத்தில் இருந்தவர்களும் தென்னிந்தியாவிலிருந்து வருவோருமான தமிழ்ப் புலவர்களைப் போஷித்து தமிழை வளர்த்துக்கொண்டு வந்தவர். இவர் யாழ்ப்பாணத்துக் கொம்மாண்டோரின் அரசியல் சங்கத்தின் முதன்மை பூண்டவராய் இருந்தபடியால் இவரைப் பிராமண முதலியாரென அழைப்பார்கள். இவர் பெயரால் பல பிரபந்தங்கள் பாடப்பட்டன. இவரது மகனாக பாரத்துவாசி அனந்த சுப்பையப் புலவர் விளங்குகின்றார். கொச்சிக் கணேசையர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல தமிழ்ப்புலவர்கள் இருந்தார்கள்.

கொச்சிக் கணேசையர் ஒல்லாந்தர் நிறுவிய கொஞ்சலி என்னும் சங்கத்தில் தலைமைத்தானம் வகித்து, சமய சுவாதீனத்தை (போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் பறிக்கப்பட்ட) மறுபடி நாட்டிய தீரன். தமது பரம்பரையினருக்கு அன்று தொட்டின்று வரையும் அரச சன்மானம் கிடைக்கும்படி வழி வகுத்த பிராமண உத்தமன். இராமேசுர ஆலயத்தின் வீதியில் வாழும் சில பிராமண குடும்பங்களுக்கு நிரந்தரமாக உதவி கிடைக்கும்படி நிலங்களை மானியமாக விட்டவர். கவி பாடிவந்த புலவர்களுக்கு வரிசையறிந்து பொருள் கொடுத்தவர். ஒரு முறை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் கணேசையர் வீட்டில் அனேக வித்துவானர் சபை கூடி இராமாயணத்துக்கு அர்த்தம்பண்ணிக்கொண்டிருக்குஞ்சமயம், அவர் சொல்ல முடியாது மலைத்த ஒரு பாட்டிற்கு இளைஞராதலின் ஓர் கோணத்தில் உட்கார்ந்திருந்த சின்னத்தம்பிப்புலவர் அர்த்தஞ் சொன்ன திறமைக்காக மகா கனவானான கொச்சிக் கணேசையர் பண்டாரக் குளமென்னும் வயலை இவர்க்கு வெகுமதி கொடுத்ததாக அறிய முடிகின்றது.

வட்டுக்கோட்டை கணபதி ஐயர் என்பவர் ஓர் புலவர். இவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் வசித்த ஓர் பிராமணர். இவர் தந்தையார் காஞ்சிபுரத்திலிருந்து வட்டுக்கோட்டைக்கு வந்து இல்லறம்பூண்டு, நல்லறஞ்செய்த பாலகிருஷ்ண ஐயர். இவர் தம் சுற்ற மித்திரரைப் பிரிந்து, வட தேசத்துள்ள திருவையாற்று வைரவ சந்நிதியிலே ஓரிராத்திரி இளைத்துக் களைத்துத் தூக்கமற்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராய் இருந்தபோது சுயம்பாடும் சக்தி உண்டாக, உடனே அவ்வைரவர்பேரிலே பதிகம் ஒன்றைப் பாடினர் என்பர். இவர் வடதேச யாத்திரை செய்து ஊர்க்குத் திரும்பிய பின்பு தமது சுற்றத்தவருள் ஒருவராகிய சண்முக ஐயர் என்பவர் சில தருக்கள் கீர்த்தனைகளோடே தொடங்கியும் நிறைவேற்றச் சக்தியற்று விட்டிருந்த சுந்தரி நாடகத்தை வாளபிமன் நாடகம் என்று மாற்றி, எவரும் வியக்கப் பாடி முடித்தனர். இந்நாடகம் நாட்டு மாதிரியாயினும் மிகு பளபளப்பும் மளமளப்புங்கொண்டது. இவர் வயித்திலிங்கக் குறவஞ்சி, மலையகந்தினி நாடகம், அலங்காரரூப நாடகம், அதிரூபவதி நாடகம் என்பவைகளோடு வட்டுநகர்ப் பிட்டி வயற் பத்திரகாளி பேரிற் பதிகமும், ஊஞ்சற் பிரபந்தமும், பருத்தித் துறைக் கணேசர் பேரில் வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, மருள்என்னும் பாவிகற்பம் பெற்ற நூறு கவிதைகளும் பாடினர்.

கணபதி ஐயர் அவர்கள் பிரமசாரி விரதம்பூண்டவர். இவர் இயற்றிய அபிம நாடகம் பாரத சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டது. குறவஞ்சி வண்ணார் பண்ணை வயித்தீஸ்வரர் மேல் பாடப்பட்டது. மலையகந்தினி நாடகம் காசி காண்டக் கதையிலிருந்தெடுத்துப் பாடியது. அதிரூபவதி நாடகம் விக்கிரமாதித்த ராசன் வனவாசத்தைக் கூறுவது. அலங்கார ரூப நாடகம், நவாலியிலிருந்த ஒரு வரால் ஆரம்பிக்கப்பட்டும், இப் புலவராற் சிங்காரிக்கப்பட்டு முற்றுப்பெற்றது. இவைகளையன்றிவேறுசில தனிப்பாடல்களும் பாடினார்.

பாரத்து வாசி அனந்த சுப்பையர் (அனந்த சுப்பையன்) யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் வசித்த ஓர் வேதியர். இவர் கொச்சிக் கணேசையரின் புதல்வர் எனக் கூறப்படுகின்றது. அனந்த சுப்பையர் இயற்றிய பிரபந்தங்கள் பல வண்ணைச் சிவன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகள் மீது பாடப்பட்டிருக்கின்றன. இப்புலவரின் பேரனும் இவரின்நூல்கள் சிலவற்றை வெளியிட்டவருமான ஸ்ரீ சண்முகரத்தின ஐயர் புலவர் ஆக்கிய நூல்களைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார். "அளவிறந்த கீர்த்தனங்களையும், பதிகங்களையும், திருவூஞ்சல், சுக்கிர வாரந்தோறும் தேவியார் எழுந்தருளித் திருவுலாப்போகும் காலங்களில் ஓதப் படுமாறு மகைசுவரிய மகௌதாரிய மகா பிரபுவாகிய ஸ்ரீ வைத்தியலிங்கச் செட்டியாரவர்கள் கட்டுவித்து பிரதிஷ்டைசெய்வித்த வரலாறுகளை விளங்க வைத்து ஒரு கலிவெண்பா, ஸ்ரீ முத்துக்குமார சுவாமி திருவூஞ்சல், சூர்ணிகை என்று இத் தொடக்கத்தனவாகிய பிரபந்தங்களையும் இச் சிவாலயத்தின் பொருட்டு இயற்றித் தந்துதவிய பாரத்து வாசி அனந்த சுப்பையர், பிராமண முதலியார் என்றழைக்கப்பட்ட கொச்சிக் கணேசையர் புதல்வர் என்பவரே இத்திருவூடலையும் தம் கையால் எழுதிவைத்திருந்தார்.

அனந்த சுப்பையர் அளவிறந்த கீர்த்தனங்களை இயற்றினார் என்பது சண்முகரத்தின ஐயர் கூறியதிலிருந்து அறியக் கிடக்கின்றது. அதுவுமல்லாமல் 1911 ஆம் ஆண்டளவில் இவற்றைச் சண்முகரத்தின ஐயர் வெளியிட்டாரென்றும் தெரிகிறது. ஆனால் இப்பொழுது அவை ஒன்றுங் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோயில் சந்நிதானத்தில் மார்கழி மாதத் திருவாதிரையிலேயே ஓதப்படும் திருவூடல், யாழ்ப்பாணம் வண்ணை நகர் பாரத்துவாசி க. அனந்த சுப்பையர் அவர்கள் கோவை செய்ததாகும். இந்தியாவில் வேதாரணியம், வைத்தீஸ்வரன் கோயில் முதலிய திருத்தலங்களிலும் திருவூடல உற்சவம் நடைபெறுவதாகவும் அங்கு திருவூடல் படிக்கப்பட்டுவருவதாகவும் தெரிகிறது. அந்தத் தலங்களில் படிக்கப்படும் திருவூடலை ஒற்றியே அனந்த சுப்பையர் தமது நூலைத் தொகுத்ததாக அறியக் கிடக்கின்றது. ஈழத்துச் சிதம்பரம் என்னும் காரைநகர் சிவன் கோயிலில் படிக்கப்படும் திருவூடலும் பெரும்பாலும் அனந்த சுப்பையர் தொகுத்த திருவூடலை ஒத்திருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலே ஆங்கிலேயர் ஆட்சியானது கி. பி. 1796 ஆம் ஆண்டு முதல் கி. பி. 1948 ஆம் ஆண்டுகள் வரை நிலவியது. இக்காலத்தில் ஈழத்தில் வாழ்ந்து இந்துப் பண்பாடு, வடமொழி, தமிழ்மொழி ஆகியனவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்த அந்தணப் பெரியார்கள் பலராவர். அவ்வந்தணப் பெரியார்களாக மண்டைதீவு சி.அகிலேஸ்வர சர்மா வயாவிளான் கா. அப்பாசாமி ஐயர், யாழ்ப்பாணம் அ. அருணாசல சாஸ்திரி, வை. ஆத்மநாத சர்மா, கொக்குவில் இ. சி. இரகுநாதையர், சி. இ இரகுநாதையர், வண்ணை நகர் சு. இரத்தின சபாபதிசாஸ்திரி, சு. இரத்தினசாமிஐயர், உடுவில் வ. மு. இரத்தினேசுவரையர், தொல்புரம் ச. இராமச்சந்திர ஐயர், மாதகல் சுப்பிரமணியஐயர், ஏரம்பையர், தும்பளை எஸ். பி. ஐயர், மட்டக்களப்பு ஜி. வி. ஐயர், புன்னாலைக்கட்டுவன் வித்துவான் வித்துவ சிரோமணி சி. கணேசையர், நல்லூர் பண்டிதர் ந. வே. கனக சபாபதி ஐயர், சண்முக ஐயர், காசி. விசுவநாதையர், சு. கார்த்திகேய ஐயர், காரைநகர் முருகேசையர் (கார்த்திகேயப் புலவர்), ந. வே. கார்த்திகேயக் குருக்கள், அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள், மாவிட்டபுரம் கா. குமாரஸ்வாமிக் குருக்கள், வட்டுக்கோட்டை க. குருமூர்த்தி ஐயர், யாழ்ப்பாணம் ஆ. சண்முகநாத ஐயர், கொழும்புத்துறை சி. சண்முக நாதசர்மா, வண்ணைஆ. சண்முகரத்தின ஐயர், காசிவிசுவநாதஐயர், சண்முகையர், தும்பைநகர்சிவ. சதாசிவஐயர், சுன்னாகம் முகாந்திரம் தி. சதாசிவ ஐயர், கொக்குவில் த. சந்திரக்குடிக்குருக்கள், வண்ணார் பண்ணை வி. சபாபதி ஐயர், காரைநகர் மு. சபாரத்தின ஐயர், துன்னாலை ஆ. சபாரத்தினக் குருக்கள், எஸ். சாம்பசிவ சர்மா, எஸ். வி. சாஸ்திரிகள், சங்கானை ஏ. சாஸ்திரிகள், சுன்னாகம் வே. சிதம்பர சாஸ்திரி, ப. சிவசர்மா, பருத்தித்துறை எஸ். சிவசாமி ஐயர், காரைநகர் கா. சிவசிதம்பர ஐயர், கந்தரோடை செ. சிவசுப்பிரமணிய ஐயர், வட்டுக்கோட்டை நாகேச ஐயர், சிவ சுப்பிரமணிய ஐயர், வல்வை சிவஞானக் குருக்கள், சி. இ. சிவராமலிங்க ஐயர், தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தையர், கொழும்புத்துறை ஏ. சுப்பிரமணிய ஐயர், தும்பளை சபாபதி ஐயர், சுப்பிரமணிய சாஸ்திரி, பண்டிதர் சுவாமிநாதையர் (சுவாமிநாத பண்டிதர்), காசிவாசி செந்திநாதையர், (செந்திநாத யோகிகள்) மாதகல் த. கு. செல்லப்பாக் குருக்கள், பருத்தித்துறை எஸ். சோமசுந்தர ஐயர். இ. சோமசுந்தரா குருக்கள், முன்னேஸ்வரம் என். சோமசுந்தரக் குருக்கள், கா. தியாகராசக் குருக்கள், எஸ். நடராசக் குருக்கள், இணுவில் நடராஜ ஐயர் பருத்தித்துறை கா. நடராஜ ஐயர், பருத்தித்துறை எஸ். நடேச ஐயர், நாகமுத்துக் குருக்கள், காரைநகர் சண்முக ஐயர், பஞ்சாட்சர ஐயர், புலோலி சிவ பஞ்சாட்சரக் குருக்கள், முன்னேஸ்வரம் சி. பத்மநாப ஐயர், வடகோவை நா. பரமசாமி ஐயர், கு. பாலசுந்தரக் குருக்கள், சி. பாலசுப்பிரமணிய சர்மா, கம்பளை எஸ். பொன்னுஸ்வாமி ஐயர், புலோலி மகாதேவ ஐயர், முத்துக்குமார சுவாமி சிவாசாரியார் (முத்துக்குமார சுவாமிக் குருக்கள்), கோணை நகர் ப. க. யோகீஸ்பரக் குருக்கள், கே. யோகீஸ்வர ஐயர், இ.ச ராசநாதஐயர், சோ. ராமஸ்வாமி சர்மா, அராலி நாராயண சாஸ்திரிகள், விசுவநாத சாஸ்திரிகள், பருத்தித்துறை சோ. விஸ்வநாத ஐயர், தும்பை நகர் சோ. வைத்தியநாத ஐயர், தெல்லிப்பழை செ. வைத்தியநாத சாமி ஐயர், க. ச. வைத்தியநாத சாஸ்திரிகள், க. வைத்தீசுவரக் குருக்கள், வையாபுரிஐயர், நல்லூர் அப்புக்குட்டி ஐயர், வட்டுக்கோட்டை இராமசாமி ஐயர், நல்லூர் இராமலிங்க ஐயர், நல்லூர் கசர்த்திகேய ஐயர் ஆகியோர் விளங்குகின்றார்கள்.

ஈழத்தின் இந்துப் பண்பாடு மற்றும் தமிழ், வடமொழிகளின் வளர்ச்சிக்கு அந்தணப் பெரியார்கள் பெரும் பங்காற்றியுள்ளார்கள். இவ்வந்தணப் பெரியார்கள் ஈழ, இந்திய நாடுகளைச் சேர்ந்தவர்களாக விளங்குகின்றார்கள். ஈழத்துத் திருக்கோயில் வழிபாட்டு மரபுகள் தோன்றி வளர்ந்து எழுச்சிபெறுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பிரதான காரணகர்த்தாக்க ளாக விளங்கினார்கள். ஈழத்தில்வாழ்ந்து பங்களிப்புக்கள் பல புரிந்த அந்தணப் பெரியார்கள்பற்றிய விபரங்கள் ஒல்லாந் தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலப் பகுதிக லிருந்தே ஓரளவு விரிவாகக் கிடைத்துள் ளன.

★

## உசாத்துணை நூல்கள்


(1) பாக்கியநாதன் இ. வே. தமிழ் ஆய்வுக்கு ஈழத்தமிழரின் பங்களிப்பு ஒரு நூற் தொகை ஆய்வு — (கி. பி. 1800 — 1948) (கலாநிதிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பெற்ற ஆய்வேடு- 1986)

(2) அம்பிகைபாகன் ச. யாழ்ப்பாணத்தில் கொச்சிக் கணேசையர் பரம்பரை மல்லாகம், 1979

(3) சதாசிவம்பிள்ளை அ. (ஆசிரியர்) பூலோகசிங்கம் பொ. (பதிப்பாசிரியர்) பாவலர் சரித்திர தீபகம் பகுதி I கொழும்பு தமிழ்ச் சங்கம், கொழும்பு, 1975

(4) சதாசிவம்பிள்ளை அ. (ஆசிரியர்) பூலோகசிங்கம் பொ. (பதிப்பாசிரியர்) பாவலர் சரித்திர தீபகம் பகுதி - 2 கொழும்பு தமிழ்ச் சங்கம், கொழும்பு, 1979

(5) சிற்றம்பலம் சி. க. "கிறிஸ்த சகாப்த காலத்திற்கு முன்னர் ஈழத்தில் வாழ்ந்த பிராமண குலங்கள்பற்றிய பிராமிக் கல்வெட்டுக்கள் தரும் /சான்றுகள்" புங்குடுதீவு மேற்கு, அரியநாயகன் புலம், ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கும்பாபிஷேக மலர் 1990

(6) சிற்றம்பலம் சி. க. "கிறிஸ்து தசாப்தத்திற்கு முன் ஈழத்தில் வாழ்ந்த பிரா மண குலங்கள் பற்றிய இலக்கியச் சான்றுகள் வேலணை - மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய மகா கும்பாபிஷேக மலர் 1990

(7) சதாசிவம் ஆ. (தொகுப்பாசிரியர்) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் சாகித்திய மண்டலம் வெளியீடு கொழும்பு 1966




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்ல வண்ணம் வாழலாம்

— திரு செ. செல்வநாயகம்
அதிபர்
நவக்கிரி எ. எம். ரி. எம். பாடசாலை, புத்தூர்.

ஆறறிவு படைத்த மனித சிந்தை யுடைய மனிதன் இப்பிறவியில் மட்டுமல்ல, அவனுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு பிறவிகள் தோறும் நல்லவண்ணம் வாழ தெய்வ அனுக்கிரகம் வேண்டும். அந்த அனுக்கிரகம் கிடைக்க தெய்வத்தில் நம்பிக்கை வைத்து நாளும் வழிபட வேண்டும். அவ்வாறு வழிபட்டானாகில் அவன் நல்லவண்ணம் வாழலாம்.

நல்வாழ்வுக்காகவே உயிர்கள் முயற்சி செய்கின்றன. அந்த முயற்சியைத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் நன்கு உணர்ந்து, அதனை உலகுக்கும் உணர்த்த முற்பட்டார். சம்பந்தர் எல்லோரையும் அழைத்துக்கொண்டு சீர்காழித் தலத்திற்கு வருகிறார். அங்கு அம்மை அப்பராய் வீற்றிருக்கும் பெருமானைச் சுட்டுகிறார். பெண்ணில் நல்லவள் அப்பெருமாட்டி. ஆண்களில் பெரியோன் அப்பெரியோன் எனக் குறிப்புப்படப் பாடுகின்றார். கண்ணினால் இத்தோற்றத்தைக் கண்டு வழிபட்டால் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்கிறார். சென்று காணுதற்கு வசதியில்லாவிட்டால், இருந்த இடத்திலிருந்தே இத்திருவருட் காட்சியை எண்ணினாலே போதும். நல்ல கதி கிடைக்கும். யாதும் குறைவு இருக்காது' என்கிறார். கவுணியர் பெருந்தகை உரைக்கும் இச்சிறந்த வழியைப் பாடலாக எமக்குத் தருகிறார்.

"மண்ணில் நல்லவண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு
யாதும் ஓர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும்
பெருந்தகை இருந்ததே'

நல்வாழ்வுக்கு வழி இதுதான். இந்த நெறி தலைப்பட்டு வழிபாடியற்றி உய்தலே மனிதப்பிறவி எடுத்ததன் கடன். இதனை மறந்தால் நமக்கு உய்வில்லை. அரன் பொன்னடியை மலர்கொண்டு போற்றிசைக்க வேண்டும். அதன் நாமத்தை நாக்கைக்கொண்டு நவில வேண்டும். இவை இரண்டுமின்றி வயிறு வளர்ப்பதில் நோக்கமாய் இருக்கக் கூடாது. அப்படி வயிறுவளர்ப்பதில் காலத்தை விரயமாக்கினால் காக்கைக்கு இரையாகி கழிய நேரிடும் என அப்பர் சுவாமிகள் உபதேசிக்கிறார். வாழ்க்கையின் குறிக்கோளை வயிறு வளர்ப்பதிலும் செல்வம் தேடுவதிலும் ஈடுபடுத்துவோமானால் வாழ்வு வறண்டுவிடும். அநித்தியத்தை நித்தியமாக நினைத்து நினைத்து நித்தியமான மெய்ப்பொருளை மறந்துவிடக்கூடாது. நமது ஆதி பரமாசாரிய சுவாமிகள் இதனைமிக்க சுருக்கமாகவும் தெளிவாகவும் தம்முடைய சிவபோக சாரத்திலே சொல்லியருள்கின்றார்கள்.

"அநித்தியத்தை நித்தியமென்
றாதரிக்கும் பொல்லா
மனித்தருடன் கூடி மருவார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றுணவையே நினைத்து நினைத்துச் சிவானந்தப் பேரமுதாகிய ஆரா உணவை மறந்துவிடக்கூடாது. அப்படி மறந்து விடுவார் ஆக்கைக்கே இரைதேடி அலமந்து காக்கைக்கே இரையாக வேண்டுவதுதான் என்பது அப்பரடிகள் கருத்து. வழிபாட்டு முறையைக் கையாளாதவர்கள் இறுதியில் என்ன ஆகிறார்கள் என்று இதனோடு விட்டு வைக்கவில்லை சுவாமிகள்.

"பெருநோய்கள் மிகநலியப்
பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி
இருக்கின்றாரே."

பிறந்து பிறந்து இறக்க வேண்டியவர்கள் அவர்கள். அவர்களுக்குப் பிறவாநெறி இல்லை என்று பேசிவிட்டார்கள். இப்படிக் கழியாமல் வாழ்வு பயன்படவேண்டுமானால் ஒரேஒரு வழிதான் உண்டு. அதுவே வழிபாடு. அஞ்செழுத்துத் தியானம். 'நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்." என்று எதிர்மறை முகத்தால் கூறிய சுவாமிகள் அதனையே விதி முகத்தாலும் விளங்க வைத்துள்ளார். 'நாவுக்கு அணிகாணும் ஒன்றுண்டு. அது தான் மூலமந்திரமாகிய பஞ்சாட்சரம்'' என்ற பொருளில்,

"நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.''
எனப் பாடியுள்ளார்கள். இதற்கு சிறந்த உவமைகளாக மூன்றினைக் காட்டித் தெளிய வைத்துள்ளார்கள். பூவினுக்கு அணிகலம் போன்று பொலிவது தாமரை ஆவினுக்கு அருங்கலம் பஞ்ச கவ்வியம். ஒரு அரசனுக்கு அணிகலன் செங்கோல் முறைமை என்று கூறிப்பின்னர் நாவினுக் கருங்கலமாவது நமச்சிவாயவே என்று கூறி முடித்துள்ளார்,

நமக்குக் கிடைத்த தனு, கரண, புவன, போகங்கள் அனைத்தும் அவன் திருவடி பரவுதற்கே. சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாசாரியார் பின் வருமாறு தெரிவிக்கிறார்.

'மனமது நினைய வாக்கு
வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங்கு
இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றி வாழும்
செயலற மானால் யார்க்கும்
முனமொரு தெய்வமெங்கும்
செயற்கு முன்னிலையா மன்றே.

தனு, கரண முதலியன அவன் திருவடி பரவுதற்கே கொடுக்கப்பட்டுள்ளன என்பதை உணர்ந்தால் அவற்றின் மேல் வைத்த பற்றுத் தொலையும். அப்பற்றுத் தொலைந்தால்தான் நற்பற்றுத் தொடரும்

'பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்றார் நாயனார். அக்குறளின் மெய்ம்மை உணர்ந்து ஒழுகுதல் வேண்டும். அடியவர் சேர்க்கை வேண்டும். அதன் வாயிலாக மனமும் வாழ்வும் பண்படவேண்டும். அதனை அளிப்பவர் குருவேயாவார். தெளிவுக்குக் குரு தரிசனம், குரு உபதேசம், குரு சிந்தனை தாம் வழிகள் என்பது தமிழாகமம் ஆகிய திருமந்திரம் காட்டும் நன்னெறி. மடங்கள் ஆலயங்கள், தோத்திரங்கள், சாத்திரங்கள், அனைத்தும் இவ்வழிபாட்டுக்கு உறுதுணை புரிவனவே. சரியை, கிரியை, யோகம், ஞானங்களாகிய நான்கு நெறிகளை வழிபாட்டுநெறியில் நம் சமயாசாரியார்கள் மேற்கொண்டொழுகினார்கள்.

அகமுருகி இறைவனை வழிபட வேண்டும். அவன் திருமுன் பண்ணியாத்து ஆடியும் பாடியும் வழிபடவேண்டும். 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என வாழ்த்திக் கூத்திட வேண்டும். இத்தகைய வழிபாடு ஒன்றினால்தான் நல்ல வண்ணம் வாழலாம்.

'வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அறமே வாழ்வு

— திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

மக்கள் மண்ணுலகில் நல்ல வண்ணம் வாழ ஆன்றோர் பல உயர்ந்த கருத்துரைகளை இலக்கியங்கள் மூலம் வற்புறுத்தியுள்ளனர். அறமே வாழ்வின் அடிப்படையாக அமைய வேண்டும் என்பதை எல்லா அறிஞர்களும் ஏகமனதாக ஒப்புக் கொண்டுள்ளனர். அறம் செய விரும்பு, தருமம் தலைகாக்கும் என்று நாம் பரம்பரையாகக் கூறி வருகிறோம். மேலும், பாடசாலைகளில் மாணவர்களுக்கும் இக் கருத்து புகட்டப்படுகிறது. இவை மக்கள் உள்ளத்தில் தாக்கம் பெற்று அவர்களுடைய வாழ்க்கையை மாற்றி சீரிய நெறியில் அமைய வழிவகுக்க வேண்டும். வாழ்க்கையின் சகல துறைகளிலும் அறம் மக்களால் கடைப் பிடிக்கப்பட்டு வருங் காலச் சந்ததியினருக்கு கையளிக்கப்பட வேண்டும். அறத்தின்பாற்பட்ட கருமங்களை செய்வதற்கு நேரம், காலம், இடம் என்பன தடையாக அமையக் கூடாது. இறைவன் அறவாழி அந்தணன் என வள்ளுவரால் குறிப்பிடப்பட்டுள்ளார். மேலும் மனத்திலே மாசில்லாதவராக இருப்பது உயர்ந்த அறம் என்பதும் திருக்குறளிலே கூறப்பட்டுள்ளது.

தொன்மையும் பண்பும் கொண்ட தமிழ் மக்கள் அறத்தின் அடிப்படையில் இல்லறம் துறவறம் என வாழ்க்கை வகுத்து அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளனர் அறத்தை மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் உடன்பாட்டு முறையாலும், எதிர்மறையாகவும் மேற்கொள்ளலாம். பிறருக்கு நன்மை பயக்கும் செயல்கள் யாவும் அறத்தின்பாற்பட்டன. மனத்திலே அன்பு, ஜீவகாருண்யம், உண்மை, நேர்மை, நடுவுநிலமை இரக்கம், பிறர்நலம் கருதுதல் ஆகியன உருவாகி மக்கள் பேச்சையும் செயலையும் அறவழியில் அமைக்க உதவுகின்றன, இதற்கு மாறாக அவா, பொறாமை, கோபம், தீயசிந்தனை என்பன தவிர்க்கப்பட வேண்டியவையாகும். வாக்கினிலே, வாய்மை, இனிமை அமைவது இன்றியமையாதது. அத்தோடு பொய் பேசாமை, புறங் கூறாமை, பிறர் மனம் நோகாது பேசுதல், இல்லாததைக் கூறுதல், ஒருவருடைய நற்பெயர் கெடும்படியாகக் கூறுதல் என்பன அறத்திற்கு மாறான செயல்களாகும். ஒருவரைப் பற்றிப் பாராட்டி சில வார்த்தைகள் கூறுவது மேலான செயலாக அமைகிறது. காயத்தாலே பல அறச் செயல்களை ஒருவர் மேற்கொள்ளலாம். மக்கள் பசி தீர்ப்பது தேவைக்கேற்ப, பொருள்களை வழங்குவது, தனிப்பட்ட முறையிலும். சமூகரீதியாகவும் அறச் செயல்களை செய்வது நன்மை பயக்கும், பாரதியார் அறச் செயல்களை

இன்ன றுங்கனிச் சோலைக்ள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்

என்று பாடி விளக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் முதல் சாதாரண மக்கள் வரை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய அறச் செயல்கள் யாவை என்பதை அறிஞர்கள் தெளிவாக விளக்கியுள்ளனர் நீதிவழுவாத நெறிமுறையில் ஆட்சி செய்வது மன்னர்களுக்கு அழகு. பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் மநு நீதி சோழன் ஆட்சி புரிந்த சிறப்பை

"அறம்பொரு ளின்பமான
அறநெறி வாழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற
வையகம் காக்கும் நாளில்"

எனப் பாடியுள்ளார்.

மானிலங்கா வலனாவான்
மன்னுயிர்காக் குக்காலைத்
தானதனுக் கிடையூறு
தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்
கள்வரால் உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்துந் தீர்த்
தறங்காப்பான் அல்லனோ

என அரசனுடைய உயர்கடமைகள் எவ்வாறு அமைய வேண்டும் என கூறியுள்ளார். பலவிதமான அநீதிகள் நிலவுகின்ற இன்றைய காலகட்டத்தில் மநுநீதிச் சோழனின் தலையாய தியாகம் போற்றப்பட வேண்டியது மட்டுமல்ல எல்லோராலும் கடைப் பிடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அரசியல் பற்றிக் கூறும் பொழுது அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாக அமையும் என்ற ஒரு மிக உயர்ந்த கருத்தை இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் மூலம் தெரிவித்துள்ளார். சாதாரண தொழில் செய்பவர்கள் தொடக்கம் நாடாளும் மன்னன் வரை அறவழி நின்று கடமையாற்ற வேண்டும். தான் மேற்கொண்ட கருமத்தை நிதானமாக கடமையுணர்வுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் இறைவனுக்கு அர்ப்பணமாக செய்ய வேண்டும் மென்பதை இலக்கியங்கள் வலியுறுத்தியுள்ளன. கடமை தவறும் ஒருவரால் ஒரு சமூகமும் கடமை தவறிய வரும் பல இன்னல்களை அநுபவிக்க நேரும். வர்த்தகர்களும் கொள்வது மிகை படாமலும், கொடுப்பது குறைபடாமலும் அமைய வியாபாரம் செய்ய வேண்டும். இன்று மக்கள் பல இன்னல்களை அனுபவிப்பதற்கும் காரணம் அறவழியில் வாழ மக்களில் பலர் தவறிவிட்டனர். எம்மிடம் உள்ள செல்வம், நிலம், வீடு மற்றும் பொருள்கள் எல்லாம் நாம் இறக்கும் சமயம் எம்முடன் சேரமாட்டா. அவை எல்லாவற்றையும் அறச் செயல்களாக மாற்றினால் மறுமைக்கு உறுதுணையாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பண்ணோடு பாடிப் பரவுவோம்

கூட்டுப் பிரார்த்தனை சபை சார்பில்

— க. முருகையா

நீர்வேலி கிராமிய வங்கி முகாமையாளர்

இறைவனைப் பாடிப்பரவி அவன் அருள் பெறுதல் எளிமையான வழியெனக் கண்ட அருளாளர் பலரும், அவன்கழல் ஏத்திப் பாடிப்பரவி வந்தனர். சைவசம யத்தை வளர்த்த ஞானச் செல்வர்களா கிய நாயன்மார்களும் அவ்வாறு செய் தனர்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மூன்று வயதிலேயே 'தோடுடைய செவி யன்' எனும் தேவாரப் பதிகத்தைப் பாடி னார். தன்தந்தையுடன் குளக்கரைக்குச் சென்றவர், நீரில் மூழ்கிய தந்தையைக் காணாது 'அம்மே அப்பா' என அழு தார். அச்சத்தம் சிவபெருமானின் திருச் செவியிற்பட்டபோது, அவர் அம்மைஅப் பராகத் தோன்றி ஞானப்பால் ஊட்டிவித் தனர். சம்பந்தப்பிள்ளை திருக் கோலக்காவுக்குச் சென்று, 'மடையில் வாளை பாய' எனத் தொடங்கும் தேவா ரப் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது தன் பிஞ்சுக்கரங்களால் தாளம் போட்டுப் பாடினார், உடனே இறைவனருளால் அவர் கைக்குப் பொற்றாளம் கிடைத் தது. இறைவன் தன் அடியார்கள் தாளத் துடன் பாடிப் பரவுவதை மனதார விரும்புகின்றார் என்பதை இந்நிகழ்வு நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திரு மணப் பந்தலில் இறைவன் தடுத்தாட் கொண்டார். திருவெண்ணெய் நல்லூர்ப் பெருமானே கிழப்பிராமண வேடத்தில் தோன்றி வழக்குரைத்தார். திருவெண் ணெய் நல்லூரில் அவர் சுந்தரமூர்த்தி சுவாமிகட்குக் காட்சி கொடுத்தபோது, 'எனக்குச் சிறந்த அர்ச்சனை பாட்டே யாகும் எனக்கூறிப் பாடவைத்தார். இசைப்பிரியனாகிய இறைவனைப் 'பித்தா' எனக்கூறிப் பாடினார் சுந்தர மூர்த்திசுவாமிகள். இவ்வாறே திருநாவுக் கரசு சுவாமிகளும், திருவதிகை வீரட் டானேஸ்வரரைப் பணிந்துபாடி சூல நோய் நீங்கப் பெற்றார். இவ்வாறு ஞானச் செல்வர்கள் மூவரும் முதலில் முழுமுதல் கடவுளாகிய இறைவனைப் பாடிப் பரவிப் பரவசப்பட்டு அவன்தாள் பணிந்தனர். அவர்கள் தாம்பெற்ற இன் பம் இவ்வையகமும் பெற்றுய்தி பெற வேண்டும் என்பதற்காக எண்ணிறந்த பாக்களையும் எமக்கீந்து சென்றனர். அவ் வடங்கன் முறைகளேயே நாம் இன்றுபாடி இன்புறுகின்றோம்.

இன்னும் இலங்கையை ஆண்ட இராவணன் கைலைமலையின்கீழ் அழுந் திய போது, பரமசிவனை இரங்க வைப் பதற்காக, இரங்கற் பண்ணாகிய விளரி பாடி உய்ந்தனன் என வரலாறு கூறு கின்றது.

இன்னோரன்ன சம்பவங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது இறைவன் இசைப்பிரியன் என்பது நமக்குப் புலனா கின்றது. அந்நியர் ஆட்சியின்போது சைவம் வளர்ச்சி குன்றியிருந்தது. அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது ஆறுமுகநாவலர் தோன்றி சைவ மத வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். இந்தியாவிலிருந்து ஓதுவார்களை வரவழைத்து, ஆலயங்கள் தோறும் தேவாரத் திருமுறைகளைப் பண்ணுடன் பாட ஆரம்பித்துவைத்தார். சுவாமி வீதிவலம் வரும்போது அடியார்கள் சேர்ந்து இறைவன் புகழ்பாடியும் ஆடியும் பரவும் வழக்கம் ஏற்பட்டது.

இத்தகைய மரபினை அடியொற்றி நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்திலும் 1959-ம் ஆண்டு முதல் இன்று வரை அடியார்கள் அரனாரைப் பணிந்து பாடும் வழக்கம் தொடர்ந்து வருகின்றது. எமது பஜனைக்குழு ஒழுங்காக ஆலய மண்டபத்தில் வெள்ளிக்கிழமை தோறும் பஜனை நடாத்துவதுடன், புராணபடலம், திருவிழாக் காலங்களில் திருமுறை ஓதல், அண்மையிலுள்ள ஆலயங்களில் சென்று கூட்டுப்பஜனை நடாத்தல் போன்றவற்றை அயராது செய்து வருகின்றது. இவ்வாறு எமது குழுவினர் இயங்குவதற்கு ஊக்கம் அளித்து எம்மை நெறிப்படுத்திய பெருமை, ஆலய பிரதம குருவாகிய வணக்கத்துக்குரிய கார்த்திகேய சாம்பசதாசிவக்குருக்கள் அவர்களையே சாரும். குருக்கள் அவர்கள் ஆராதனை செய்யும் அடியார்களின் உள்ளம் மகிழ்வெய்த மொழிபகர்ந்து எம்மை ஊக்குவிப்பார். கருணைக்கடலாகிய விநாயகப் பெருமானைக் கசிந்துருகிப் பாடிய அடியார்கள் வரலாறு கூறுவார். நம் அறியாமையினால் செய்யும் பிழைகளைக் கண்டு வெகுளமாட்டார். அன்பழைந்த இனிய வார்த்தைகளே அவர் நாவிலிருந்து எந்நேரமும் உதிரும். அவர் வார்த்தைகள் எம் இதயத்தை நிறைக்கும்.

'அந்தணர் என்போர்
அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்'

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாகவும் அரசகேசரிப் பிள்ளையாரின் அரிய பெரிய அர்ச்சகராகவும் இருந்து வந்துள்ளார்.

"செம்மலர் நோன்றாள் சேரவொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே"
(சிவஞானபோதம் 12 சூத்)

என்னும் மெய்கண்டார் வாக்குக்கு அமைய மாலற நேயம் மலிந்த அவரது தோற்றமும் அடியார்களைக் கவர்ந்து மகிழ்விக்கும் தேன்மொழியும் விநாயகரிடம் அடியார்களை ஆற்றுப்படுத்துவது போலவே தென்படும்.

"ஞானம் இவனொழிய நண்ணியிடும்
நற்கலனல்
பானு ஒழியப் படின்"
(என்பது திருவருட்பயன்)

திருவருட்பயன் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியர் அவர்கள் குரு இல்லாது பதி ஞானம் தோன்றாது என்பதை இக்குறள் மூலம் கூறியுள்ளார். குருவின் வழிகாட்டலால் சீடனிடம் ஞானம் தோன்றும் என்பதாம். அதேபோல எமக்கு ஞானத்தை உதிக்கச் செய்தற் பொருட்டு சூரியகாந்தக் கல்போல இருக்கும் குரு அவர்கள் பணி தொடர எம்பெருமான் அருள்பாலிப்பானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சைவ சமய மறுமலர்ச்சியில் மகளிர்

— பண்டிதை பார்வதிப்பிள்ளை தங்கராசா

சங்க காலம் முதல் சமீப காலம் வரை எமது சைவ சமயத்திற்கு எத்தனையோ சோதனைகள் ஏற்பட்டன. சைவ மதம் அழிந்துவிடுமோ என ஏங்கித் தவித்த காலத்தில் அவ்வப்போது அருளாளர் பலர் தோன்றி எமது சமயத்தினைப் பழைய நிலைக்கு உயர்த்தி வைத்துள்ளனர் என்பதற்கு இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. அத்தகைய சோதனைக் காலங்களில் மகளிரும் தம் பங்கை ஆற்றத் தவறினாரில்லை.

'பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பு
மிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்
- கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ
யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா''

என ஔவைப்பிராட்டி ஆனைமுகனைப் பணிந்து யான் நாலு இனிய பொருள்களைத் தருகின்றேன். நீ மூன்று தமிழையும் தா' எனக் கேட்டுப் பெற்றார்.

மூவேந்தர் காலத்தில் முச்சங்கங்கள் வைத்து முத்தமிழையும் ஆராய்ந்தனர் என்பர். அக்காலத்தில் வாழ்ந்த புரவலர்கள் புலவர்களை ஒப்ப மதித்தனர் என்றும் தம் உயிரினும் மேலாக மதித்துப் போற்றிய சந்தர்ப்பங்களும் உண்டு. அதிகமான் நெடுமானஞ்சி ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்தமையை,

'சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந்தனையே'

அதியமான், ஔவையார் சாவாது இருப்பது உலகம் உய்யும் வழியெனக் கண்டு அவர்க்கு நெல்லிக் கனியை ஈந்தார். இதனால் ஔவையார் நீண்ட காலம் வாழ்ந்து உலக மக்களை நல்வழிப் படுத்தற்பொருட்டு பல நூல்களை யாத்தார். ஆத்திசூடி, நல்வழி, வாக்குண்டாம், கொன்றைவேந்தன் போன்றவை அவர் பாடல்களுட் சிலவாகும்.

"வாக்குண்டாம் நல்லமனமுண்டாம்
மாமலரான்
நோக்குண்டா மேனிநுடங்காது
பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான்
பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு''

எனப் படிப்போர்க்கு பக்தியை ஏற்படுத்தும் பாக்களைப் பாடினார். அவருக்கு விநாயகப்பெருமான்மீது அளவிறந்தபக்தியுள்ளதால் நண்பர்களுடன் அளவளாவுவது போல 'நான் தருவேன் நீ தா' எனக் கேட்டுள்ளார். ஔவைப் பிராட்டியார் விநாயகப்பெருமானை உபாசனைசெய்து தன் வனப்பு மிகுந்த இளமையை நீக்கி முதுமைப்பருவம் பெற்றார் என வரலாறு கூறுகின்றது. அயராது ஐங்கரனை வணங்கி அவனருள் பெற்று, அகிலத்தோரும் அவ்வாறு வாழ வழிகாட்டியவர் ஔவைப் பிராட்டியாராவார். விநாயகரைப் பூசித்துத் தெய்வப் புலமை பெற்ற பிராட்டியார் பாடிய விநாயகர் அகவலில்,

'கோடாயுதத்தால் கொடுவினை
களைந்து'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அடியில் ஆணவமென்னும் மதங் கொண்டயானையை அடக்கிஆன்மாவை அடிமைகொண்டவர் எனக் கூறினார். அவர் அயரா அன்பினால் அரன்கழல் சேர்ந்த உண்மையை அறிந்தோம்.

காரைக்காற் பட்டினத்தில் வணிகர் குலத்தில் செல்வச் செழிப்பில் வாழ்ந்த புனிதவதியாரின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால்; அவர் சிற்றில் அமைத்துச் சிறு சோறு அட்டு விளையாடும் பருவத்தி லேயே பணியணிவார் தம்மைப் பரவி வந்தார். சிவனடியார் அவர் இல்லத் திற்கு ஏகின் அவர் வேண்டுவன கொடுத்து உபசரித்து மகிழ்வார். அவரை இல்லறத்தில் ஈடுபடுத்தினர் பெற்றோர். அவர் உளளம் இமைப்பொழுதும் இறை வனை மறவாது; ஆனால தன் கணவ னார்க்கு வேண்டும் பணி விடைசெய் தொழுகுவார். ஒருநாள், மதுர மிக்க மாங்கனியை இறைவனிடம் பெற்றுக் கணவனார்க்குக் கொடுத்தார். அச்செய் கையை உணர்ந்த பரமதத்தன், புனித வதியார், தெய்வப்பெண் என்றும், அம்மையாரின் பரிபக்குவ நிலை இல்லறத் திற்குப் பொருந்தாதது என்றும் உணர்ந் தான். அம்மையாரைவிட்டு நீங்கினான். வேறொரு பெண்ணை மணம்செய்தான். அச்செய்தியை அறிந்த அம்மையார் இறைவனை வேண்டி, தனது தசை பொதித்த வனப்பு மிக்க உடம்மை நீக்கி என்புடம்பை விரும்பிப் பெற்றார்.

என்புடம்புடன் அதாவது பேய் வடி வென எல்லோரும் அஞ்சும் வடிவுடன் கைலை மலைக்குச் சென்று 'அம்மையே' என இறைவனால் அழைக்கப்பெற்றவர். அவர் இறைவன்மேல் அற்புதத் திருவந் தாதி, திருவிரட்டைமணிமாலை, திரு வாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் போன்ற வற்றைப் பாடினார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்
புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போதுன் அடியின்
கீழிருக்க வென்றார்.

அம்மையார் அவர்கள் பிறந்ததன் பயன் எது என உணர்ந்து அவர் முதலில் வேண்டுவது இறைவனின் இன்ப அன் பினை அடுத்து பிறவி என்னும் பெருங் கடலினின்றும் நீங்கும் வேட்கை உண் டாக அதனைக் கேட்டார். அவ்வாறு பிறவி ஏற்பட்டால் அதனைப் பண்பும் பயனும் உள்ளதாக மாற்றுவதற்கு இறை வன் ஆடும்போது அவர் திருப்பாதப் போதின் கீழ் அமர்ந்திருக்கும் பேறு வேண்டும் என்றார். இவ்வாறு உலகி யலை அனுபவித்த ஓர் ஆன்மா பேரின் பப் பேறு அடையும் நிலையை எவ்வாறு அடைய விழைந்துள்ளது என்பதை இப் பாடல்மூலம் எம்மை அறிய வைக்கின் றார் சேக்கிழார் சுவாமிகள்.

'பாடுவாய் நம்மை யென்றான்' பரவு வார் பற்றாய் நின்ற இறைவன். அடி யார் பெருமையினையும் அவர் பக்தித் திறனையும். வேண்டுவார் வேண்டு வன கொடுத்தருளும் அரனார் பெரு மையையும் பெண்ணடியார் வாயிலாக உலகோர் பருகிப்படித்து பரமனைப் பணிய வைத்துள்ளார் சேக்கிழார் சுவாமிகள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் சைவமதம் குன்றிச் சமணம் மேலோங்கியது. சைவக் கோயில்கள் இருந்த இடங்களில் சமணப் பள்ளிகள் எழுந்தன. அத்தகைய சூழ்நிலையில் சைவநெறிதான் பெற்ற புண்ணியக் கண் இரண்டு என அப்பர் சுவாமிகளும், திரு ஞானசம்பந்த சுவாமிகளும் அவதரித்து சைவமதத்தை எழுச்சியடையச் செய் தனர். அவ்வாறு அவர்கள் செய்வதற்கு மூலகாரணமாக இருந்த இரு தெய்வப் பெண்கள் திலகவதியாரும், மங்கையர்க் கரசியாருமாவர்.

சமண சந்நியாசிகளின் புறவேடத் தாலும் அவர்கள் போதனையாலும் கவ ரப்பட்ட அப்பர் சுவாமிகள் சமணப் பள்ளியை அடைந்தார்; சமண மதத் தினை மேற்கொண்டார். திலகவதியார் யாருமற்ற நிலையில் திருவீரட்டானேஸ் வரரை வணங்கிவந்தார். அடியார்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழியனாகிய அரனார் அப்பர் சுவாமிக்குச் சூலைநோய் கொடுத்துத் தடுத்தாட்கொண்டார். திலகவதியாரின் மனம் நிறைவுற்றது. அப்பர் சுவாமிகள் தல யாத்திரைகள் செய்தும் பதிகங்கள்பாடிப் பரமனை வழுத்திச் சைவமதத்தை வளர்த்து வந்தார். மகேந்திரவர்மனும் மதம் மாறினான். திருஞானசம்பந்தப் பிள்ளை குழந்தையாக இருந்து தலயாத்திரைகள் செய்துவந்தார். பாண்டிய அரசன் நின்றசீர் நெடுமாறன் ஆட்சியின் கீழ் மங்கையர்கரசியாரும், குலச்சிறை நாயனாரும் மாத்திரம் சைவராக இருந்தனர். அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பதற்கிணங்க ஏனையோர் சமண மதத்தைத் தழுவினர். மங்கையர்கரசியார் சம்பந்தசுவாமிகளைப் பாண்டிநாட்டிற்கு வரவழைத்து மன்னனையும் மக்களையும் சைவமதத்தைத் தழுவச் செய்தார். சமணமதம் வலிகுன்றியது. மங்கையர்க்கு அரசியாகிய பாண்டிமாதேவியை விளித்துத் தேவாரத் திருமுறையில் பாடினார் சம்பந்தப்பிள்ளை. அம்மையாரும் மதம் மாறியிருப்பரேல் பாண்டிநாடும் சமணமதம் மேற்கொள்ளும் நாடாக விளங்கியிருக்கும். ஒருபெண்ணால் ஒருநாட்டின் சமயம் காப்பாற்றப்பட்டதை நாம் போற்றாது இருக்க முடியாது.

சமீபகாலத்தில் வாழ்ந்து அமரத்துவம் எய்திய பண்டிதை திருமதி சத்திய தேவி துரைசிங்கம் அவர்கள் வாழ்நாள் பூராவும், இலங்கையின் பலபாகங்களிலும் விளங்கும் சைவாலயங்கள், சைவப்பாடசாலைகள் தோறும் சென்று சைவசமயச் சொற்பொழிவாற்றி வந்தார். அவரின் துணைவனார் காலஞ்சென்ற பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்களின் ஒத்துழைப்புடன் பண்டித பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்செய்தும் சைவப் புலவர் தேர்வு நடாத்தவும் ஏற்பாடு செய்தனர். தமிழகத்திலும் சைவசமயப் பிரசங்கம் செய்யத் தவறவில்லை.

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களும் இன்று சமயப்பணி புரிந்து வருகின்றார். இலங்கை வனொலியில் சைவநற்சிந்தனைகள் வழங்கியும் சைவசமய தத்துவங்களை விளக்கி உரையாற்றியும் பணி புரிகின்றார். சிவத்தமிழ்செல்வி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் சமயப்பணி பல புரிந்து வருகின்றார். உலகின் பலபாகங்கட்கும் சென்று அங்கு வாழும் சைவமக்கட்கு சைவசமய உண்மைகளை எடுத்துக்கூறியும் பிரசங்கங்கள் செய்தும் வருகின்றார்.

சைவசமயமே பெண்களுக்கு முதன்மை கொடுத்து வந்துள்ளது என்பதை இலக்கிய ஏடுகள் சான்றுகாட்டுகின்றன. இறைவனை அர்தத நாரீஸ்வரராக வணங்குவது சைவமதம். அம்மை அப்பரெனப் போற்றிச் சமரசப் படுத்திய சைவம் தாய்மைக்குப் பெருமைகொடுத்து வருகின்றது.

சங்கநூல்களில்,

'சேர்ந்தது உண்மையே' என அகநானூறும்,

''நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்
இருதாள் நிழற்கீழ் மூவகை உலகும்
முகிழ்ந்தன''

என ஐங்குறு நூறும். அடித்துக் கூறுவதிலிருந்து எமது சமயத்தின் சமரசநிலையை உணரமுடிகின்றது.

☐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இந்து மதமும் அதன் வழி ஆலய வழிபாடும்

## (சில அவதானிப்புக்கள்)

— துரை எங்கரசு

மனித இன வளர்ச்சி இரு வகையான கூர்ப்பினையுடையது. ஒன்று புற வளர்ச்சி பற்றியது. மற்றது அகவளர்ச்சி பற்றியது. அகவளர்ச்சியே புறவளர்ச்சி யாதலால் அகவளர்ச்சியும் இருவகையானது. ஒன்று உலகியல் பற்றிய அறிவு வளர்ச்சி. அதுவே விஞ்ஞான வளர்ச்சியாகிய புறவளர்ச்சியாகும். மற்றது பரவியல் வளர்ச்சி. அதுவே மெஞ்ஞான வளர்ச்சி.

அகத்தின் விஞ்ஞானக் கூர்ப்பே புற நாகரீகமாக நவீன நாகரீகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அகத்தின் மெய்ஞ்ஞானக் கூர்ப்பே மதங்களாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புக்கள் மனித வாழ்வின் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் விளக்கங்கண்டு புதிய பல கொள்கைகளை உருவாக்கி வருகின்றன. இந்நிலையில் சமயங்கள் அழிந்து விடுமோ என விளம்புவோரையும் தவறாது காண்கின்றோம். பல்வேறு கோணங்களிலிருந்து சமயத்துக்கு எதிராக பல்வேறு நியாயங்களும் வாதங்களும் சொல்லப்படுகின்றன.

சமயம் என்ன என்பதை யாவரும் பொதுவாக அறிந்திருக்கின்றனர். ஆயினும் இதன் உண்மைப் பொருளை எத்தனை பேர் தெரிந்திருக்கிறார்கள் என்பது கேள்விக்குரியதாகும். ஏனெனில் இதுபற்றிய தேடல் விரிவானது என்பதே காரணமாகும். சிறுவயதில் நாம் தேவாரங்களைப் பாடுகின்றோம். புராணங்களைக் கற்கின்றோம். சில கிரியை முறைகளைத் தெரிந்து வைத்திருக்கின்றோம். இவையே சமயம் என நம்பத்தலைப்படுகின்றோம். இந் நிலைப்பாடானது பெரியோரான பின்பும் தொடர்ந்து நம் பப்படுகின்றது. கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவோமாயின் சமயத்தின் கடமைகளை ஆற்றி விட்டோமென கருத முற்படுகின்றோம்.

தானே தோன்றிய இந்து மதமாயினும் பிறரால் தோற்றுவிக்கப்பட்ட ஏனைய மதங்களாயினும் சரிதாம் தோன்றிய இயற்கைக்கு ஏற்ற இயல்பினையே கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இந்த இயல்பு மதத்தின் தத்துவக் கோட்பாட்டினை விட மதத்தின் சமயக் கோட்பாட்டில் வெளிப்படையாகத் தோன்றுவதைக் காணலாம். மதமானது சாதாரண மக்களிடையே சமயக் கோட்பாடாக, புறச்சடங்குகளாக விரிந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

இந்திய சிந்தனை வரலாற்றில் சமயங்கள் மனித வாழ்க்கையோடு இணைந்து பெற்ற பரிமாணங்கள் பற்றிய விரிவான ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் ஏற்பட்ட பக்தி இயக்க வரலாற்றின் பாரிய வளர்ச்சியாகச் சைவசித்தாந்த மரபு உருவாகியது. நாடெங்கும் எழுந்த கோவில்களும் மடங்களும் சமூக நிறுவனங்களாக வளர்ந்தன. பக்தி இயக்கப் பின்னணியில் கோயில்கள் அரச ஆதரவோடு பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதர வளம் பெற்ற நிறுவனங்களாக எழுந்தன.

கோயில்களின் பக்கவிளைவாக மெய்யடியார்கள் தங்கும் இடங்களாகவும், ஒன்று கூடும் இடங்களாகவும் வளர்ந்த நிறுவன அமைப்பான மடங்கள் மடாலயங்கள் என அழைக்கப்பட்டன. இவை சமய தத்துவக்களங்களாக வளர்ந்தமை ஒரு தனியான வரலாறாகும். வேதாந்த மரபு, சைவசித்தாந்த மரபு போன்ற பல்வேறு கிளைகள் தோன்றுவதற்கு மூலமாக இவை அமையலாயின. மடங்களின் பின்னணியில் தனி மனிதர்களாகவும் நிறுவன ரீதியாகவும் உருவாக்கிய சிந்தனை வளர்ச்சி இந்திய சமய வரலாற்றின் உயிரோட்டத்தை மக்களோடு இணைக்கும் பாலமாகி எழுச்சி பெற வைத்தது.

உலகம் முழுதும் பலவித சமய மக்கள் வாழ்ந்தாலும் அவரவர்கள் தங்கள் தங்கள் சமயங்களுக்கேற்ற வகையில் ஆலயங்களை அமைத்து போற்றி வருவதை வரலாற்று ரீதியாக அறிந்து வருகின்றோம். எந்நாட்டை எடுத்துப் பார்த்தாலும் அங்குள்ளோர் கோவில்களைப் பேணுவதன் மூலம் தம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் அதன் மூலம் பேணிவருகிறார்கள் என்பது உண்மையாகும். இது இந்து மதத்துக்கும் இயைபானது.

கடவுள் எங்கும் இருக்கும் பொழுது இங்ஙனம் அமைக்கப்பட்ட இவ்வாலயங்களுக்கு இவ்வளவு மதிப்பு ஏற்பட்டதற்கு காரணங்கள் இல்லாமலில்லை. நம் இந்துக்களுடைய ஆலயங்கள் சிறப்பு முறைப்படி வகுக்கப்பட்டு கும்பாபிஷேகத்தின் போது யாகசாலையில் செய்யப்படும் கிரிகைகளினாலும், வேதமந்திரங்களின் சக்தியினாலும் ஆசாரியர்களுடைய பிரார்த்தனைகளினாலும் அருள் நிறைந்து விளங்குகின்றன.

பரத கண்டத்திலும் இலங்கையிலும் வாழ்ந்த இந்துக்கள் ஆலயங்களை அமைத்து வாழ்ந்த கதையே அவர்களுடைய சரித்திரமாய் அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

தென்னிந்தியாவில் ஏராளமான கோயில்கள் சேர, சோழ, பாண்டியர் பல்லவர் கதைகளை இன்றும் சொல்லிக் கொண்டிருப்பதை குறிப்பிட்டுக் கூறமுடியும், தமிழ் மன்னர்கள் தங்கள் அரண்மனைகளிலும் பெரியனவாகத் திருக்கோயில்களை அமைத்தும் புதுக்கியும் திருப்பணிகள் செய்தும் அழியாப் புகழை நிலை நாட்டியுள்ளார்கள்.

திருக்கோயில் விமானங்களை பொன் தகடுகளால் வேய்ந்தும், கருங்கற்களாலும் சுண்ணவகைகளாலும் வானளாவிய இராஜ கோபுரங்களையும், விமானங்களையும் திருமதில்களையும், மண்டபங்களையும் அமைத்தும், கண்ணையும் கருத்தையும் கவரும் சிற்பங்கள். ஓவியங்களால் நிரப்பி என்றென்றும் அழியாச் செல்வங்களாக்கி தம் காணிக்கையை இறைவன் பால் செலுத்தியுள்ளார்கள்.

சமய வாழ்வு முறையில் முதலில் கடவுளில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பது நாவலரின் உறுதியான நிலைப்பாடாகும். இந்தச் சரீரம் உள்ள பொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங்கருணைக் கடலாகிய கடவுளை வழிபட்டு உய்ய வேண்டும் என்கிறார் நாவலர்.

கடவுளால் அருளிச் செய்யப்பட்ட வேதம், ஆகமம், என்னும் முதனூல்களில் விதிக்கப்பட்டவையெல்லாம் புண்ணியங்கள். விலக்கப்பட்டவையெல்லாம் பாவங்கள். புண்ணியங்கள் நன்மை பயப்பன, பாவங்கள் தீமை பயப்பன. சமயவாழ்வு முறையில் புண்ணியங்கள் செய்ய மட்டுமே இடம் உண்டு. பாவங்கள் விலக்கப்பட வேண்டியவை.

கடவுளால் விரும்பப்படுபவைகளான இரக்கம், வாய்மை, பொறை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கம், கொடை, தாய், தந்தை பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாகும். கடவுள் நம்பிக்கை கொண்ட நாம் கடவுளுக்கு எவை விருப்பமோ, அவற்றை நம் வாழ்வில் மேற்கொள்ள வேண்டும். கடவுள் வெறுப்பவற்றை நாம் தள்ளி வைக்க வேண்டும். அப்போது தான் நம் வாழ்வு சமய வாழ்வாக அமையும் என்கிறார் நாவலர்.

சமய வாழ்வு முறையில் கடவுள் வழிபாடு முதன்மை பெறுகின்றது. கடவுள் வழிபாடு எனும் போது அவரை மனதாலே தியானித்தலும், வாக்கினாலே துதித்தலும் கைகளினாலே பூசித்தலும், கால்களினாலே வலம் வருதலும், தலையினாலே வணங்குதலும், செவிகளினாலே அவர் புகழைக்கேட்டலும், கண்களினாலே அவர் திருமேனியைத் தரிசித்தலுமாகும். இத்தகைய வழிபாட்டு முறை மனிதர்கள் ஒவ்வொருவராலும், கடைப்பிடிக்கக்கூடியதே.

ஆலயங்கள் மனிதனைப் புனிதனாக்கும் தன்மை தெய்வ அருளாற்றல் அங்கு நிலவுவதால் வழிபாடு செய்வாருடைய வினைகள் அங்கு வெந்து சாம்பராகின்றன. இதனாற்றான் நம் முன்னோர் ஊர்கடோறும் ஆலயங்கள் அமைத்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தார்கள் போலும். ஆலய வழிபாடு அறிகுறியாக அறிவைப் பெருக்கும். அருள் நெறியாக அன்பை வளர்க்கும், அனுபவ வாயிலாக அழியாப் பேரின்பத்துக்கு அடிகோலும். திசை தெரியாது புயலினால் அல்லலுறும் மாலுமிக்கு வழிகாட்டியாக இருக்கும் கலங்கரை விளக்கமாகும். எனவே யாவரும் நாடோறும் திருக்கோவிலுக்குச் சென்று சிரத்தையோடு விதிப்படி தரிசனம் செய்தல் வேண்டும்.

ஔவை இயற்றியுள்ள விநாயகரகவலிலிருந்து மூதாட்டி அட்டமாசித்திகளும் கைவரப் பெற்றவர் என்பது விளங்குகிறது, அதனால் அவருக்கு யோகக் காட்சி என்ற சூட்சும திருஸ்டியும் இருந்திருக்க வேண்டும். பிராட்டியார்;

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என அருளிச் செய்த போது அது வெறும் புறப்பார்வை கொண்டு மாத்திரம் அல்லாமல் அகப்பார்வைக்கும் உகந்ததெனக் கொண்டே அவ்வாறு கூறியிருத்தல் கூடும்.

ஆகமங்களில் கண்டபடி ஆறுமுக நாவலர் பின்வருமாறு கூறுகிறார்.

''கடவுள் அங்கிங்கெனாதபடி வியாபகமாய் நிற்பினும் ஆலயத் திருமேனிகளிலும் மெய்படியார் திருவேடத்திலும் தயிரில் நெய் போல விளங்கி நிற்பர், மற்றைய இடங்களில் பாலில் நெய் போல விளங்காது நிற்பர்.

இறைவன் விளங்குவதாக இங்கு கூறப்படும் அந்த இரண்டு உருவத் திருமேனிகளுள் அனுபூதிமான்களாகிய மெய்யடியாரைக் காணக்கிடைப்பதே அருமையான காரியமாகும். அதனினும் அடிக்கடி அவரை அண்டைக் கிடைப்பது அருமையினும் அருமையாகும்.

நமது முன்னோர் அறிவு விருத்தியடையும் வழிகளில் கற்கை, கேட்கை, கோயிற் பழக்கம் என மூன்றைக்கூறுவர். வழிபாட்டு முறையிலும் குரு, லிங்கம், சங்கமம், என மூன்றாகக் கூறுவர். இங்கு லிங்கம் என சுட்டப்படுவது தான்கோயில் வழிபாடாகும். கோயில் வழிபாட்டினால் தான் குரு ஒருவர் கிடைப்பார் என்பதை தாயுமானவர் பின்வருமாறு சுட்டுகிறார்.

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

இதன் மூலம் கோயிற் பழக்கமும், அடியார் கூட்டுறவும் கிடைப்பதன் மூலம் ''ஆலயந் தொழுவது சாலவும் நன்றா கிறது.

□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்

— பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர்
*தலைவர்*
*இந்து நாகரிகத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

சமயமும் தத்துவமும் ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படுவதே சைவ சித்தாந்தத்தின் சிறப்பம்சமாகும். இவ்விரு துறைகளிலும் எடுத்துக் கூறப்படும் கருத்துக்களுக்குச் சிறந்த நடைமுறை விளக்கமாக அமைவதே சிவாலயங்களில் பேணப்படும் கிரியை மரபும், கலை மரபும் எனில் மிகை இல்லை. இவ்விரு மரபுகளும் சைவ சித்தாந்தம் அமைத்துத் தந்த சீரிய சிந்தனைகளை எமது அனுபவத்திற்குக் கொண்டு வருவதில் பெரிதும் துணை புரிவன.

இத்தகைய உயர் அனுபவத்தைப் பெற்ற நாம் உய்வதற்கு இப்பிறவியை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எண்ணற்ற பிறவிகளில் மானுடராய்ப் பிறத்தல் அரிது அரிது காண்; இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? யாது வருமோ? அறிகிலேன் - என்பார் தாயுமானவர். மானுடராய்ப் பிறத்தல் மிக அருமையாகும். அவ் அருமையை நாம் ஆராய்ந்தால் சமுத்திரத்தைக் கையினால் நீந்திக் கரையேறும் நிலை போன்றதாகும். மானுடப்பிறப்பை நாம் பெற்றாலும், சாஸ்திரங்கள் வழங்காத தேசங்களில் பிறவாது சாஸ்திரங்களினால் வழக்கை உய்வுபெறத்தக்க வகையில் அவை வழங்கிவரும் தேசங்களில் பிறப்பது மிகுந்த புண்ணியம். 'என்ன புண்ணியம் செய்தனம்' என்று நாம் இறையருளை வியக்கும் வண்ணம் சமய சாஸ்திரங்கள் எமக்கு உயரிய நெறிமுறைகளை வகுத்துத் தந்துள்ளன. யாம் உய்ய ஆட்கொண்டருளும் இறைவனால் அருளப்பட்ட சிவாகமங்களே சைவாலயக் கிரியை மரபுக்கு அடித்தளமாக அமைகின்றன. 'அவனருளாலே அவன் தாள்' வணங்க இச் சிவாகமங்கள் இறைவன் திருவருளினால் எமக்குக் கிட்டியுள்ளன. சிவனே பரமபதி எனத் தெளிந்து வழிபடும் சைவ சமயத்தைச் சார்ந்து வாழ்தல் கூறலாற்றாத பெரும் புண்ணியமாகும்.

சிவஞான சித்தியார் கூறும்:

வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு
மூழ்பெற லரிது சால வுயர் சிவ ஞானத் தாலே
போழிள மதியினானைப் போற்று வாரருள் பெற்றோரே,

இத்தகைய மிக அருமையாகப் பெற்ற மனிதப் பிறவியினால் வரும் பயன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களிலும் நின்று சிவபெருமானை வழிபட்டு உயர்ந்த முத்தியை அடைதலே யாகும்.

சிவ புண்ணியத்தின் பயனாகிய முத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதமுத்தி, பரமுத்தியென இரு வகைப் படும்.

பதமுத்தி- சாலோகம் - சாமீபம்-சாரூபம் என்பன.
பரமுத்தி - சாயுச்சியமாகும்.

சரியை: அனுட்டித்தவர்கள் அகத்தொண்டருக்குரிய உரிமை போல சிவபெருமான் திருமேனி கொண்டிருக்கும் உலகத்துள் எவ்விடத்தும் தடையின்றிச் சஞ்சரித்து அவ்வுலக போகங்களை அநுபவித்து வாழ்வர்.

கிரியை: அனுட்டித்தோர் புத்திரர்க்குரித்தாகிய உரிமை போல சிவபெருமானுக்குச் சமீபமாக இருந்து அப்போகங்களை அனுபவித்து வாழ்வர்.

யோகம்: அனுட்டித்தோர் தோழர்க்குரித்தாகிய உரிமை போலச் சிவபெருமான் கொண்டருளுந் திருமேனியைப் பெற்று வாழ்வர்.

ஞானம்: அனுட்டித்தோர் சிவபெருமானுடைய திருவடியில் இரண்டறக் கலந்து நித்தியானந்தத்தை அனுபவித்து வாழ்தலாகிய பரமுத்தியடைவர்.

எனவே தான்:

விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே

என்றார் தாயுமானவர்.

பதி, பசு, பாசம் மூன்றும் உள்பொருள்கள் என்றும், அவை அநாதியாகவே உள்ளன என்பதும் சைவ சித்தாந்தம் கூறும் கோட்பாடு. அவற்றுள் அறிவுடைப் பொருள் கடவுள் ஒருவரே; அறிவிக்க அறிபவை எண்ணில்லாத ஆன்மாக்கள். அறியாமையை உடையவை பாசங்கள். இந்த அறியாமையிலிருந்து நீங்கி அறிவை அடைவதே ஆனந்தம். இக்கொள்கை என்றும் மாறாதது. நாம் அக்கொள்கையினை வாழ்க்கை அனுபவத்திற்குக் கொண்டுவருவது என்பது எமது முயற்சியிலே தான் தங்கியுள்ளது.

இம்முயற்சியை மேற்கொள்ள மானுட ஆக்கையின் ஒவ்வொரு அங்கங்களும் இறைவனால் அருளப்பட்டுள்ளன என்பதை நாம் உணர வேண்டும். இறைவனை

தாழ்த்த சென்னியும்,
வாழ்த்த வாயும்
நினைக்க மடநெஞ்சும்
திருக்கோயிலைச் சூழவர கால்களும்
கூப்பித் தொழ கைகளும்

தரப்பட்டுள்ளன.

இவற்றை எமக்குத் தந்த கருணாமூர்த்தி ஆகிய இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையிலேயே அமைகின்றன. ஆலயத்தில் இடம்பெறும் கிரியைகள் சைவ சித்தாந்த விளக்கத்துடன் கூடிய கிரியைகள் எமது உயிரையும் உள்ளத்தையும் வளமாக்கக் கூடியவை. மாறாக நிகழின் அவற்றால் பயனில்லை.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என் மனத்தே
வழுவாதிருக்க வரந் தர வேண்டும்
இவ்வையகத்தே

என்பது அப்பரது வேண்டுகோள். எமது வாழ்வின் செயற்பாடுகளை இறைவனை நோக்கித் திருப்பிவிடுதல் வேண்டும் என்பதற்காக வகுக்கப்பட்டவையே ஆலயக் கிரியைகள். ஆலயத்திலுள்ள சிவாச்சாரியார், அறங்காவலர், அடியார் ஆகிய முத்திறத்தாருக்கும் இக்கிரியைகள் நல்வழி காட்டுகின்றன.

கிரியைகளைத் தவறாது அனுட்டிப்பதற்கேற்ற வழிமுறைகள் ஒழுங்குகள் செய்து தரவேண்டியது அறங்காவலர் பொறுப்பு. அவரே ஆலய பரிபாலகர். கிரியைகளை ஆத்மார்த்த நிலையில் நிறைவேற்றி பரார்த்த நிலையில் உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு குறைவின்றி நிகழ்த்தும் பொறுப்பு சிவாச்சாரியாருடையது நிகழும் கிரியைகளுக்கு ஏற்ற உதவிகள் வழங்கி அவற்றின் வழி பக்தி உணர்வைப் பெருக்கி பயன் பெறுதல் அடியார்கள் பொறுப்பாகும்.

எனவே எமது மனத்தை இறைவன்பால் திருப்ப ஏற்பட்ட சாதனையே கிரியைகள் என்பது பொருத்தமாக அமைகின்றது. இவற்றின் நோக்கும் தவறக்கூடாது.

பிறவியை மாண்பாக்கவும்
சிவ தரிசனத்தைக் காணவும்
சிவானந்தத்தில் திளைக்கவும்

கிரியைகள் துணைசெய்கின்றன. இக்கிரியைகளினால் எமக்குத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக வேண்டும்.

ஆலயக் கிரியைகளில் ஈடுபடும் எத்திறத்தாரும் முதன் முதலில் தன்னைத் தான் ஆளும் திறமை பெறவேண்டும். இறைவனை பாரதி வேண்டுகின்றான்;

தன்னையாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்
மணக்குள விநாயகா வான்மறைத் தலைவா
தனைத்தான் ஆளும் தன்மை நான் பெற்றிடில்
எல்லாப் பயன்களுந் தாமே வந்தெய்தும்.

எம்மை நாம் அறிந்து ஆளத் தெரிந்து இறைவழிபாட்டில் ஈடுபடும் பொழுது தான் மரபு வழியாக வழங்கிவரும் ஆலயக் கிரியைகள் பயனுள்ளவையாக அமையும்.

சிவபெருமான் எங்கும் வியாபகமாய் இருப்பினும் ஆலயத்தில் சிவலிங்கம் முதலிய திருமேனிகளைக் கொண்டு அருள் புரியுமிடம் ஆலயமாகும். இங்கு அவர் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அருள்புரிவார் என்ற நம்பிக்கை சைவர்களிடையே மேலோங்கியுள்ளது. சிவனை குரு லிங்க சங்கமம் ஆகிய இடங்களிலே வழிபட வாய்ப்புண்டு. ஆலய வழிபாடு நான்கு சாதனா முறைகளின் படி நிகழத்தக்கதாகும். மல நீங்கிய சிவஞானிகளும், பூர்வ மலவாசனை தாக்காமை பொருட்டும் சிவானந்தம் மேன் மேலும் வளர்தற் பொருட்டும் சிவலிங்கத் திருமேனிகளை வழிபடுவர். ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றுவதற்காகவே மூர்த்தி – தலம் – தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார் என்பதை நாம் ஒவ்வொரு கணமும் உணரவேண்டும். சிவாலயத்தைச் சிவனெனவே கண்டு கிரியைகளை ஆற்றுவதும் வழிபடுவதும் இன்றியமையாதது. இத்தகைய இயல்பினோரே சீவன் முத்தர் எனப்படுவர்.

ஆலய வழிபாட்டில் பெருமை சொல்லுந் தரமற்று ஆன்மாக்கள் அதன் பெருமையை உணரத்தக்க வகையில் உமாதேவியாருக்கு காஞ்சிபுரம், திருவானைக்கா, மாயூரம், திருமயிலாப்பூர் முதலிய தலங்களிலும் விநாயகருக்கு திருச்செங்காட்டான்குடி, திருநாரையூர், திருவெண்ணெய் நல்லூர் முதலிய தலங்களிலும், சுப்பிரமணியக் கடவுளிற்கு திருச்செந்தூர், திருப்பரங்குன்று, திருத்தணிகை, பழனி முதலிய தலங்களிலும் "தென்னாடுடைய சிவனே போற்றி" எனக் கூறும் வகையில் சிவனுக்கு ஊரெங்கும் ஆலயம் அமைத்து ஆன்றோர்கள் பூசித்தார்கள் என்பது ஐதீகம். திருநந்தி தேவர், அகத்திய முனிவர், வசிட்ட முனிவர், பிரம்மா விஷ்ணு, நவக்கிரகங்கள் ஏனைய முனிவர்கள், தேவர்கள், சமயாச்சாரியர் போன்றோர் ஆலய வழிபாட்டினால் பெரும் பயன் பெற்றமை பற்றி சமயவரலாறு கூறும். சிலந்தி நாரை, கருக்குருவி, சர்ப்பம் யானை போன்றவையும் ஆலய வழிபாட்டினாலேயே முத்தி அடைந்தன என்பது ஐதீகங்களாக வழங்கி வருகின்றன.

கிரியைகளுக்கு முதலிடம் கொடுக்கும் சிவாலயங்கள் உள்ள ஊர்களே ஊர்களாம் என்பது அப்பர் தரும் விளக்கம். சிவாலயம் இல்லாத ஊர் பாழ்: சிவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ை ச செய்யாத பிறவி பாழ்: சிவனைப் பற்றிக் கூறாத சாஷ்திரம் பாழ்! என்ற ஓர் உபநிடத...— பாசியம் சிந்தனைக் குரியது.

சைவாலயங்களில் நித்தியபூசை, உற்சவம், பிரதிஸ்டை பிராயச்சித்தம் ஆகியவை யாவும் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த சிவாகம விதிப்படியே நடைபெறத்தக்கன. இதில் இரண்டாம் சிந்தனைக்கு இடமில்லை. ஐயங்கள் ஏற்படுமிடத்து கற்றோர் பலர் கூடி ஆராய்ந்து முடிவு எடுத்தல் நன்று.

ஆகம விதியால் உய்த்து மெய்வழிபாடு செய்து வேண்டியாங்கு அருள் பெறுவதே எமது மரபு. ஆகமவழிபாடு அகவழிபாடு புறவழிபாடு என இருவகையாக அமையும், அகவழிபாடு அந்தர் யாகம் எனப்படும். உட்பூசை மானச பூசை என்றும் சொல்லப்படும். புறவழிபாடு புறப்பூசை என்றும் பகிர் யாகம் என்றும் சொல்லப்படும்.

புற வழிபாட்டிற்குள்ள ஆலயம் தூபம், தீபம், திருமஞ்சனம், நைவேத்தியம் முதலானவற்றை எல்லாம் அகத்தே மனத்தினாற் பொருந்தி செய்வதே அந்தரியாகப் பூசையாகும். அகத்தே மனத்தினாற் பொருந்தி செய்யும் அந்தர்யாகப் பூசை செய்தே பிறபூசை செய்ய வேண்டும் என்பதே ஆகமசித்தம். "அகத்தில் ஆன்மாவில் உறையும் சிவனை பூசனை செய்யாது மறந்து புறத்திற் பூசிப்பவர் பகவின்பால் தன் உள்ளங்கையில் இருப பதைக் கண்டும் புறக்கையை நக்கு வோனே ஒப்பான்" என சிவதருமோத்திரம் கூறுகிறது. இவ்வாறு சிவலிங்கப் பெருமானை அகததும் புறத்தும் வழிபடாதவர்கள் பிறப்பு இறப்புக்கு ஆளாகின்றனர்.

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற்
தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகி
லொருகா லுந் திருக்கோயில் சூழா ராகி
லுண்பதன்முன் மலர் பறித்திட்டுண்ணா ராகில்
அரு நோய்கள் கெட வெண்ணீறணியா ராகில்
வலியற்றோர் பிறந்த வா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாக யிறக்கின் றாரே

என்பது அப்பர் திருவாக்கு. எனவே ஆகம மரபிலே திருக்கோயிலும் அங்கே நடைபெறும் பூசை உற்சவம் முதலியனவும் அகவழிபாட்டின் உண்மையைவிளக்கவும் ஞானத்தை உண்டாக்குவதற்கும் இன்றியமையாத கருவியாய் உள்ளன. உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசத்தில்

"கிரியை யென மருவுமவை யாவும்
ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்"

எனக் கூறியதும் இக்காரணத்தினாலாகும். கிரியையென மருவுமவை ய வும் என்பதில் ஆலயக் கிரியைகள் தீட்சைக் கிரியைகள் யாவும் இவற்றுக்குச் சார் பான பிறவும் அடங்கும்.

கனித விடை படிப்படியே செய்கை முறையினால் கிடைக்கின்றது. கனித விடைக்கும் அதன் பொருட்டுச் செய்யப் படும் கிரியைக்கும் உள்ள தொடர்பில் வைத்த ஞானத்திற்கும் அது கிடைத்தற் பொருட்டுச் செய்யப்படும் கிரியைக்கும் உள்ள தொடர்பு சிந்தித்தற்பாலதாகும்

திருவலகிடுதல் முதல் சிவார்ச்சனை வரையுள்ளவைகள் திருநந்தவனம் வைத்தல், பூக்கள் பத்திரங்கள் எடுத்தல், மாலை தொடுத்தல், சாத்துதல் என்ற இன்னோரன்னவைகள் பூசை உபகரணங்கள், அவற்றை ஆளும் முறைகள் நிவேதனங்கள், ஆலய அமைப்பு, மகோற்சவம், பிரதிஷ்டை யாவும் ஞானம் நிமித்தம் என்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. எனவே ஆலயக் கிரியைகள் ஞானத்தைப் பெற காரணமாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியை என மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் என்பதை கோயிற் சிவாச்சாரியாரும், வழிபடுவோரும் அறங்காவலர்களும் எந்நேரமும் மனதிற் பதியச் செய்து கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் கோயில் பரிபாலகர்களும் அர்ச்சகர்களும் ஒத்துழைப்பதோடு சிரத்தை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் பலவாறு பலமுறை நாவலர் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

எனவே திருக்கோயிலும் அங்கே நடைபெறும் பூசை உற்சவம் ஆகியனவும் அகவழிபாட்டின் உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாக் கருவியாயுள்ளன. மலநோயை நீக்கும் பரம்பொருள் ஆலயங்களையும், பூசை உற்சவம் முதலியவற்றையும் செய்யுமாறு விதித்திருத்தல் ஆன்மாக்களது உய்வுக்காகவே. அப்புறவழிபாடு காரணமாக ஆன்மாக்கள் அகப்பூசையின் உண்மையை உணர்ந்து அதில் ஈடுபடுமிடத்து சிவஞானம் கைகூடி அத்துவித முத்தியிற் சேரும் பெரும் பேறு கிட்டுகின்றது. இந்த உண்மை சிவாலயங்களில் அமைக்கப்பட்டுள்ள மண்டபங்கள், தூபி, கோபுரம், பிராகாரம் முதலியவற்றாலும் உணரப்படும். சரீரத்தில் ஆறு ஆதாரங்கள் காணப்படுவது போல் புறத்தே காணப்படும் ஆலயத்திலும் கருப்பக்கிருகம் முதலிய மண்டபங்கள் ஆறாதார வடிவாய் விளங்குகின்றன. இறைவனது திருவடிவத்தை சூழ்ந்து இருக்கும் திருவாசி பிரணவ வடிவம். 'ஓங்காரமே நற்றிருவாசி யுற்ற தனி னீங்கா வெழுத்தே நிறை சுடராம்' என்பது உண்மை விளக்கம்.

தூபி கோபுரம் – தூலலிங்கம்

விமானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் – சூக்குமலிங்கம்

முன்னுள்ள பலிபீடம் – பத்திரலிங்கம்

சிவலிங்கம் – நந்தி – பலிபீடம் அமைப்பிலும் தத்துவ உண்மை உள்ளது. சிவலிங்கம் – பதி, நந்தி – பசு, பலிபீடம்– பாசம் இவை மூன்றும் நேராக அமைந்துள்ளன. அவை அவ்வாறு தாபிக்கப்பட்டிருத்தலால் அவை அநாதி நித்தியமாகவுள்ளது என்ற உண்மை உணரப்படும். திரைச்சிலை காட்டிநிற்கும் தத்துவமும் உணரற்பாலது. மாயையாகிய திரையை நீக்கி சிவனது திருவருள் தனைக்கொண்டு ஞானம் பெற வேண்டும் என்பதே அதன் உட்பொருள்.

சைவர்களாக பிறந்தவர்கள் சைவ சித்தாந்த அனுபவத்தைப் பெறுவதே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென்பது பன்நெடுங்காலம் ஆகவே ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. சிவ புண்ணியச் செயல்கள் அனைத்திற்கும் சிகரமாக அமைவது பூஜையாகும். விநாயகர், முருகன் அம்பிகை, திருமால் யாவரும் சிவபூஜை செய்திருத்தல் பற்றிய ஐதீகங்களினால் சிவமகிமை நன்குணரற்பாலதாய் உள்ளது. சைவபத்ததிகளில் கண்டவாறு பூஜைக் கிரமங்களுட் பொதிந்து கிடக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அளவு கடந்தவை. செய்பவனும் செய்விப்பவனும் சிரத்தையுடன் கிரியைகளில் ஈடுபடும்போதுதான் உண்மையான சைவசித்தாந்தஞானம் உதிக்கும். கிரியை கூறும் வழியாக ஆத்மீக நன்மையையும் உலகில் சுபீட்சமான வாழ்வையும் பெறுவதற்குச் சைவசித்தாந்தம் ஒரு சிறந்த கருவூலம் எனக் கூறுவது எல்லா வகையிலும் பொருத்தமான கருத்தாகும். கிரியைகளினால் ஒருவருக்குக் கிடைக்கும் பயன் மன அமைதி, பக்தி, சமயப் பற்று ஆகியவையே.

உயிரானது தன்னோடு உடனாயுள்ள பரம்பொருளை அறிந்து அதனோடு ஒன்றுபட்டு அதனால் வாய்க்கும் இன்ப அனுபவ நிலைதான் வாழ்க்கையின் முடிவான பேறு என்றும் ஆத்மலாபம் என்றும் முத்தியின்பம் என்றும் ஏற்றுக் கொள்ளப்படுமானால் அந்த உயர்ந்த நிலையைப் பெறும் விடயம் அநாயாசமாகக் கைகூடி விடாது. அந்நிலை நாடுபவர் எவராயினும் அதற்குரிய முழுத் தகுதியும் பெறத்தக்கவராவர். அத்தகுதி அகநிலை, புறநிலை ஆகிய இருநிலைகளிலும் ஏற்

187288



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவேண்டும். அதற்குரிய சாதனையே சைவ சமயத்தில் சிறப்பாக ஆலயங்களில் இடம்பெற்று வருகின்றன. கடவுளை முன்னிலையாகக் கொண்டு கடவுள் தந்த உடம்பையும் உடற் கருவிகளையும் மனம் முதலிய மற்றுங் கருவிகளையும் ஒருமுகப் படுத்தி, பூவும் நீரும் தூபமும் தீபமும் கொண்டு பூசைசெய்து அதன் மூலம் கடவுள் அனுபவப் பேற்றைப் பெறுவது சைவங்கண்ட சாதனையாகும், சைவங் கண்ட இச்சாதனையே மனிதரின் தேக இயல்பு, மன இயல்பு, விவேக இயல்பு உயிரியல்பு என்ற நால்வகை இயல்புகளுக்கும் உடன்படக்கூடிய ஆத்ம சாதனை என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே ஆலயங்களில் நிகழும் பூசை முறை ஆகிய சாதனை சைவத்தினதும் ஆலய வழிபாட்டினதும் சிறப்பியல்புகளில் முதன்மை பெறுகின்றது. சைவ சமய மரபில் இச்சாதனை கைகூடுவதற்குரிய ஏற்பாடுகள் மிகவும் தொன்மையான காலத்திலிருந்து செய்யப்பட்டுள்ளன. மிகப் பெரிய ஆலயங்கள் மன்னர்களாலும் மக்களாலும் எழுதப்பட்டதன் நோக்கம் இச்சாதனையை மேற்கொள்வதற்கே ஆகும். பூசித்தற்குரிய தெய்வ மூர்த்தங்களும் கலை எழிலோடும் தெய்வீகப் பொலிவோடும் வார்த்து வைக்கப்பட்டுள்ளன, பூசைக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் அவ்வப்போது அருமையாகத் தேடியும், உருவாக்கியும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பூசை செய்வதற்குரிய விதிமுறைகள் பற்றி விரிவான விளக்கங்களைத் தரும் நூல்களும் பெருமளவும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. இவற்றை உரியவாறு பேணுவதும் அவற்றை உரிய முறையில் கையாளுவதும் சைவசமயத்தின் பெரும்பேறு அடைவதற்கு இன்றியமையாதவையாகும். சைவ சாதனையில் உயர்ந்ததான ஆலய பூசை முறையில் அனைவரும் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்ற குறிப்பை ஆலயங்கள் உணர்த்தி வருகின்றன. இதனை முறையாக விளங்கிச் செயற்படுவதே ஆலய வழிபாட்டின் தர்மமாரும்.

ஆலய வழிபாட்டிலே சைவ சித்தாந்த மரபை அடிப்படையாகக்கொண்ட சமய தத்துவ ஞான இணைப்பு சிறப்பாக உள்ளது. நமக்குரிய சமயம் சைவம்; நமக்குரிய தத்துவ ஞானம் சைவ சித்தாந்தம். கடவுள் அருளைப் பெறுதலை முன்னிட்டு மக்கள் அனுசரிக்கும் ஆசார அனுட்டானங்களும் பக்தி முறையான வழிபாடுகளும் சமயம் என்ற பெயரில் அடங்கும். கடவுள் உயிர், உலகம் என்ற உண்மைப் பொருள்களைப் பற்றிய அறிவு ஆராய்ச்சியும் விசாரணைகளும் தர்க்க ரீதியான வாதப் பிரதிவாதங்களும் தத்துவஞானம் என்ற பெயரில் அடங்கும். உலகில் மற்றைய மதங்களைப் பொறுத்த வரையில் சமயமும் தத்துவஞானமும் அனைத்து நிலைகளிலும் ஒத்துப்போகும் அமைப்பும் பெரும்பாலும் இல்லை. சைவத்திற்கு இந்தப் பொருந்தாப் போக்கு கிடையாது. ஒரு சிற்றளவு வேற்றுமைகூடக்கிடையாது. சைவசித்தாந்தத்தில் நாம் என்னென்ன பேசுகின்றோமோ அந்தந்தக் கருத்துக்களுக்குச் சமமான அனுசரணை சைவசமய பூஜை முறையில் இருக்கின்றது. எனவே சிலர் கருதுவது போன்ற ஆலய பூஜை முறை தனியாகச் சமயம் என்று ஒதுக்கப்பட முடியாதது. சைவசித்தாந்த நூல்கள் தனியாகத் தத்துவ நூல்கள் என்று ஒதுக்கப்படும் நிலையும் வாராது. பூஜை முறை தத்துவஞானப் பின்னணியில் தான் நடைபெறுகின்றது. தத்துவஞானம் அனுபவப் பூசை அனுசரணையில் பேறாகத்தான் அடையப்படுகிறது. பூஜை காரியங்களுக்குக் கிரியை என்றொரு பெயருண்டு. தத்துவ சாஸ்திர அறிவுக்கு ஞானம் என்ற ஒரு பெயருண்டு. கிரியையும் ஞானமும் கைகோர்த்துத்திளைக்கும் காட்சி சைவாலயத்தில் நிகழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜைக்குரிய தனிப்பெருஞ் சிறப்பாகும். இந்த இணைப்பான நிலையை சிவாச்சாரிய பரம்பரை பேணிவர அறிஞருலகும் அதனை வெகுவாகப் பாராட்டி வருகின்றது. சமயத்திற்குரிய இப் பண்பு மிக உயர்ந்த பண்பாக கணித்துள்ளனர். சைவ ஆலயப் பூஜை முறை எமக்குத் தேடித் தந்த பெருமைகளுள் உயர்வானது இது.

எனவே ஆலயக் கிரியை மரபு ஒழுங்காகப் பேணப்படுவதும் அதனால் உரிய பயன்களைப் பெறுவதும் சைவர்களது பிறப்பின் கடமைகளாக அமைந்து உள்ளன. காலத்தோறும் சிறப்படைந்த ஆலய வழிபாட்டு விதிமுறைகள் தவறாமல் நடைபெற வைக்கவேண்டுமென்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய உண்மையாகும். இதனை உறுதி செய்து ஒழுங்காக நடைமுறைப்படுத்துவதில் சிவாச்சாரியர்களது பங்கு அளப்பரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரச கேசரிப் பிள்ளையார் கோவிலின் பிரதம சிவாசாரி
யாரின் 'பீமரத சாந்தி விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனை வருக்கும் முதற்
கண் ஆலயப்பரிபாலன சபையினர் சார்பாகவும் இப்பிரதேசத்து மக்கள் சார்பாகவும்
நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பீமரத சாந்தி விழாவினை முன்னிட்டு ஆலயத்தில் காலை நிகழ்ந்த நிகழ்வுகளில்
கலந்துகொண்டகோவில் பிரதமகுரு விழா நாயகர் சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள்
மற்றும் சிவாச்சாரியப் பெருமக்கள், குறிப்பாக ''விக்னேஸ்வரப் பிரதிஷ்டா விதி''
நூல் வெளியீட்டில் ஆய்வுரை, முதற்பிரதி, கௌரவப்பிரதிகள் பெற்று ஊக்குவித்த
நீர்வேலிப் பிரதேசத்து சிவாச்சாரியர்களுக்கும் பரிபாலனசபையினர் சார்பாகவும்
எனது சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குருக்கள் அவர்களது குருத்துவப் பணியினைக் கௌரவித்து, ஆலயத்தில் மாலை
பாராட்டு விழாவும் நூல் வெளியீடும் நிகழ்ந்தன. இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டு வேத
ஆசீர்வாதம் செய்த குருமார்கள், ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர்,
மலரின் முதற்பிரதியினைப் பெற்றோர், மலரினைப் பற்றி ஆய்வுரை நிகழ்த்தியவர்,
குருக்களது குருத்துவப் பணியினை நன்கு பாராட்டி பாராட்டுரைகள் வழங்கிய அறி
ஞர்கள், பெரியார்கள், ஆகியோர்கள் அனைவருக்கும் எங்களது உளமார்த்த நன்றிகள்.

நிறைவாக, இம்மலர் நறுமலராத் திகழ ஆசியுரைகள், வாழ்த்துரைகள், பாராட்
டுரைகள், வாழ்த்துப்பா ஆகியன வழங்கிய திருவருட் செல்வர்கட்கும், அடியவர்கட்கும்
சிந்தனைக்கு விருந்தாக அமையும் தரமான பல கட்டுரைகளை வழங்கிய அறிஞர்
பெருமக்களுக்கும், இம்மலர் உருவாக்கத்திற்கு இலைமறைகாய்போல் நின்றுதவிய
உள்ளங்கள் அனைவருக்கும் இம்மலரை மிக அழகுறச் சிறப்பாக அச்சேற்றி உதவிய
ஏழாலை மஹாத்மா அச்சகத்தினருக்கும் எமது பரிபாலன சபையினர் சார்பாக
கரம்கூப்பி நன்றி நவில்கின்றோம்.

வணக்கம்

மா. நடராசா
செயலாளர்,
பரிபாலனசபை.
14-10-97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

University of Jaffna
187288
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org